# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

ஜீலை – 2020

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



visit us: www.pallavipathippakam.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UCG RECOGNIZED JOURNAL**

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

மலர் : 8 | ஜீலை - 2020 | இதழ் : 7



**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavoor.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Treenedi Girls College, Namakkal.*
anuradha.pugal@gmail.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gmail.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பண்ணாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனை குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் கல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anuradha.pugal@gmail.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gmail.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** – காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013-ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : எம்.எஸ். வேர்டில் (MSWord), ல் A4 ஆளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (LiningSpace), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. தனி இதழ் விலை ரூ.300/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 2400/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம் கல்வி நிறுவனங்கள் | - | ரூ. 3000/- |
| வாழ்நாள் கட்டணம் | - | ரூ. 25,000/- |
| புரவலர் கட்டணம் | - | ரூ. 50,000/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**Mobile Banking**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில், ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையதளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. நாட்டுப்புறத் தெய்வ நேர்த்திக் கடன்களில் வாழ்வியல் கூறுகள்

***முனைவர் ம.விஜயகுமார்** - 1

2. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***ஞா.யோசுவா** - 5

3. நந்தவன நாட்களில் தற்குறிப்பேற்ற அணி

***ஜெனிலா.ஜோ** - 9

4. மனித குலத்திற்கு வள்ளுவர் வகுத்த மருத்துவக் குறிப்புகள்

***ஷீஜா.சி** - 11

5. திருக்குறளில் செல்வம்

***முனைவர் அருட்சகோதரி ஜெஸின் பிரான்ஸிஸ்** - 13

6. தமிழிலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

***திருமதி.கு.செ.சரஸ்வதி** - 17

7. சுகிர்தராணியின் இப்படிக்கு ஏவாள் கவிதைத் தொகுப்பில் காணப்படும் பெண்மொழி

***கு.சீதா** - 20

8. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் க.செல்வராணி** - 23

9. புறநானூற்றில் அரசியல்

***செ.கார்குழலி** - 27

10. தோல் புதினத்தில் தொழிலாளர்களின் நிலை

***மா.கவரிமாமொழி** - 31

11. சங்க இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் மு.சங்கரழகு** - 33

12. கொங்கு வேளாளரின் வாழ்வியலில் பொருள்சாரா பண்பாடு

***முனைவர் ந.மணிமேகலை** - 36

13. குறுந்தொகை உணர்த்தும் மாண்பமை மரபுகள்

***மைத்திரிஅன்பு** - 40

14. சங்க இலக்கியமும் புறநானூறும்

***மா.நஜ்மூன்** - 44

15. கச்சிக் கலம்பகத்தில் அகமரபுகள்

***ரா.சஜி** - 47

# நாட்டுப்புறத் தெய்வ நேர்த்திக் கடன்களில் வாழ்வியல் கூறுகள்

***முனைவர் ம.விஜயகுமார்**, உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு.

**முன்னுரை**

மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்ட ஆற்றல் வாய்ந்த சக்தி ஒன்று இருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.அச்சக்தி தெய்வத்தின் சக்தியே என்று இறைநாட்டம் உடையவர்களால் நம்பப்படுகின்றது. மக்களின் இன வேறுபாட்டிற்கு ஏற்பவும் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்பவும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள் மாறுபடுகின்றன.தெய்வத்திற்கு தெய்வம்,இடத்திற்கு இடம், காலத்திற்கு காலம் வழிபாடுகள் மாறுகின்றன. கிராமபுறங்களில் உள்ள தெய்வங்களுக்கான வழிபாடுகள் அம்மக்கள் சார்ந்துள்ள தொழில் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்கிறார்[1] வீ.கோபால் கடினமான வேலை செய்யும் மக்கள் தங்கள் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்ள மதுபானங்களை பருகுகின்றனர்.இந்த மதுபானங்களை வைத்து நாட்டுப்புறத் தெய்வ கோயில்களில் பூசை செய்வதை வழிபாட்டு முறைகளில் காணப்படுகின்றன.

**வழிபாடுகளில் வாழ்வியல் கூறுகள்**

நாட்டுப்புறங்களில் சிறுதெய்வ வழிபாடுகள் மக்களின் பண்பாட்டுச் சிறப்புகளை வெளிப் படுத்துகின்றன. மேலும் வழிபாடு மக்களையும் இறைவனையும் இணைக்கின்ற பாலமாகும். வழிபடுதல் என்னும் இரண்டு சொற்கள்ஒன்று சேர்ந்து வழிபாடாயிற்று என்கிறார்[2] அரு.மருததுரை மக்களின் வாழ்நிலைகள் எல்லாவற்றிலும் கால் கொண்டிருக்கும் பழக்க வழக்கங்களை சிறு தெய்வ வழிபாட்டு மரபுகளில் அறிய முடிகின்றது. தமிழர் வழிபாட்டில் உயிர்ப்பலியிடுதல் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடந்தது என்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன. வேப்பமரம் மாரியம்மனுக்கு உரியகுறியீடாக கொள்ளப் படுகின்றது. அவ்வேப்ப மரத்தடியில் பசுவினைப் பலி கொடுத்து வழிபட்ட நிலையினை

**தெய்வஞ் சேர்ந்த பராரை வேப்பில்**
**கொழுப்பா அறிந்து குருதி தூ உய்ப்**
**புலவுப் புழுக்குண்ட வான்கண் அகலறை**[3]

என்ற அகநானூற்று அடிகள் வாயிலாக உணரமுடிகிறது. நாட்டுப்புற மக்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்துவதாக வழிபாடுகள் அமைந்துள்ளன. வழிபாடுகள் மூலம் நாட்டுப்புற மக்களின் பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்களையும் அறிய முடிகின்றது. நாட்டுபுறத் தெய்வ வழிபாடு மிகத் தொன்மையானது. நோய்கள் நீங்கவும் பிள்ளை வரம் கிடைக்கவும் மக்கள் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர்.

**பொங்கல் வைத்தல்**

நாட்டுப்புறத் தெய்வங்களின் கோயில் முன்னிலையில் திருவிழாக் காலங்களிலும் மற்ற விசே‘ நாட்களிலும் புதிய மண்பானையில்பச்சரிசியால் பொங்குதலை பொங்கல் என்பர். சிறுதெய்வ வழிபாட்டில் ஒவ்வொரு குடும்பத்தினரும் உயிர்பலி கொடுத்து படையிலிடும் வழக்கம் இருப்பதால் தெய்வ விழாவின் பொழுதே பொங்கல் வைப்பர். பொங்கல் வைக்கும் பொழுது பொங்கல் பானை குறையாமல் பச்சரிசியைப் போட்டுப் பொங்க வேண்டும் என்ற வழிபாட்டு மரபு மக்களிடம் காணப்படுகிறது.அவ்வாறு செய்யாமல் அரிசி குறைந்த அளவில் பொங்கல் வைப்பின் குடிவளம் குன்றும் என மக்கள் நம்புகின்றனர் பொங்கல் வைத்த பின் பூசாரி ஒவ்வொரு பானையிலிருந்தும் சிறிது பொங்கலை எடுத்து தெய்வத்தின் முன் வைத்து வழிபாடு செய்கின்றார்.

**மாவிளக்குப் பூசை**

நாட்டுப்புற மக்கள் நிலங்களில் விளையும் பயிர்களை நோய்களிலிருந்து தெய்வம் காப்பதாக கருதுகின்றனர்.தெய்வத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நிலங்களில் விளையும் நவதானியங்களைப் பயன்படுத்தி மாவிளக்குப் பூசை செய்கின்றனர். ‘‘மாவிளக்குப் பூசைகள் பெரும்பாலும் பெண் தெய்வங்களுக்கும் குறிப்பாக மழைத்தரும் கடவுள் மாரியம்மனுக்கு உரியது’’[4] என்று சண்முகசுந்தரம் குறிப்பிடுகின்றார்.நிலங்களில் விளையும் பயிர்களை அறுவடை செய்யும் போது முதலில் தெய்வத்திற்கு என தனியாக எடுத்து வைப்பதே மக்கள் தொன்றுதொட்டு மரபாக பின்பற்றி வருகின்றனர்.

மக்கள் வயல்வேலைகள் முடிந்து ஒய்வாக இருக்கின்ற சித்திரை, கார்த்திகை மாதங்களில் மாவிளக்கு பூசைகள் நடைபெறுகின்றன. ‘‘வயல்களில் விளைந்த நவ தானியங்களான பச்சரிசி, எள், வெல்லம் போன்றவைகளைக் கொண்டு சேர்த்துப் பிசைந்த மாவினைப் பெரிய உருண்டையாக செய்துவைப்பார். இதனைச் சானை என்று அழைக்கின்றனர்’’[5] இந்த மாவினை பித்தாளை உலோகத்தலான ஒரு தட்டில் நடுப்பகுதியில் வைத்து தேங்காய், வாழைப்பழம், சூடம் போன்றவைகளையும் வைக்கின்றனர்.மாவிளக்கின் நடுப்பகுதியில் வேப்பிலையைச் செருகி வைக்கின்றனர். இதனை சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும், ஊர்மக்களும் மேளத்தாளங்களுடன் கோயிலுக்குளெடுத்துச் செல்கின்றனர். கோயில் முன் மாவிளக்கினை இறக்கி வைக்கின்றனர். பூசாரி ஒவ்வொரு தட்டிலும் சிறிதளவு மாவு எடுத்து இறைவன் முன் வைத்து பூசை செய்கின்றார். இறைவனுக்குப் பூசை செய்த மாவினை பூசாரி கோயிலில் உள்ள அனைவருக்கும் கொடுப்பார்.

**கரகம் பாலித்தல்**

மனித வாழ்விற்கு இன்றியமையாத தேவையாக இருப்பது நீர், இந்த நீரினைப் புனிதமாகக் கருதி நாட்டுப்புற மக்கள் வழிபடுகின்றனர். இதனால் கரகம் பாலித்தல் நி-கழ்வினை நீர்நிலைகளில் செய்கின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களில் பெண் தெய்வங்களுக்குக் கரகம் எடுத்தலை மக்கள் வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகப் பின்பற்றி வருகின்றனர்.கரகத்தை நீர் நிலைகனில் உருவாக்கி மீண்டும் அந்நீர் நிலைகளிலேயே விட்டு விடுகின்றனர்[6] என்று குறிப்பிடுகின்றார். நாட்டுபுறங்களில் கரகம் பாலித்தல் மாரியம்மனுக்கு தொடர்புடையதாக கருதபடுகின்றது.

கரகம் பாலிப்பதற்கு மக்கள் அனைவரும் மேளத்தாளங்களுடன் நீர்நிலைகளுக்கு செல்கின்றனர். கரகம் பாலிக்கின்ற இடத்தில் மணல் பரப்பபட்டு அதன் மேல் வண்ணான் வெள்ளை நிறத்துணி விரிக்கின்றார். கோயில் பூசாரி பித்தளைச் சொம்பில் பாதியளவு ஈரம-ணலைப் பரப்புகின்றனர்.சொம்பின் மேற்பகுதியில் பல வகையான மலர்களைச் சுற்றி அலங்காரம் செய்கின்றனர்.பூசாரிக்கு அருள் வரவழைத்து அருள் வந்தவுடன் கரகத்தினைத் தூக்கிக் கொண்டு மேளத்தாளத்தோடு ஊர்சுற்றி வருகிறார். கரகத்தினை மக்கள் வழிபட்டு பூசைகள் முடிந்த பின்னர் கோயிலில் இறக்கி வைத்து விடுகின்றனர்.

**அலகு குத்துதல்**

மனிதனின் விருப்பம் நிறைவேற மனிதன் தன் உயர்வதாகக் கருதுபவற்றை நன்றிக் கடனாக தெய்வத்திற்குச் செலுத்துவதாக வேண்டிக் கொள்கின்றனர். இதன் அடிப்படையில் அலகு குத்துதல் நேர்த்திக் கடனாக மக்கள் தெய்வத்திற்குச் செலுத்தி வருகின்றனர். நாட்டுப் புறங்களில் வாழும் மக்களுக்கு நோய்கள் ஏற்படுகின்ற போது அந்த நோயிலிருந்து என்னை பாதுகாத்து விட்டால் அலகு குத்துகிறேன் என இறைவன் முன் வேண்டுகிறார்கள்.அலகு குத்திக் கொள்பவர் வீட்டில் தீட்டு (பூப்படைதல்,இறப்பு) போன்ற நிகழ்வு ஏற்பட்டால் அலகு குத்துதல் நடைபெறாது.அலகுகுத்திக் கொள்பவர் நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு திருவிழா தொடங்கிய நாளிலிருந்து விரதம் இருப்பர்.அவர்கள் வீட்டின்முன் வேப்பிலையை செருகி வைப்பார்கள்.இதனைப் பார்த்தவுடன் தீட்டு உடையவர்கள் வீட்டில் நுழைய மாட்டார்கள்.அலகு குத்தும் கம்பியை வீட்டில் இறைவன்முன் வைத்து தினமும் பூசை செய்து வருகின்றனர்.இப்படி தினமும் பூசை செய்வதல் அலகு குத்தும் கம்பியை தீய சக்திகள் நெருங்காது என நம்புகின்றனர்.

**மாவிளக்குப் போடுதல்**

நெய் அல்லது நல்லெண்ணெயில் விளக்கேற்றி வைத்து அத்தீபத்தின் ஒளியில் தெய்வத்தை வழிப்படுவது வழிப்பாடுகளில் மரபாக இருந்து வருகின்றது.விளக்கின் ஒளி இருளை நீக்கி ஒளியை கொடுப்பதுபோல வாழ்வின் துன்பம் நீங்கி வளமான வாழ்வு பெறுவதற்கு விளக்கு ஏற்றி தெய்வத்தை வழிபடும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.அம்மை நோய்,வயிற்றுவலி,கண்வலி,நெஞ்சுவலி ஆகியவற்றால் பாதிக்கப்படும் பொழுது அந்நோய்கள்

நீங்க தெய்வத்திடம் வேண்டுகின்றனர்.அந்நோய் குணம் அடைந்துவிட்டால் மாவிளக்கு எடுப்பதாக இறைவனிடம் நேர்ந்து கொள்கின்றனர்.

நோய் குணம் அடைந்தபின் விழாகாலத்தில் நேர்த்திகடனை செலுத்துகின்றனர். வயிறு, கண், மார்பு போன்ற இடங்களில் வாழைஇலைகளில் இனிப்பு கலந்த மாவினை உருண்டையாக வைத்து அதன் நடுவில் ஒருக்குழிச் செய்து அக்குழியில் எண்ணெய் அல்லது நெய் ஊற்றி திரி வைத்து விளக்கேற்றி பூசை செய்து தெய்வத்தை வழிப்படுகின்றனர். மாவிளக்குபோட்ட மாவினை வீட்டிற்கு எடுத்து வருவது கிடையாது.அந்த மாவினை கோவிலில் உள்ளவர்களுக்கு வழங்குகின்றனர். இந்தநேர்த்திக்கடன் பெண் தெய்வ வழிப்பாடுகளில் காணப்படுகின்றது.

**முடி இறக்குதல்**

குழந்தைகள் பிறந்தவுடன் குல தெய்வங்களுக்கு முடி எடுக்கப்படுவதை நாட்டுபுற மக்கள் நேர்த்திக் கடன்களில் காண முடிகின்றது.திருமணமாகி வெகு நாட்கள் குழந்தை இல்லாமல் இருந்தாலும் குழந்நை பிறந்தவுடன் தீய சக்திகளிடமிருந்து குழந்தைகளை பாதுகாக்கவும் நாட்டுபுற மக்கள் அவர்களுடைய குழதெய்வங்களுக்கு குழந்தையின் முடியை நேர்த்திக் கடனாக செலுத்துகின்றனர்.

''குறவை மறந்தாலும் குழ தெய்வத்தை மறவேன்
குழத்தெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி''[6]

என்ற பாடல் வரிகள் மூலம் குழதெய்வத்தின் சிறப்பினை அறிய முடிகின்றது. குழந்தைகளுக்கு முதலில் குலதெய்வக்கோவில்களில் முடி இறக்கிய பிறகுதான் மற்ற தெய்வங்களுக்கு முடி இறக்குகின்றனர்.மேலும் சிறியவர் மட்டுமன்றி பெரியவர்களும் வேண்டு தலுக்காக முடி இறக்குகின்றனர்.நாட்டுபுறங்களில் குழந்தைகளுக்கு முடி இறக்குவதை ஒரு பெறும் விழாவாகக் கொண்டாடுகின்றனர்.ஆண்,பெண் தெய்வங்களுக்கு முடியினை நேர்த்திக் கடனாக செலுத்துகின்றனர்.குல தெய்வங்களுக்கு முடி இறக்கும் போது கிடாய்,கோழி போன்ற உயிரினங்கள் பழியிடுவதைக் காண முடிகின்றது.பெண்களுக்கு பூ முடி எடுத்தல் என்ற மரபும் இருந்து வருவதை அறிய முடிகின்றது.

**தீச்சட்டி எடுத்தல்**

தெய்வத்தின் சினத்தால் அம்மைநோய் ஏற்படுவதாக நாட்டுபுற மக்கள் நம்புகின்றனர். வயிற்றம்மை, சுரக்காய் அம்மை,ஒத்தம்மை,சின்னம்மை,பெரியம்மை போன்ற நோய்கள் நீங்கினால் தெய்வத்தின் சினம் தனிந்து விட்டதாக கருதுகின்றனர்.மாரியம்மனின் சினம் தணிந்து நோய் நீங்கிவிட்டால் நோயாளியோ அல்லது நோயாளிக்காக நேர்ந்து கொண்டவரோ திருவிழாக் காலங்களில் அகன்றவாய் அமைப்புடைய புதிய மண் கலயத்தில் நெருப்புண்டாக்குவர். அந்நெருப்பில் மரத்தூள்களைப் போட்டு எண்ணெய் ஊற்றி எறிய வைக்கின்றனர். மஞ்சல் நிற ஆடையினை உடுத்தி கோவில் முன் நிற்க வைத்து அருள் வரவழைத்து அருள் வந்தவுடன் தீச்சட்டியினை பூசாரி கையில் கொடுப்பார்.தீச்சட்டியினை கையில் ஏந்திக் கொண்டு ஊர் முழுவதும் சுற்றி வந்த பிறகு கோவிலில் வைக்கின்றனர்.

**காதோலை கருகமணி**

நாட்டுப்புறத் தெய்வ நேர்த்திக் கடன்களில் காதோலைக் கருகமணி சிறப்பிடம் பெறுகின்றது.சிறிய பணை ஓலையினை வட்டமாக வைத்து அதில் கருப்பு வளையலைச் சேர்த்து கட்டி வைத்திருப்பர்.இதனை காதோலை கருகமணி என்று அழைக்கின்றனர். காதோலை கருகமணி பெண் தெய்வங்களுக்கு மட்டுமே உரியது என்கிறார்கள்.கோவில்களில் பூசைப் பொருள்களுடன் காதோலை கருகமணியையும் வைத்து தெய்வத்தின்முன் பூசை செய்கின்றனர்.பூசை முடிந்த பின்னர் காதோலை கருகமணியை எடுத்து தெய்வத்தின் கைகள-ில் அல்லது அருகிலிருக்கும் மரக்கிளைகளில் தொங்க விடுகின்றனர்.

இறந்தவர்களை தெய்வமாக நினைக்கும் போது அவர்கள் பயன்படுத்தும் பொருட்களையும் உயர்வாகக் கருதுகின்றனர்.இதன் விளைவாக தான் காதோலை கருகமணியை நேர்த்திக்கடனாக நாட்டுப்புற தெய்வங்களுக்கு செலுத்துகின்றனர். கன்னிமார், கவுண்டம்மாள் போன்ற பெண் தெய்வங்களுக்கு காதோலை கருகமணியைப் பூசையில் பயன்படுத்துகின்றனர்.இதன் மூலம் இறந்தவர்களை குலதெய்வமாக வழிபடும் முறைகள் நாட்டுப்புறங்களில் மரபுவழியாக இருப்பதை அறிய முடிகின்றது.நாட்டுபுற மக்கள் எந்தவொரு தொழிலைச் செய்யும்போது குல தெய்வத்தை மனதில் நினைத்துக் கொள்வதை அறியலாம்.

**முளைப்பாரி எடுத்தல்**

நாட்டுப்புறங்களில் முளைப்பாரி எடுத்தல் என்னும் வளமை சடங்கு பெண் தெய்வங்களுக்கு நடைப்பெறுகின்றது.திருவிழா தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்

நவதாணியங்களைக் கொண்டு முளைப்பாரி இடுகின்றனர்.பெண்கள் மட்டுமே இச்சடங்குகளில் கலந்துக் கொள்கின்றனர். முளைப்பாரி இட்ட நாளிலிருந்து தினமும் தூய்மை நிறைந்த தண்மையுடன் பெண்கள் முளைப்பாரிக்கு தண்ணீர் ஊற்றி வளர்க்கின்றனர்.திருவிழாவின் கடைசி நாளான அன்று பெண்கள் மஞ்சல் நிற ஆடையினை அணிந்துக்கொண்டு மேளத் தாளங்களுடன் கோவிலுக்கு எடுத்துச் செல்கின்றனர்.கோவிலில் பூசைகள் முடிந்த பின்னர் கரகம் கரைக்கப்படுகின்ற நீர் நிலைகளிலேயே முளைப்பாரியையும் இடுகின்றனர்.முளைப்பாரி நன்கு வளர்ச்சிப்பெற்றிருந்தால் குடும்பம்தழைக்கும் என நம்புகின்றனர்.பெண்களுக்கு திருமணம் வானத்தில் மழை வேண்டியும் நேர்த்திக்கடனாக இச்சடங்கினை நாட்டுப்புற மக்கள் செய்கின்றனர்.

**ஆலய மணிக்கட்டுதல்**

நாட்டுப்புறங்களில் ஆண், பெண் தெய்வங்களுக்கு ஆலயங்களில் மணிக்கட்டுதல் என்னும் நேர்த்திக்கடன் சடங்குகளைச் செய்கின்றனர்.குழந்தை இல்லாத பெண்கள்,கர்ப்பமாக இருக்கும் பெண்கள் வயிற்றில் ஏதாவது தொந்தரவு ஏற்பட்டால் ஆலயங்களில் மணிக் கட்டுவதாக வேண்டிக்கொள்கின்றனர்.குழந்தை பிறந்து ஆறுமாதம் அல்லது ஒரு வருடத்திற்கு பிறகு இச்சடங்கினை செய்கின்றனர்.திருவிழா மற்றும் விசே‘ நாட்களில் புதிய மணி ஒன்றினை வாங்கி கோயிலில் வைத்து பூசைகள் செய்து மணியினை எடுத்து கோயிலில் கட்டி விடுகின்றனர். முதல் மணியினை நேர்த்திக் கடன் செலுத்தியவர்கள் அடிக்கின்றனர். ஆலய மணிகளில் நேர்த்திக் கடன் செலுத்தியவர்களின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை காண முடிகின்றது.

**முடிவுரை**

நாட்டுப்புற மக்கள் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும் நோய் நொடிகளுக்கும் நாட்டுப்புற தெய்வங்களையே காரணம் என தஞ்சமடைகின்றனர். இதனால் திருவிழாக் காலங்களில் தங்களுடைய நேர்த்திக் கடன் சடங்குகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். சடங்குகளை நிகழ்த்துவதில் உயர்வு தாழ்வின்றி அனைவரும் ஒரே தன்மையில் நிகழ்த்துவதால் ஏற்றத் தாழ்வுகள் சடங்குமுறைகளால் களையப் பெறுகின்றன என்பதை அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. வீ.கோபால், நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள்,ப.72
2. கழக வெளியீடு, அகநானூறு, பா.எ.309
3. முனைவர் அரு.மருததுரை, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள், ப.18
4. முனைவர் சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், ப.164
5. ஆ.கருப்பாயி, நாட்டுப்புற சிறு தெய்வ வழிபாடு, ப.117
6. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.225
7. நேர்க்காணல், கு.அருக்காணி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***ஞா.யோசுவா,** உதவிப்பேராசிரியர், என்.பி.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நத்தம்.

**முன்னுரை**

**"கற்றலின் ஆயினும் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை"** (குறள்-414)

மனித வாழ்வில் தனக்குத் தெரியாத ஒரு தகவலை தெரிந்த (அ) நன்கு அறிந்த ஒருவரிடம் கேட்டு தெரிந்து கொள்வது சிறந்த அறிவாகும்.

**"தண்டமிழே தன்னிகர் இல்லா தவமே**
**தச்சன் தந்த தாண்டவமே**
**இவ்வுலக இன்பமே**
**வாழ்வில் கிடைத்த இன்பமே**
**கூறவோ உன் மகிமை**
**வாழ்வியலில் நீ உண்டு**
**சீறி வரும் சிந்தனை**
**அதிலும் நீ உண்டு"**

நாம் அறியவிருக்கும் தலைப்பு தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனை இலக்கியம் என்பதும், வாழ்வியல் என்பதும் ஒன்றோடொன்று இணைந்தது ஆகும். இவை இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டைக்குழந்தை போன்றது. அவற்றில் சிந்தனை என்னும் தேன் துளியை அறிவது ஆகும். இப்போது இலக்கியம் என்றால் என்ன? என்பதை அறிவோம்.

சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் கிருஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுப்பிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பலதரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும் நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளை படம் பிடித்துக்காட்டுவதாய் உள்ளன. பண்டைத்தமிழரது காதல், வீரம், போர்,ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் அறியத் தருகின்றன. 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர், ஆகியோரது முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன. சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பெரும் பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும், நன்றும், பிறர்தர வாரா**
**நோதலும், தணிதலும் அவற்றோர் அன்ன**
**சாதலும், புதுவதும் அன்றே! வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே...** (புறம்-192)

**புறநானூற்றில் வாழ்வியல் சிந்தனைகள்**

பண்டையத் தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும், பழக்க வழக்கத்தையும் உணர்த்துபவை சங்க இலக்கியங்களே இவை மனித வாழ்க்கையினை அகம், புறம், என்ற இரு கூறுகளாக்கி விளக்குகின்றன. அவற்றினை பாட்டு, தொகை என்றும், பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்றும் கூறுவர். எட்டுத்தொகையில் ஒரு நூலான புறநானூறு காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் இன்றைய வாழ்வியலோடு ஒப்பிட்டு ஆராயப்பெறுகின்றன. இவையே அவற்றின் மேற்கோள்கள்.

வாழ்வியல் கூறுகள் போர், அறம், கொடுத்துப் பெறுதல் செய்யும் செயல்கள் எல்லோருக்கும் முடிந்தவை, செய்நன்றி மறவாமை இவ்வாறு புறநானூற்றில் வாழ்வியலின் இனிமையை தெளிவாகக் கூறியுள்ளனர்.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே".**

**குறுந்தொகை**

தலைவன் தலைவியைப்பார்த்தது முதல் அவள் நினைவாகவே இருப்பதும் இதனைக் கண்ட பாங்கன் இவ்வாறு இருப்பது நல்லதல்ல என்று இடித்துரைப்பதும் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.இதனை சங்கஇலக்கியம் கழுறுதல் என்று பேசுகிறது.அதற்குத் தலைவன் பதில் கூறும் விதமாகவும், பாடல்கள் அமைகின்றன. இச்சூழல் கழுறிய பாங்கனுக்குத் தலைவன் கூறுவது என்று சங்க இலக்கியத்தில் சுட்டப்படுகிறது.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"** (3)

தலைவியை விட்டு தலைவன் பிரிந்து செல்கிறான். அவன் வரவை எண்ணி வாடுகிறாள். அங்கு மரத்தில் உள்ள பறவைகள் மலையில்தன் கூட்டிற்கு திரும்புவதை கண்டு வாடுகிறாள்.

**"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**
**அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை**
**இறையுற தாமே கொடுஞ்சிறைப் பறவை**
**இறையுற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இறைகொண் டமையின் விரையுமாற் செலவே"** (9)

திருமணமான புதிதில் தலைவி தலைவனுக்கு சமைத்து கொடுக்கிறாள். அவள் சமைத்த சமையல் சரியில்லாமல் இருந்தாலும் , அவள் மனம் புண்படக் கூடாது என்று எண்ணி அவள் செய்த சமையல் இனிது, இனிது என வாழ்த்தினான். இவ்வாறு தலைவன் , தலைவி , இல்லற வாழ்வியலின் உடல், மனம் போன்ற அனைத்தையும் பற்றி தெளிவாகக் கூறியுள்ளது குறுந்தொகைப் பாடல்.

**நற்றினையில் தமிழரின் பண்பாடுகள்**

தமிழர் பண்பாடுகளில் தலைசிறந்த பண்பாகக் கருதப்படுவது விருந்தோம்பல். உறவினர்கள், நண்பர்கள் இன்றி தன் வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கு உணவிட்டு மகிழ்வதையே விருந்தோம்பல் பண்பாகக் கொண்டனர். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறுகையில்,

**"விருந்து புறந்தருதலும் அற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோன் மாண்புகள்"** (தொல்.கற்.11 )

என்ற நூற்பாவில் விருந்தோம்பல் பண்பாட்டைக் கூறுகிறார். இல்லறத்தில் கணவனும், மனைவியும் இணைந்து ஆற்றவேண்டிய அறம் விருந்தோம்பலாகும். இல்வாழ்க்கை நடத்தும் கணவனும், மனைவியும் தம் உற்றார், உறவினர்களைக் காக்க கடமைபட்டவர், திருவள்ளுவர் விருந்தோம்பலுக்கென்றே ஒரு தனி அதிகாரம் வைத்துள்ளார். தமிழர்கள் விருந்தோம்பல் பண்பில் தலைசிறந்தவர்கள் என்பதைச் சங்க இலக்கியம் விளக்குகின்றன. அதனடிப்படையில் பண்பினை இக்கட்டுரை விளக்குகிறது.

**"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**
**வீடில்லை நட்பாள் பவர்க்கு."**

தலைவன் தன் காதலியை அவன் வீட்டுக்கு அருகே உள்ள ஒரு புன்னை மரத்தடியில் சந்தித்தான். அந்தமரத்தின் வரலாறு குறித்து கேட்கும் போது தலைவி இதை என் தங்கையாக எண்ணி வளர்க்கிறேன். இவ்வாறு மரம், செடி, கொடிகளை தன் உறவாக எண்ணி வளர்த்தனர் என்று அறியலாம். இவ்வாறு நற்றிணையில் இல்லறவியலைப் பற்றி இனிமையாகக் கூறுகிறது.

**அகநானூற்றில் சங்ககால மக்களின் பழக்கவழக்கங்கள்**

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் மரபையும் பண்பாட்டினையும், கலாச்சாரத்தையும், வெளிக்காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன. அகமாக இருந்தாலும், புறமாக இருந்தாலும்

அதற்குறிய நெறிகளையும், மரபுகளையும் இன்றைய சமூகத்திற்கு எடுத்தியம்புவனவாக இருப்பவை சங்க இலக்கியமாகும்.

**"முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு**
**பைங்காற் கொன்றே மென்பிணி அவிழ**
**இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பில்**
**பரலவல் அடைய இரவை தெறிப்ப**
**மலர்ந்த ஞாலம் புலம்பு புறக் கொடுப்பக்**
**கருவி வானம் கதமுறை சிதறிக்**
**கார்செய் தன்றே கவின்பெறு கானம்...**

தேரில் வரும் மன்னவன் தான் வரும் பாதையில் உள்ள பூக்களின் மேல் உள்ள வண்டுகள் அஞ்சி ஓடக் கூடாது என்று மணிகளை இறுகக்கட்டி வருவானாம் , இதை இனிமையாக கூறியுள்ளார்.

**பொருநர் ஆற்றுப் படையில் வாழ்வில் சிந்தனைகள்**

**"ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"** (21-22)

பொருநனுடன் பாடினியின் அழகு, தலைமுடிமுதல் பாதம் வரை 19-உறுப்புகள் கேசாதி பாதமாக வருணிக்கப்படுகிறது. அரசனின் விருந்தோம்பல்பண்பு இந்நூலில் சிறப்பாக கூறப்படுகிறது. கரிகால் சோழனின் இளமை, போர் வெற்றி, வீரம், கொடை, நாட்டின் சிறப்பு, காவிரியின் சிறப்பு நன்கு புனையப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ்மக்களின் விருந்தோம்பல் பண்பைப் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**ஐந்திணைகளின் வாழ்வியல் சிறப்பு**

**"படுகண் முரசம் காலை இயம்ப**
**வெடிபடக் கடந்து வேண்டு புலத்து இறுத்த**
**பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்**
**கரைபொரு திரங்கும் கனையிரு முந்நீத்**
**திரையிடு மணலினும் பலரே உரைசெல**
**மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே"** (232-237)

மருதம், முல்லை, குறிஞ்சி,பாலை, நெய்தல் என ஐந்திணைகளும் நிலவளமும் மக்களின் வாழ்வு முறையும் இங்கு மிகச்சிறப்பாக உள்ளது. மதுரையின் சிறப்பு, அங்கு நடக்கும் வாணிபம், திருவிழா, பரத்தையர் வாழ்வு, இரவு களநிலை! விடியற்காலை நிகழ்வு போன்ற அனைத்தும் விரிவாகவே கூறப்பட்டுள்ளது. இவை மதுரைக் காஞ்சி இல்லறவியல் நிகழ்வாகும்.

**பண்டையகால மக்களின் வணிகம்**

பட்டினப்பாலை என்பது பத்துப்பாட்டில் உள்ள மற்றொரு அகப்பாடல் (காதல் துறை பற்றி அமைந்த கற்பனைப் பாட்டு) தமிழ் நாட்டின் பழங்கால பெருமைக்கு ஒரு நற்சான்றாக அமைந்துள்ளது. துறைமுகத்தில் ஏற்றுமதியாகும் பண்டங்கள் பற்றிய விளக்கம், கடல் வாணிகம், துறைமுகச்சிறப்பு, வளம் பெற்றிருந்த பலவகைத் தொழில்கள் இவை அனைத்தும் பற்றி கூறுவது பட்டினப்பாலை.

**"கொள்வதூஉம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல்பண்டம் பகிர்ந்து வீசும்"**

பண்டங்களை விற்பவர்கள் வெவ்வேறு பண்டங்களுக்கு அடையாளமாக வெவ்வேறு கொடிகளை கடைகளில் பறக்க விட்டனர் என்ற செய்தியும் கற்று அறிந்த அறிஞர்களின் வாதங்கள் அரங்குகளில் நடந்தபோது அவர்கள் தங்களுக்குரிய வெவ்வேறு கொடிகளை ஏற்றி வந்தனர் என்ற செய்தியும், அறியப்படுகின்றன. இவை பட்டினப்பாலை வழியாக சிறப்பாக நாம் அறியலாம்.

**சங்ககால மக்களின் இறையுணர்வு**

**"மல்லர்க் கடந்தான் நிறம் போன்று இருண்டெழுந்து**
**செய்வக் கடம்பமர்ந்தான் வேல் மின்னி- நல்லாய்**
**இயங்கெயில் எய்தவன் தார்பூப்ப ஈதோ**
**மயங்கி வலனேருங் கார். "**

திருமால் நிறம்போல் கருத்தெழுந்து முருகன் வேல்போல் மின்னி, சிவன் மலையாகிய கொன்றைப் பூக்கள் மலர மேகம் எழுந்தது என்று கற்பனை செய்வதிலிருந்து இவரின் சமயப் பொதுமையுணர்வை அறியலாம். இவ்வாறு ஐந்திணை ஐம்பது கூறுகிறது.

**"சுனைவாய்ச் சிறு நீரை எய்தாதென்று என்னிப்**
**பிணைமான் இனிதுண்ண வேண்டிக்-கலைமாத்தன்**
**கள்ளத்தின் ஊச்சம் சுரம் என்பர்-காதலர்**
**உள்ளம் படர்ந்த நெறி"** (328)

இந்நூல் கி.பி நான்காம் நூற்றாண்டை சேர்ந்தது காதல் உணர்வை நுட்பமாக வெளிப்படுத்துகிறது.

**தலைவன் தலைவி அன்பின் சிறப்பு**

**"யாழுங் குழலும் முழவும் இயைந்தென**
**வீழும் அருவி வியன்மலை நன்னாட!**
**மாழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவரின்**
**ஊரறி கௌவை தரும்"** (பா.7)

தலைவனை இரவில் வரவேண்டாமென வற்புறுத்தும் தோழி மற்றும் அருவியின் ஓசையை வருணிக்கும் அழகு குறிப்பிடத்தக்கது.

**தொல்காப்பியத்தில் வாழ்வியல் சிந்தனை**

**ஆணுக்கு அழகு**

**"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"** (தொல்.1041)

பெருந்தன்மையும் உள்ளத்திண்மையும் ஆண்மகன் மேலதாகும். என்பதை தொல்காப்பியம் சிறப்புற கூறுகிறது.

**பெண்ணுக்கு அழகு**

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"** (தொல்.1042)

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவை அனைத்தும் பெண்களுக்கு உரிய தலையாய சிறந்த பண்பாகும்.

**முடிவுரை**

எட்டுத்தொகை நூல்களின் புறநானூறு நமது பண்பாட்டைப் பற்றி கூறுகிறது. தமிழ் இலக்கியங்கள் பலவும் வாழ்வியல் பற்றிய சிந்தனைகளை மிகத் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. பண்பாட்டைப் பற்றி கூறுகிறது. குறுந்தொகையில் மூட நம்பிக்கைகளை கலைந்து வெளிச்ச வாழ்விற்கு வர உதவும் கருத்துக்களாக உள்ளன. மேலும் நற்றினை மற்றும் பொருநராற்றுப்படையும் நம்முன்னோர்கள் கடைப்பிடித்த விருந்தோம்பல் பண்பை விளக்குகிறது. மதுரை மக்களின் வாழ்வு முறையைப் பற்றி கூறும் இலக்கியமாக விளங்குகிறது. பட்டினப்பாலை காதல் வாழ்வு பற்றி கூறும் நூல். ஐந்திணை ஐம்பது மக்களின் சமய உணர்வை விளக்குவதாக திகழ்கிறது. ஐந்திணை ஐம்பதில் தலைவன், தலைவி, தோழி மூவருக்கும் இடையே உள்ள உறவு முறைகளைப் பற்றியும் தோழி கூறும் செய்திகள் பற்றியும் கூறுகிறது. தொல்காப்பியம் ஆண்மகனின் அழகான வீரத்தையும், பெண்ணின் அழகான நாணம் பற்றியும் எடுத்துரைக்கிறது. தமிழ் இலக்கிய வாழ்வியல் சிந்தனைகளை தெளிவாகவும் உவமைகளுடனும் பாடல்களுடனும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது.

**"தமிழுக்கு இணை தமிழே"**

# நந்தவன நாட்களில் தற்குறிப்பேற்ற அணி

***ஜெனிலா.ஜோ.** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்.

தமிழ் கவிதை வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்திய கவிஞர் மு. மேத்தா 1945-இல் பெரியகுளத்தில் பிறந்து சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். உவமை, உருவகங்களால் பழமையையும் புதுமையையும் இணைத்த இவர் வளமான கற்பனை, எளியநடை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என இலக்கிய வளத்தை செழிப்படையச் செய்த கவிஞர் மு. மேத்தா திரையிசைத் துறையிலும் தனது தடத்தைப் பதித்தவர். தமிழ் மொழிக்காகவும் தமிழ் இனத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுக்கும் போராளி. இக்கட்டுரை நந்தவன நாட்கள் என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள தற்குறிப்பேற்ற அணி சிலவற்றை ஆராய்வதாக உள்ளது.

**அணி**

கவிதைக்கு அழகூட்டுவது அணி ஆகும். கவிஞர் தாம் கூற கருதிய கருத்தை அணிநயச் சிறப்போடு பொருத்திக் காட்டும் போது படிப்பவர் மனதில் கவிதையும் கருத்தும் பதிந்து மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கவிதையின் பொருளை, கவிஞரின் கருத்தைத் தெளிவாக்குவனவாக அணிகள் அமைகின்றன.

**தற்குறிப்பேற்ற அணி**

உவமையினின்று தோன்றிய பல அணிகளில் ஒன்று தற்குறிப்பேற்ற அணி. இவ்வணியில் கவிஞன் உவமையாகப் பொருந்துவனவற்றை ஒருசேரக் கூறித் தன் கற்பனையை அவற்றின் மீது ஏற்றிக் கூறுகின்றான். தொல்காப்பியர் உவமவியலில் தற்குறிப்பேற்ற உவமை என்று தனியாகப் பிரித்துக் கூறவில்லை. பிற்காலத்தில் தோன்றிய தண்டியலங்காரம் குறிப்பிடும் பொருளணிகள் 35 இல் 12 ஆவது அணியாக தற்குறிப்பேற்ற அணி இடம்பெற்றுள்ளது.

**"பெயர் பொருள் அல்பொருள் என இருபொருளினும்**
**இயல்பின் விளைதிறன் அன்றி அயலொன்று**
**தான் குறித்து ஏற்றல் தற்குறிப்பேற்றம்".**

பெயர்பொருள், பெயராத பொருள் என்னும் இரு பொருள்களிலும் இயல்பாக நிகழும் ஒன்றின் மீது இன்னொன்றைக் கவிஞன் தான் குறித்து ஏற்றினால் அது தற்குறிப்பேற்றம் ஆகும்.

**தற்குறிப்பேற்ற அணியின் சொல்லுருபுகள்**

**"அன்ன போலெனு மனவழுதலாகிய**
**சொன்னிலை விளக்குந் தோற்றமு முடைத்தே"**

'அன்ன', 'போல' முதலிய உவமைச் சொல் சில புணர்ந்து விளங்கும் தன்மையும் உடையது என்கிறார். எந்தெந்த உவமைச் சொல் பெற்றுவரும் என்று கூறவில்லையாயினும் சொல்லுருபு பெற்றுவரும் தன்மையுடையது என்பதை விளக்கியுள்ளார்.

**நந்தவன நாட்களில் தற்குறிப்பேற்ற அணி**

மனித வாழ்வின் உள்உணர்வினை உணர்த்துவதில் இயற்கை பெரும்பங்கு வகிக்கின்றது. இயற்கைப் பொருள்களையும் இயற்கை நிகழ்வுகளையும் மனிதனின் செயல்பாடுகளுடனும் உணர்வுகளுடனும் இயைபுபடுத்துவதால் பல அரிய வாழ்வியல் உண்மைகளை உலக மக்கள் அறிந்து கொள்ள முடிகின்றது. கவிஞர்கள் இதனை நன்குணர்ந்து தத்தம் படைப்புகளில் இயற்கையைப் பொருள் விளக்க உத்தியாகப் பயன்படுத்துகின்றனர். கவிஞர் மேத்தாவும் அவ்வாறே பயன்படுத்தியுள்ளார்.

**காற்று**

காற்று வீசுவது என்பது இயல்பாக நிகழும் ஒன்று. காற்றின் மீது கவிஞன் தன் குறிப்பைப் பல பாடல்களில் இயற்றிக் கூறுவதைக் காணமுடிகின்றது. சாலைகள் அமைதியாக இருக்க குளிர்காற்று வீசுவதை,

**“சாலைகள் எதுவும்**
**சத்தம் செய்யாமல்**
**மௌனத் தூக்க**
**மயக்கத்தில் கிடக்க**
**இடையிடையே**
**குளிர்காற்று மட்டும்**
**கொட்டாவி விட்டது!**

என்று குறிப்பிடுகின்றார்.

ஆகாய தேவதை பூமியின் பாடகன் என்ற கவிதையில்

**“எந்த எஜமானியின்**
**கட்டளைக்குக் கட்டுப்பட்டு**
**கவிஞனை**
**கவனிப்பதற்காக**
**காற்று**
**தன் கைகளில்**
**கவரி ஏந்தியுள்ளது?”**

என்கிறார். காற்று தன் கையால் எஜமானியின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு கவிஞனைக் கவனிப்பதற்காக கவரி ஏந்தியுள்ளது என்றுக் கூறியது சிறந்த தற்குறிப்பேற்றமாகும். மேலும், காற்றோடு கைகுலுக்கியிருக்கிறேன், அதனால்தான் அவை எனது கவிதைகளை உன் காதுகளுக்குக் கொண்டு வருகின்றன என்று வெளிப்படுத்துகின்றார்.

**கதவுகள்**

காற்றில் கதவுகள் அடிப்பது என்பது இயல்பு. கவிஞர் தன் குறிப்பை ஏற்றி குறிப்பிடும் போது தேர்வு நேரம் கடந்துக் கொண்டிருக்கிறது என்று கர்ஜனை செய்ததாக குறிப்பிடுகின்றார்.

இதனை,

**“தேர்வு நேரம்**
**கடந்து கொண்டிருக்கிறதென்று**
**கர்ஜனை செய்தன**
**காற்றில் அடித்துக் கொண்டிருந்த**
**கதவுகள்”**

என்பதன் மூலம் அறியமுடிகின்றது.

**செவி**

ஒருவரின் வருகையை எதிர்பார்த்து இருக்கும் பெண்ணின் நிலையைக் குறிப்பிடும் போது,

**“செவிகளின் கதவுகள்**
**திறந்து கிடந்தன**
**உன்னுடைய**
**செருப்புகளின் ஓசை**
**உள்ளே நுழைவதற்காகத்**
**தையல் ஒருத்தி**
**தவம் செய்து கொண்டிருந்தாள்”**

என்று தன்குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார்.

**முடிவுரை**

உலகில் பலவகையானப் பொருட்கள் இருந்தும் கவிஞரின் மனம் ஒரு சில நி-கழ்ச்சியின் மீது ஆழப்பதிந்து அதன் அசைவுகள், நிகழ்ச்சிகள் மூலம் தன் கருத்தினை மக்களுக்கு வெளிப்படுத்துகின்றன. அவ்வாறு கவிஞனால் பெரிதும் போற்றிக் கையாளப்பட்ட தற்குறிப்பேற்ற அணி கவிஞனின் வளமான கற்பனைக்கு உரமாக நிற்பதோடு அவன் குரலாகவும் சிந்தனையாகவும் மிளிர்கின்றது எனலாம்.

# மனித குலத்திற்கு வள்ளுவர் வகுத்த மருத்துவக் குறிப்புகள்

*ஷீஜா.சி, ஆய்வாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

**முன்னுரை**

பண்டைத் தமிழரின் மருத்துவம் பற்றிய சிந்தனைகள் இக்காலத்திற்கும் ஏற்றதொன்றாகவே உள்ளது. மருத்துவம் என்பது பரிகாரம் என்பதை உள்ளடக்கிய சொல். நோய் என்ற சொல் வியாதி, துன்பம், வலி முதலிய பொருள்களைக் கொண்டது. மனிதனுக்கு வரும் நோய்கள் பல. அவற்றை உளநோய், உடல் நோய் என்ற கூறுகளாகப் பிரிக்கலாம். தொற்று நோய், தூய்மையின்மை, தவறான பழக்க முறைகள், உணவு முறைகள் குறைபாடு போன்றவைகளால் வருவது உடல் நோய். கவலை, ஏமாற்றம், அமைதியின்மை, சினம் போன்றவைகளால் உளநோய் உண்டாகிறது. மருத்துவ பாதுகாப்பிற்கு வளர்ச்சியடைந்த நாடுகள் கூட வலியுறுத்தும் கூறுகளுள் ஒன்று உணவுமுறை. மனிதனுக்கு உண்டாகும் உடல்நோய்களுக்கு ஆதாரமாக இருப்பது உணவு முறைகளில் நாம் அக்கறை கொள்ளாதது தான். இந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் ஆழமான ஆய்வுப் புலத்துடன் தற்கால அறிவியல் கருத்துகளுக்குயொத்தவாறு கூறியுள்ளார். இதனைப் பற்றி காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நோயும், உணவும்**

மனித குல வாழ்வியலை வரையறுத்த வள்ளுவத்தின் நோக்கங்களுள் ஒன்று நோயற்ற சமுதாயம் அமைய வேண்டுமென்பது ஆகும். அத்தகைய நோய் ஏற்பட பசியும் காரணமாக இருக்கின்றதால் அப்பசிப்பிணியை அகற்றினால் போதும், நோயை போக்க நாட்டில் விளைவைப் பெருக்கி செல்வத்தை மிகுதியாக்க வேண்டும். இதற்கு விளைச்சல் ஒன்றே பசி, பிணி என்றிரு நோய்களை அழிப்பவை என்பதை,

> **“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையுஞ்**
> **சேரா தியல்வது நாடு”** (குறள். 734)

என்று கூறிய வள்ளுவர், உணவை உண்ணும் முறைபற்றியும் கூறுகிறார். ஒரு நாளைக்கு எத்தனை அளவு உணவு தேவையோ அதை விடுத்து மிகுதியாக உண்டால் முதுமை போன்ற நோய் இளமையிலேயே வரும். இதனை நமது முன்னோர்கள் ஒரு நாளைக்கு ஒரு முறை உண்பவன் யோகி, இரு முறை உண்பவன் போகி, மூன்று முறை உண்பவன் ரோகி என்று வரையறுத்தனர். வள்ளுவரும் தவறான உணவு வழக்கத்தால் வரும் நோய்களையும் உண்ண வேண்டிய முறைகளையும் அறிவுறுத்தியிருப்பது, தமிழர்தம் மருத்துவ அறிவின் செம்மாந்த நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**செரித்தபின் உணவு**

எதை உணவாகக் கொள்கிறோமோ அதைப் போற்றி உண்ண வேண்டும். தினமும் இந்த உணவேதானே என்று சலிப்பதை விட தினமும் இது கிடைக்கிறதே என்றெண்ணி உண்டால் எத்தனை எளிமையான உணவாக இருந்தாலும் முழுமையாக செரிக்கப்பட்டு தேவையான உணர்வுத்தூண்டல்கள் கிடைக்கப் பெற்று ஆரோக்கியம் குடி கொள்ளும் என்பதை ‘அருந்தியது போற்றி உணின்’ என்கிறார். மேலும் உணவு செரிப்பது மிக முக்கியமானது. இது கொள்ளும் உணவைப் பொறுத்துக் காலமெடுத்துக் கொள்கிறது. ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் உணவிலுள்ள சத்துக்களை குடலுறிஞ்சிகளால் ஏற்கப்பட்டு இரத்தத்தோடு கலந்துச் செல்களை சென்றடைகின்றது. அதாவது முதலில் உண்ட உணவு செரித்தபின் அடுத்த உணவை உண்ண வேண்டும் என்பதை,

> **“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
> **அற்றது போற்றி யுணின்”** (942)

என்று அருந்தியது போற்றி உணின், அற்றது போற்றி யுணின் என்று நோயின்றி வாழும் வழியையும், நெடுவாழ் வாழும் வழியையும் காட்டுகிறார். அடுத்து நோய் வந்து விட்டால் அதனைக் குணப்படுத்தும் வழியையும் காட்டுகிறார்.

**நாடி மருத்துவம்**

நாடி பார்த்து நோயைக் கண்டறியும் ஆற்றல் வாய்ந்தது தமிழரது சித்த வைத்திய முறை. மருத்துவர் நாடியைப் பிடித்து நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கான மூலக்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து அதை நீக்கும் வழியை மருத்துவ முறை பிழையற செய்ய வேண்டுமென்பதை,

**“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்”** (948)

என்று வழி கூறுகிறார் வள்ளுவர்.

**முறையற்ற நடத்தை**

உடல்நலத்தை கெடுக்கும் தீய பழக்கங்களையும் நெறிமுறைகளையும் மேற்கொள்ளுவதால் செம்மைநெறி தவறி தீயவழி சென்றால் நோய்கள் பலவற்றிற்குத் தோற்றுவாயாக அமைகிறது. கள் குடிப்பது தீயச்செயல். கள்குடிப்பதன் கொடுமையைச் சுட்டிக்காட்டக் கள் குடிப்பவர் நஞ்சுண்பார் என்று காட்டுகிறது. நஞ்சுண்பவர் இறந்துவிடுவர். கள்ளும் முதலில் இன்பமளித்து பின்பு உயிரைப் பறிக்கும் நஞ்சிற்குஒப்பானதை,

**“துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்** (926)

என கள்ளினால் உடல் நலம் கெட்டு நோய் உண்டாகி உயிரை இழக்கும் தீய வழிகளை நீக்கிட வேண்டுகிறார்.

**தூய்மை**

உடல், உள்ள தூய்மையால் நோய் வருவதில்லை. மருத்துவம் என்ற செயலுக்கு வழியுமில்லை. உடல், உள்ள தூய்மைகளுக்கு காரணம் நீரும் வாய்மையுமாகும். அத்தகைய நீரின் தன்மையானது.

**“நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்**
**இன்னாவாம் இன்னா செயின்”**

ஒருவர் பயன்படுத்த வேண்டிய நீர் முதலில் இனிதாய் இருந்து பிறகு துன்பம் தருவதாய் இருக்கக் கூடாதென்கிறார். நாளடைவில் அரிப்பு, தோல் பற்சிதைவு, எலும்பு வலுவிழத்தல் போன்ற நோய்களிலிருந்து காத்திட நச்சு நீரையும், நச்சு மரநிழலையும் தவிர்ப்பதே நோயிலிருந்து நீங்கும் வழி என்கிறார்.

மனித உடலில் வாதம், பித்தம், கபம் என்ற மூன்று குணங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் உடலில் இருக்க வேண்டியவைகளை விட கூடுதலாதவோ, குறைவாகவோ இருந்தால் நோய் தோன்றுவது இயல்பு. ஆகவே ஒரே நிலையிலிருந்து மாறுபடா நிலையில் உணவை உட்கொள்ள வேண்டுமென்பதை,

**“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று”** (941)

என்று உணவுக் கட்டுப்பாடு முறையில் மருத்துவத்தை உள்ளடக்கிக் காட்டுகிறார்.

**உளநோய் உண்டாதல்**

உள்ளம் தொடர்பான நோய்கள் உணர்ச்சியின் அடிப்படையில் தான் உண்டாகின்றன. சினம் கொண்டவர் உணர்ச்சி வசப்படுவர். அத்தகைய உணர்ச்சியின் தாக்கத்தால் உள்ளம் நொந்து உடல்வாடி தீரா நோயை உண்டாக்குவர். நெருப்பு தானிருக்கும் இடத்தை மட்டும் அழிக்கும். சினமோ தான் சேர்ந்த இடத்தையும் இனத்தையும் அழிக்கும் என்பதை,

**“தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்”** (305)

என்கிறார்.

அகவாழ்க்கையில் காதலால் ஏற்படும் மனநோய் பற்றி பன்னிரண்டு (1147, 1161, 1162, 1171, 1175, 1176, 1183, 1200, 1226, 1241, 1275, 1280) குறட்பாக்களில் கூறுகிறார். காதல் கொண்டவருக்கு காமமே நோயாகவும், அந்த நோய்க்கு அதுவே மருந்தாகவும் அமைகிறது என்பதை,

**“பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்நோய்க்கு தானே மருந்து”** (1102)

**முடிவுரை**

பசிப்பிணி என்ற சொல்லால் குறிப்பிடும் வள்ளுவர் உடலைப் பேணும் வகைமைகளை குறிப்பிடுவதுடன் நோயின் வகைளையும் குறிப்பிடுகிறார். மருந்தே வேண்டாத நிலையில் உடலைப் பாதுகாக்கக் கூடிய வழிவகைகளைக் குறிப்பிடுவதுடன் உணவை அளவுடனும், காலமறிந்தும் உடலின் தன்மையறிந்தும் உண்டால் நோயே வராது என்பதையும் அவர் குறிப்பிடுகின்றார். காதலரின் காம நோயை பாடியுள்ள வள்ளுவர் அதற்கான மருந்தையும் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது.

# திருக்குறளில் செல்வம்

*முனைவர் அருட்சகோதரி ஜெஸின் பிரான்ஸிஸ், தமிழாய்வுத்துறைத் தலைவர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி– 02.

ஒரு மனிதன் இவ்வுலகில் இன்பமாக வாழ்வதற்கு ஆதாரமாக அடித்தளமாக இருப்பது செல்வம். செல்வத்தைக் குறிப்பிடும் பொழுது பொருள் என்று மட்டும் நோக்கலாகாது. திருவள்ளுவர் அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை: பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று குறிப்பிடுவதிலிருந்தே செல்வத்தின் முக்கியத்துவத்தைத் தெள்ளத்தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

வள்ளுவர்தம் நூலில் பல்வேறு பொருண்மைகளின் அடிப்படையில் செல்வத்தைக் குறிப்பிடுகிறார். அவற்றை ஆராயமுனைவதே கட்டுரையின் நோக்கம்.

**வள்ளுவர் - செல்வம்**

செல்வம் என்றால் ‘பொருள்’ என்று அனைவரும் அறிவர். ஆனால் வள்ளுவர் செல்வம் என்பதனைப் பொருள், அருள், பண்பு என்றெல்லாம் வகைப்படுத்துகின்றார்.

**“வேண்டாமைஅன்னவிழுச்செல்வம் ஈண்டில்லை**
**யாண்டும் அ.்.தொப்பது இல்”** (குறள்.363)

என்னும் குறளில் திருவள்ளுவர் ‘ஆசையின்மையை’ விழுச்செல்வம் என்று வரையறைக்கின்றார்.

**“கேடில் விழுச்செல்வம் கல்விஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை”** (குறள்.400)

என்னும் குறளில் விழுச்செல்வம் பிறவாமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

ஒருவனுக்கு அழிவில்லாத சீரியசெல்வமாவது கல்வி, இவையல்லாமல் பொன்னும் மணியும் செல்வமல்ல. கள்வராலும் கவர இயலாது. எவராலும் எடுத்துக்கொள்ளமுடியாது. பிறருக்குக் கொடுப்பதானாலும் குறைவுப்படாது. எனவே கல்வி, மணி, பொன்னைக் காட்டிலும் சிறந்தது என்பதனை சீவகசிந்தாமணி,

**“கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்**
**மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர்துணையுமாகும்**
**பொய்ப்பொருள் பிறகள் பொன்னாம் புகழுமாம் துணைவியாக்கும்**
**இப்பொருள் எய்திநின்றீர் இரங்குவதென்னையென்றான்” (சீ.சி.1595)**

என்று சுட்டுகின்றது. இக்கருத்தினையே

**“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை”** (குறள்.411)

என்று வள்ளுவமும் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது. செல்வம் உடையவராக இருப்பவருக்குப் ‘பணிதல்’ என்பது கூடுதல் செல்வமாகும்.

**“எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து”** (குறள்.125)

இக்குறளில் ‘பணிதல்’. அதாவது பெருமையின்றி இருப்பதைச் செல்வமாக வல-யுறுத்துகின்றார்.

**செல்வத்தின் பயன்**

யார் மாட்டும் சாராது விருப்பு வெறுப்பு பாராட்டாது நடுவுநிலையோடு வாழ்பவனது செல்வமும் புகழும் பிறருடைய ஆக்கம் போல் அழியாமல் அவனுடைய வழிதோன்றல்களுக்கும் பயன் தரும் அரணாகவும் விளங்கும். அதுபோலவே நீதியுடன் இருப்பவனது செல்வமானது அவனுடைய சந்ததியினருக்குப் புகழைத் தோற்றுவிக்கும்.

அதுமட்டுமல்லாது பொதுநலமுடையவரின் செல்வம் ஊரின் நடுவில் தழைத்தோங்கிய பழுமரம் பழுத்துப் பலருக்கும் பயன்தருவது போன்றதாகும். இத்தகைய கருத்துக்களை வள்ளுவப் பெருந்தகை கீழ்க்காணும் குறட்பாக்களின் வழியாக எடுத்துரைக்கின்றார்.

**"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
**எச்சத்திற்குஏமாப் புடைத்து"** (குறள்.112)

**"பயன்மரம் உள்;ர் பழத்தற்றால் செல்வம்**
**நயனுடையான்கண் படின்"** (குறள்.216)

இதனையே,

**"முன்னூர்ப் பழுனியகோளியாலத்துப்**
**புள்ளார்யாணர்த் தற்றேயென்மகன்**
**வளனுஞ் செம்மளுமெமக்கெனநாளும்"** (புறம்.254:7-9)

என்று புறநானூறு வழிமொழிகின்றது. மேலும்,

**"நடு ஊருள் வேதிகைச் சுற்றுக்கோள் புக்க**
**படுபனையன்னர்பலர்நச்சவாழ்வார்"** (நாலடியார்.96)

**"பல்லார்பயன்துய்ப்பத் தான்வருந்திவாழ்வதே**
**நல்லாண் மகற்குக் கடன்"** (நாலடியார்.202)

**"ஞாலநல்லறத் தோர்உண்ணும் பொருள்**
**போலநின்றுபொலிவதுபூம்பொழில்**
**சீலமங்கையர்வாயெனத் தீங்கனி**
**காலமின்றிக் கனிவதுகாண்டிரால்"** (கம்ப.நாடவிட்ட.18)

என்று கம்பரும் நவில்கின்றார்.

ஒருமரத்தின் அனைத்து உறுப்புகளும் (இலை, தளிர், பூ, காய், கனி, பட்டை) பிணிப்போக்கும் மருந்தாக அமைவதுபோல உலக நலன்காக்கும் பெருந்தகையாளனிடம் நிலைப்பெற்றிருக்கும் செல்வம் இவ்வுலகில் உள்ள அனைத்து தீமைகளைப் போக்கும் மருந்தாகப் பயன்படுவதனை,

**"மருந்தாகித் தப்பாமரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகையான்கண் படின்"** (குறள்.217)

என்று உலகப்பொதுமறையும்,

**"மரஞ்சாமருந்தும் கொள்ளார்மாந்தர்"** (நற்.226:1)

என்று நற்றிணையும்,

**"மருந்துபோல் மரத்தின் வாள்வடுமயங்கி"** (புறம்.180:5)

என்று புறநானூற்றுப் பாடலும்,

**"வள்ளன்மைபூண்டான்கட் செல்வமும்.....**
**பொத்தின்றிக் காய்த்தமரம்"** (திரிகடுகம்.75)

என்று திரிகடுகமும் எடுத்துரைக்கின்றன.

**செல்வத்தின் இயல்பு**

குற்றமற்ற சான்றோர்கள் சிறந்த புகழை ஈட்டித்தருகின்ற செல்வத்தையே பெறுவதாக இருப்பினும் பிறருக்குத் தீங்கு நினைக்கமாட்டார்கள் என்பதனை,

**"சிறப்பீனும் செல்வம் பெரினும் பிறர்க்கின்னா**
**செய்யாமைமாசற்றார்கோள்"** (குறள்.311)

என்றுகுறள் செப்புகின்றது.

ஒரு பொருளாக மதிக்கத் தகுதியில்லாதவரையும் ஒருபொருட்டாக மதிக்கச்செய்வது பொருட்செல்வம் என்றும், அப்பொருட்செல்வத்தைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறொன்றும் இல்லை என்றும், ஒருவன் தாழ்நிலையில் இருப்பினும் சமூகத்தில் அவனுக்கு உயரிய இடத்தை நல்கவல்லது செல்வம் என்றும்,

**"பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருள் அல்லதில்லைபொருள்"** (குறள்.751)

என்னும் இக்குறளில் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தினையே,

**"பொருளல்லால் பொருளும் உண்டோ"** (கலி.14:10)

என்று அக இலக்கியமும்,

**“குலம்தரும் கல்விகொணர்ந்துமுடிக்கும்**
**அலந்தகிளைகள் அழிபழிதீர்க்கும்.....**
**புலம்பில் பொருள்தரப் புன் கண்மைஉண்டோ”** (வளையாபதி)

வளையாபதியிலும் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

**“இல்லாரைஎல்லாரும் எள்ளுவர்செல்வரை**
**எல்லாரும் செய்வர்சிறப்பு”** (குறள்.752)

எல்லா நன்மைகளையும் உடையவராகினும் பொருள் இல்லாரை இவ்வுலகில் யாவரும் இகழ்வர். எல்லாத் தீமைகளையும் உடையவராகினும் பொருள் உடையவரையாவரும் புகழ்ந்து பேசுவர், உயர்வாகக் கருதுவர்.

பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர் என்று நாலடியார்,

**“இலாஅர்க் கில்லைத் தமர்”** (நாலடியார்.283)
**“வாழாதார்க் கில்லைத் தமர்”** (நாலடியார்.290)

என்று நாலடியாரும்,

**“மாடு தானது இல்லெனின் மானுடர்**
**பாடுதான் செல்வாரில்லை”** (அப்பர்.கொண்டீச்சரம்.3)

என்று அப்பரும் பொருள் இல்லாதவரின் நிலையை எடுத்துரைக்கின்றனர். மேலும், செல்வரை எல்லோரும் சிறப்புடன் நடத்துவர்என்பதை,

**“அருடையயாரும்மற் றல்லாதவரும்**
**பொருளுடையாரைப் புகழாதார் இல்லை”** (பழமொழி.269)
**“இல்லாரைஎல்லாரும் எள்ளுவர்செல்வரை**
**எல்லாரும் செய்வர்சிற்ப்பென்னும் - சொல்லாலே”** (ஆதி உலா.136)

என்று பழமொழியும் ஆதி உலாவும் எடுத்துரைக்கின்றன.

**செல்வத்தின் நிலையாமை**

**“கூத்தாட் டவைக்குழாத் தற்றேபெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று”** (குறள்.332)

கூத்தாடும் அரங்கிற்கு மக்கள் சிறிது சிறிதாகவந்து கூடுவது போன்று பெருஞ்செல்வம் ஒருவனிடம் சேரும். அச்செல்வம் அவனைவிட்டு நீங்குவது அக்கூத்து முடிந்ததும் விரைந்து செல்லும் கூட்டம் போன்று விரைவாக அகன்றுவிடும். இவ்வொற்றுமையை,

**“கோடியர் நீர்மை போல முறைமுறை**
**ஆடுநர்கழியும் இவ் வுலகம்”** (புறம்.29:2)

என்று புறம் சுட்டுகின்றது.

செல்வத்தின் இயல்பை பெறுவோர் நிலையான அறச்செயல்களில் ஈடுபடவேண்டும். நிலையில்லாத செல்வத்தைக் கொண்டு நிலையான வீடுபேற்றை, அடைய அறம் செய்யவேண்டும் என்பதனை வள்ளுவர்,

**“அற்கா இயல்புற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்”** (குறள்.333)

என்று வலியுறுத்துகிறார்.

அரசனின் ஆட்சி சரியில்லாமையால் மக்கள் துன்பத்திற்கு ஆளாகி அதனைப் பொறுக்கமாட்டாமல் அழுகின்ற கண்ணீரே அவன் செல்வத்தைக் குறைக்கும் கருவி என்பதனை,

**“அல்லற்பட்டு அற்றாது அழுதகண் ணீர்அன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை”** (குறள்.555)

என்று பொய்யில் புலவரும்,

**“கண்ணில் நீர்**
**கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ”** (சிலம்பு.29:13)

என்று சிலம்பும் அறிவுறுத்துகின்றன.

சூதாடும் இடத்திற்கு ஒருவன் தொடர்ந்து நாள்தோறும் சென்றால், பன்னெடுங்காலமாக அவன் குடும்பத்தார் சேர்த்து வைத்த பொருள் செல்வத்தையும், குடிப்பெருமையையும் இழக்கநேரிடும். சூதாடுபவருடன் ஒருவன் நட்புக்கொண்டால், அவன் உடுத்தும் உடை, துய்க்கும் செல்வம், உண்ணும் உணவு, விரும்பும் புகழ், பயிலும் கல்வி ஆகிய ஐந்தும் அவனை விட்டு விலகிச் செல்லும். இதனை,

**“பழகியசெல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலைபுகின்”** (குறள்.937)
**“உடைசெல்வம் ஊண்ஒளிகல்வி என்றுஐந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின்”** (குறள்.939)

என்று முப்பால் எடுத்தியம்புகின்றது.

இக்கருத்தினையே அறநெறிப்பாடலும்,

**“ஓதலும் ஓதிஉணர்தலும் சான்றோரால்**
**மேதைஎனப்படும் மேன்மையும் - சூது**
**பொருமென்னும் சொல்லினால் புல்லப்படுமேல்**
**இருளாம் ஒருங்கே இவை”** (அறநெறி.147)

என்று உரைக்கின்றது.

**அருட்செல்வத்தின் சிறப்பு**

**“அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார்கண்ணும் உள”** (குறள்.241)

அருட்செல்வம் உலகத்துச் செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்த செல்வமாகும். ஏனைய பொருட்செல்வம் அருள் உணர்வற்ற கொடியவரிடம் கூட குவிந்திருக்கும். ஓர் உயிர் துன்பப்படும் பொழுதுதன் உயிர்போல வருந்தும் இரக்கமே சிறந்த செல்வம்(அருட்செல்வம்). இதுவே அழியாத செல்வம். பொருட்செல்வம் நீசர்களிடமும் உள்ளது. அறிவுடையோர் இதனைச் செல்வம் எனக் கொள்ளார் என்று அருட்செல்வத்தின் சிறப்பினை நுட்பமான கண்ணோட்டத்தில் உலகப் பொதுமறை குறிப்பிட்டிருப்பது வியக்கத்தக்க வகையில் உள்ளது.

**நிறைவுரை**

தொன்மை மிக்க தமிழ்மக்கள் இயற்கையாக வளர்ந்து, ஈடு இணையற்ற கருத்து கருவூலங்களாகத் திகழ்ந்த பான்மையினைச் சித்திரிக்கும் இலக்கியங்களுள் முதன்மையான இலக்கியம் திருக்குறள். இத்திருக்குறளில் இடம்பெற்றுள்ள செல்வம், செல்வத்தின் மேன்மை, ஈட்டும் வழிமுறைகள், செல்வத்தின் பயன், பிறரைத் துன்புறுத்தாத நலம் தரும் செல்வம் முதலியவற்றைத் திருவள்ளுவரின் சிந்தனைகள் வாயிலாக ஆராயப்பட்டுள்ளது.

# தமிழிலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

*திருமதி.கு.செ.சரஸ்வதி, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் - 631 501.

**முன்னுரை**

காதலும் அன்பும் சங்க காலத் தமிழர்களுக்கு உயிரும் உடலுமாக இருந்திருக்கின்றன. போரும் வீரமும் மட்டும் தமிழர் வாழ்வில் இடம் பெறவில்லை, ஈரமும் ஈகையும் நிறைந்ததாக அமைந்திருந்தது. மேலும் அரசு, அரசு முறை, வீரம், போர் திறம், காதல், அறம், கொடைச் சிறப்பு, இல்லற மாண்பு, மகளிர் நிலை, செல்வ வளம், வாணிபம், பண்டமாற்று முறை என்று வாழ்க்கையின் பல கூறுகளைக் கொண்டு விளங்கியவை தமிழிலக்கியங்களாகும். அவ்வகையில் தமிழிலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பண்பாட்டுக் கூறுகள்**

உலக நடைமுறையினையும் சமுதாயம் ஒத்துக்கொண்ட நெறிகளையும் பொருந்தி நடத்தலே **'பண்பாடு'** ஆகும். சமுதாயம் ஏற்றுக்கொண்ட நெறியோடு பண்பாட்டுச் சிந்தனைகளையும் நல்கி சமுதாயம் செம்மையடைய, மக்கள் மனதின் அழுக்குகள் அகன்று, அருங்குணங்கள் பெருகி மனிதன் மனிதனாக வாழ முற்படும் நிலையில் பண்பாடு உருவாகிறது. மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம் முதலியவற்றையும் இதனுள் அடக்கலாம். திருவள்ளுவர் பண்பாடு என்பதை உலகம் பண்புடையார் ஒழுக்கத்தால் இயங்குவதாகவும், அ.்.தில்லாவிடின் அழிந்து போயிருக்கும் என்பதையும்

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**பண்புக்கு மாய்வது மன்"** **-திருக்குறள்-பொருட்பால்-100:6 (996)**

என்ற குறளின் மூலம் பண்புடைய மனிதன் வாழ்வதால்தான் பண்பாடு மேம்பட்டுள்ளது என்று கூறுவது சிறப்பிற்குரியதாகும்.

**வாழ்வியல் சிந்தனை**

மானுட சமூகத்தை ஓர் இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் பெரும்பணியைச் சிறப்பான முறையில் செய்து வருவன இலக்கியங்கள் ஆகும். மானுட வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள் இருக்க வேண்டும். இன்றும் இன்னே செய்தல் வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களின் கருத்தைக் குறிக்கோளாக சமூகம் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். வாழ்வியல் அறங்களைச் சிறப்பாக வைத்துக் கொள்வோர் சோம்பலில்லாமலும், அறஞ்சாரா செயல்களைச் செய்யாது, **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** எனும் பொதுத் தன்மையோடு இருக்க வேண்டும். சேற்றிலே பிறந்து வளர்ந்து நிற்கும் தாமரை மலர் ஒளி பொருந்திய நூற்றுக்கணக்கான இதழ்களை ஒரே மாதிரி பெற்றிருப்பதைப் போல ஏற்றத்தாழ்வில்லாத எண்ணத்துடன் வாழ்வதே சிறந்த வாழ்வியல் சிந்தனையாகும்.

**போரில் அறச் சிந்தனை**

சங்ககால மன்னர்கள் போரில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். போருக்குப் புறப்படும் மன்னன் சூளுரைத்தலும் வஞ்சினம் கூறுதலும் அவர்களின் மற உணர்வை வெளிப்படுத்துகின்றன. போரில் புண்பட்ட சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தபோது வெண்ணிக் குயத்தியார் எனும் புலவர் போரில் வென்ற கரிகால் வளவனைப் புகழும் பாடலில் சேரனின் மறவுணர்வை வியந்து பாராட்டுகிறார்.

**"நின்னினும் நல்லன் அன்றே**
**................................**
**புறப்புண் நாணி வடக்கிருந்தோனே"** -புறநானூறு:66:5-8

என்ற வரிகள் கரிகாலனின் பெருமையைத் தெளிவுபடுத்துகின்றன. அரசர்களின் மண்ணாசையும் புகழ் மீதுகொண்ட மோகமும் போருக்குரிய காரணங்களாகப் பெரிதும் சுட்டப்படுகின்றன. ஆயினும் அரசர்கள் தாம் போற்றும் அறங்களைப் போரில் கைவிடவில்லை என்பதை நெட்டிமையார்

"தென்புலன் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

……………………………

அறத்துஆறு நுவலும் பூட்கை" -புறநானூறு:9:3-6

என்ற பாடல் வரிகள் மானமும் வீரமும் கொண்டு போரிட்ட மன்னர்கள், போரிலும் அறத்தைப் பாதுகாத்தனர் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

**கொடைச் சிந்தனை**

மனிதனின் அடிப்படை உணர்ச்சி மனிதாபிமானம். எங்கெல்லாம் உதவி வேண்டி ஏக்கப் பார்வையும், சுருங்கிப்போன வயிறும், துன்பக் குரலும், இயலாமையும் நம் கண்களுக்குத் தெரிகிறதோ அங்கே நம்மால் முடிந்த உதவியைச் செய்வதே கொடைப் பண்பாடாகும். இதனை,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி" -திருக்குறள்-அறத்துப்பால்-23:6 (226)**

என்ற திருக்குறளில் தெய்வப் புலவர் ஈகைப் பண்பை எடுத்தியம்புகிறார். மேலும் **"இம்மி அரிசி துணையானும் வைகலும் ; நும்மில் இவையவகொடுத்து உண்மின்"** (நாலடியார்-94) என்ற நாலடியார் பாடல் வரிகளால் கொடைப் பண்பின் இன்றியமையாமையை அறியமுடிகின்றது. மேலும் உலகில் அறம், பொருள், இன்பம் என்று கூறப்படும் மூன்று உறுதிப் பொருட்களின் வழியில் வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு நமது செல்வம் உதவாமல் போனால் நாம் நம்மையே பாதுகாக்காதவர்கள் ஆவோமென்பதை

**"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்**

**ஆற்றும் பெருமநின் செல்வம்**

**ஆற்றா மைந்நிற் போற்றாமையே" -புறநானூறு:28:15-17**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் தர்மம் தலைகாக்கும் என்பதையும், பகுத்துண்டு வாழும் வாழ்க்கையே நல்ல வாழ்க்கை என்பதையும் உணர்த்துகின்றன.

**வீரம் செறிந்த மானச் சிந்தனை**

சேரமான் கணைக்கால் இரும்பொறை, செங்கணான் என்னும் மன்னனுடன் பகை கொண்டான். செங்கணான் சேர மன்னனுடன் போர் புரிந்து வெற்றி பெற்று **கழுமலக்** கோட்டையைத் தன் வசப்படுத்திக்கொண்டு கணைக்கால் இரும்பொறையைச் சிறையில் அடைத்தான். சிறையில் இருந்த மன்னனுக்கு பகைவர் உண்ண உணவும், குடிக்க நீரும் தரவில்லை. ஒருநாள் மன்னனின் நாக்கு மிகவும் வறண்ட நிலையில் குடிக்க தண்ணீர் கேட்டான், காவலர்கள் அரசன் என்ற மதிப்பும் கூட இன்றி பல இகழ்ச்சி உரைகளைக்கூறி பின் நீரை அளித்தனர்.

இத்தகைய இக்கட்டான சூழலிலும் அவன் உள்ளத்தில் ஓர் அறவுரை பிறந்தது. அதாவது பிறந்த குழந்தை ஏதாவது காரணத்தினால் இறந்து விட்டாலும் அல்லது இறந்தே பிறந்தாலும் அந்தக் குழந்தையைக்கூட வாளால் காயப்படுத்திய பின்தான் மண்ணில் புதைப்பர். அவ்வாறிருக்க எந்தவித காயமுமில்லாமல் வஞ்சகத்தால் சிறை அடைக்கப்பட்ட நான் தாகத்தைக் தணிக்க நீரைக் கேட்டுப் பெற்றிருக்கிறேன். இந்த மானங்கெட்ட தண்ணீரைப் பருகவும் வேண்டுமா? என்று எண்ணியவன் நீரைப் பருகாமல் நா வறண்டு உயிர் நீத்தான் என்பதை

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**

……………………………

**ஈன்மரோ இங் உலகத்தானே?" -புறநானூறு-74:1-7**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் அரசனே ஆயினும் மானம்தான் பெரிது என்ற வாழ்வியல் சிந்தனையை நமக்கு புலப்படுகின்றது.

**விருந்தோம்பல் சிந்தனை**

**'விருந்து'** என்ற சொல்லுக்குப் **'புதுமை'** என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய்ப் புதியராக நம்மிடம் வரும் மக்களை விருந்தினர் என்றனர். அவ்வாறு அறியாதவர்களையும் அழைத்து உண்ண உணவளித்து, தங்க இடமளித்து மகிழ்ந்தனர் என்பதை,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு" -திருக்குறள்-அறத்துப்பால்-9:6 (86)**

என்ற குறள் மூலம் அறியமுடிகிறது. மேலும் விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டினுள்ளே உண்ணும் உணவானது சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டாம் என்பதை

**"விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று." -திருக்குறள்-அறத்துப்பால்-9:2 (82)**

என்று கூறுவதிலிருந்து சங்ககால மக்கள் விருந்தோம்பல் சிந்தனையில் சிறந்து விளங்கியிருந்ததை அறியமுடிகிறது. கரிகால் சோழனைக் கண்டு தன் வறுமையைத் தீர்த்துக்

கொண்ட பொருநன், தன் எதிர்ப்படும் வறுமையிலுள்ள பொருநனை ஆற்றுப்படுத்தும் பொழுது, கரிகாலன் தன்னை உபசரித்த முறை குறித்து கூறுகின்றான். இதனை

**"கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்**

**………………………………**

**உருகு பவைபோல் என்பு குளிர் கொளீஇ"** -பொருநராற்றுப்படை 73-78

என்ற பொருநராற்றுப்படை பாடல் வரிகளால் அறியமுடிகிறது. இப்பாடலில் பொருநன், அரசன் ஏற்கனவே என்னை அறிந்து நட்பு கொண்டவன் போல் என்னுடன் நட்பு கொண்டு விருந்து உபசரித்தார் என்று கூறினான். மேலும் விருந்தோம்பலுக்கு இன்சொல்லோடு கூடிய அருள் பார்வையும் தேவை என்பதையும், பண்டைத் தமிழர்கள் விருந்தினரை அன்புடன் வரவேற்று உபசரித்து அவர்களுக்கு உதவி செய்யும் உயரிய எண்ணத்தையும் இப்பாடலின் வாயிலாக அறியமுடிகிறது.

**அரசியல் சிந்தனை**

தனிமனித நடவடிக்கையில் தலைமைச் சான்றாக அரசின் செயல்பாடு உள்ளது. மக்களைக் காப்பாற்றவும், மக்களுக்கு நற்பணியாற்றவும் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசு தனது நெறியிலிருந்து விலகிச் செயல்பட்டால் மக்கள் சமூகம் துன்பத்தால் அழிந்துவிடும். எனவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து அரசு செயல்பட வேண்டும். மக்களும் அரசிற்கு தனது உழைப்பில் ஒரு பங்கை வரியாகச் செலுத்த வேண்டும். அதேபோல் அரசும் மக்களின் வருவாய் நிலையறிந்து வரிவிதிக்க வேண்டும். இவ்வாறில்லாமல் அதிகப்படியான வரியை விதித்தால் மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முடியாமல் துன்புறுவா் என்பதைப் பிசிராந்தையார்

**"காய் நெல்லறுத்துக் கவளங் கொளினே,**

**……………………………**

**யானைபுக்க குலம் போலத்,**

**தானும் உண்ணான், உலகமும் கெடுமே"** -புறநானூறு-184:1-11

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் அரசனுக்கு யானையை ஒப்பிட்டுக் கூறி அரசனின் அரசியல் முறையையும் ஆட்சி முறையையும் தெளிவாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடுகமும் இதேகருத்தை எடுத்தியம்புவதை **"கொள் பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்; உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்; இல்லிருந்து எல்லை கடப்பாடும் இம்மூவர்; வல்லே மழையறுக்கும் கோள்"** (திரிகடுகம்-50) என்ற பாடலில் அரசும் மக்களும் தத்தம் கடமைகளையாற்ற வேண்டும் என்பதை நல்லாதனார் தெளிவுபடுத்துகிறார். அறம் சார்ந்த அரசியல் சிந்தனைகள் அக்காலத்தில் சிறந்து விளங்கியது என்பதை இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**முடிவுரை**

உலக மக்கள் யாவரையும் உறவாகக் கருதும் பண்டைத் தமிழரின் உள்ளம் பண்பாட்டில் சிறந்து விளங்கியது. தமிழரின் தொன்மைச் சிறப்புகளான பண்பாட்டுக் கூறுகளையும், போரிலும் தங்களின் அறத்தைக் கடைபிடித்த முறையினையும் அறியமுடிகிறது. மேலும் மன்னா்கள் மானம் காக்க உயிர் நீத்தப் பெருமையையும், விருந்தோம்பல் தமிழரின் வாழ்வில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்ததையும் காணமுடிகிறது. ஒருவர் எத்தனை முறை விருந்திற்கு வந்தாலும் அவரை முதல் நாள் உபசரித்ததைப் போன்று இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்ததையும், அரசியலில் நடுவுநிலைமையைப் பின்பற்றியதையும் தமிழிலக்கியங்கள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**துணை நூற்பட்டியல்**


1. திருக்குறள் -செந்தமிழ் உரை, முனைவர் செ.உலகநாதன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-600 013, நா.ப. திசம்பர் 2014.
2. சங்க இலக்கியம் (மூலம் முழுவதும்) ச.வே.சுப்பிரமணியன் மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600108, மு.ப. திசம்பர் 2006.
3. பத்துப்பாட்டு, உரையாசிரியர், முனைவர். ச.வே. சுப்பிரமணியன் கோவிலூர் மடாலயம், கோவிலூர்-630 307, மு.ப. ஏப்பிரல் 2004.
4. தமிழர் நாகரீகமும் பண்பாடும், டாக்டர்.அ.தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, சென்னை-600040, மு.ப. செப்டம்பர் 1994.

# சுகிர்தராணியின் இப்படிக்கு ஏவாள் கவிதைத் தொகுப்பில் காணப்படும் பெண்மொழி

*கு.சீதா, ஆய்வாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

**முன்னுரை**

தாய்வழிச் சமுக அமைப்பு தந்தை வழிப்பட்டதாக மாறிய பிறகு முதன்மையான துறைகளிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதால் மொழி ஆண் வயப்பட்டதாக மாறிற்று. பெண்களைக் கட்டுப்படுத்தி ஒடுக்குவதற்கும் சகல ஆண்களும் தங்களுக்குள் ஒரு ஐக்கியத்தை கொள்கின்றனர் என்ற நிலை ஏற்பட்டதும் ஒரு கலகக்குரலாகத் தான் இந்த பெண் மொழி உருவாக்கப்பட்டது. தந்தை வழிச் சமூக ஆணாதிக்க அடக்கு முறையிலிருந்து பெண் வெளி வர வேண்டும் என்றால் பெண் தனக்கான மொழியைக் கண்டுபிடிக்க வேண்டும். பெண் எழுதுவது மட்டுமே பெண் மொழி ஆகி விடாது. ஆண் கவிஞர்கள் படைப்பிலும் பெண்ணிய நோக்கு நிலையைக் கொண்டு ஆராயும் பொழுது அவர்கள் பார்வையில் பெண்மொழியானது எவ்விதம் படைக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம். அந்த வகையில் சுகிர்தராணியின் இப்படிக்கு ஏவாள் கவிதைத் தொகுப்பில் காணப்படும் பெண்மொழியைக்குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**பெண்மொழி**

மொழி என்பது இயல்பாக வெளிப்படுவது. ஒரு குழந்தையின் பிறப்பிற்கு தாய் தரும் உணவு எப்படியோ அப்படியே மொழியும் உள்ளது. அவள் உணர்வுகளும் நினைவுகளும் இரத்தத்தின் வழியாக குழந்தையின் செல்களில் பதிகிறது. குழந்தைக்கு எதுவுமே புரிவதில்லை என்றாலும் கூட வளர வளரத் தாய் பேசுதலின் மூலமாக மொழியைக் கற்றுக் கொள்கிறது. இந்த வகையில் தாயிடமிருந்து குழந்தைக்கும் சமூகத்திற்கும் ஒரு இணைப்புப் பாலமாக விளங்கும் மொழி இன்றி சமூக இயக்கம் இல்லை.

**“இருப்பதை உடைக்காமல் புதிய சொல்லாடலை உருவாக்க வழியில்லை”** என்று ஹெலன் சீக் கூறுவதற்கேற்ப காலங்காலமாக பெண்ணின் மீது புனையப்பட்ட அனைத்து புனைவுகளையும் உடைத்து நொறுக்கி விடுவதில் இன்றைய எழுத்தானது தீவிரமடைந்துள்ளது. கவிதை இதற்கு சிறந்த ஊடகமாக அமைகிறது. பெண்கள் வெகு காலமாக எழுதி வந்த போதிலும் பெண் என்ற பிரக்ஞையோடு எழுதத் தொடங்கியது அண்மைக் காலத்தில் தான்.

“பெண்ணுக்கென்று ஒரு மொழி இருக்கிறது. அவளுடைய ஆழ் மனதின் ஓட்டங்களை சின்ன சின்ன கனவுகளை நடைமுறை வாழ்க்கையை உள்ளதை உள்ள படி சொல்லிப் போகும் அவளுடைய மனதின் மொழி என்று எ.எஸ்.பத்மாவதி கூறுகிறார். பெண்மொழியானது ஒடுக்கப்பட்ட உடலுக்குள் சூழல் மாற்றம் ஏற்படுத்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு ஆகியவை உள்ளிட்ட அக நிகழ்வுகளை சார்ந்து உருவாகிறது.

**பெண்மொழிக் குறித்து எழுத்தாளர்களின் கூற்று**

பெண்ணானவள் தன்னை வெளிப்படுத்தும் பொழுது சக கவிஞர்களாலேயே விமர்சிக்கப்படுகிறார்கள். பெண்மொழிக் குறித்து மாலதி மைத்ரி “பெண்மொழி என்று கவிதையில் தனியாக அடையாளப்படுத்த சில தெளிவுகளும் அதற்கான கோட்பாடும் உருவாக வேண்டியிருக்கிறது. பெண்பாலுறுப்பைக் குறிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்தினால் பெண்மொழி உருவாகி விடாது. காலங்காலமாக சுமத்தப்பட்ட நிர்பந்திக்கப்பட்ட பெண் வாழ்வியல் கருத்தியல் வன்கொடுமைகளுக்கு எதிராக அரசியல் கவிதைகள் தமிழில் உருவாகும் போது பெண்மொழி சாத்தியமாகும்” என்று கூறுகிறார்.

“ஒரு பெண் தனது கருத்தைத் தனது மன உணர்வுகளை எந்தவொரு தடையும் இடையூறும் இன்றி முழுமையாக தனது நோக்கிச் வெளிப்படுத்துவதே பெண்மாழி ஆகும்” என்று சந்தான பாபி கூறுகிறார்.

“பெண்ணின் பாலியலுக்கான சில கோட்பாடுகள் இருக்குமானால் அவை ஆண்களின் மொழிக்கு வெளியே தான் இருக்க முடியும” என்ற பஞ்சாங்கத்தின கருத்தும் கவனிக்கமுடிகிறது.

**சுகிர்தராணியின் பெண்மொழி**

சுகிர்தராணியின் கவிதைகளில் வெளிப்படும் பெண்மொழி பெண்ணுக்கே ஆன மொழி ஆகும். இவரது உலகம் தலித் பெண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கினாலும் இவரது கவிதைகளைப் பார்க்கும் போது அது பெண்மொழியினால் மட்டுமே வெளியிடப்படுகிறது. பிறப்பினால் தலித்தாக அறியப்படும் சுகிர்தராணியின் கவிதைகள் இன்று பலருடைய கவனத்தை ஈர்த்துள்ளன. இவருடைய இப்படிக்கு ஏவாள் கவிதைத் தொகுப்பில் மொத்தம் 58 கவிதைகள் காணப்படுகிறது.

**அன்பின் மொழி**

‘ஆதிநிலம்’ என்ற கவிதையில் தாய்க்கும் மகளுக்கும் இடையே காணப்படும் அன்பைக் குறித்து ஆசிரியர் கூறுகிறார். தாய் தன் மகளிடம் தன்னைக் குறித்தக் கேள்விகளைக் கேட்கிறாள். அதற்கு மகள் தன் அம்மா மீது கொண்டிருந்த எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்கிறாள். தன் உடலைக் குறித்தக் கேள்விகளுக்கும் மகள் மறுக்காமல் தன் தாயை முத்தமிட்டவாறு பதில் சொல்கிறாள்.

**“ஊமத்தையாய் பூத்திருந்த பகலின் மார்பு**
**சற்று வெண்மையாய் இருந்தது**
**மண் நிரப்பப்பட்ட சாலையில்**
**மகளோடு நடந்து கொண்டிருந்தேன்**
**நேற்றவள் முத்தமிட்ட பாற்கடிப்பில்**
**காலடியில் கடக்கும் ஓர் ஆறென**
**அன்பு வழிந்து ஓடியது”**

தன்னுடைய மகள் தன்னை முத்தமிடும் போது தன்னுடைய கருப்பை மலர்வதாக எண்ணி அந்தத் தாய் மகிழச்சி அடைகிறாள். இதிலிருந்து பெண்களின் அன்பின் மொழியை ஆசிரியர் சுட்டிக் காட்டுவதைக் காணலாம்.

பெண்ணானவள் ஒரு பறவையின் மீது அன்பு செலுத்துவதை ‘பாழாய் போன முத்தம்’ என்ற கவிதையில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். தன் வாழ்க்கையில் தன்னுடன் அன்புக் காட்ட யாருமில்லையென பெண் ஏங்குகிறாள். அவளுடைய ஏக்கத்தை ஒரு பறவையானது தன்னுடைய அன்பினால் நீக்குகிறது. அவளுடைய கண்ணீரை தன்னுடைய இறகுகளால் துடைத்து விடுகிறது் தன்னுடைய தனிமையின் ஏக்ககத்தை அந்தப் பறவையானது நீக்கி விடுகிறது. அடுத்தவர் மீது அன்பு காட்டாமல் வாழும் இந்த உலகத்தில் ஒரு பறவையானது அன்பு காட்டுவதை இக்கவிதையின் வழி ஆசிரியர் காட்டுகிறார். பெண்களின் அன்பின் மொழ-யியானது மனிதர்களிடம் மட்டுமில்லை பறவைகள் விலங்குகள் என அனைத்திலும் காட்டப்படுவது குறித்து ஆசிரியர் விவரிப்பதை இவரது கவிதைகள் நாம் அறியலாம்.

**உள்ளத்தின் மொழி**

‘பலியிடப்பட்ட காதல்’ என்ற கவிதையில் தன் காதலனுக்கு எதுவும் ஆகி விடக்கூடாது என்று நினைத்து தன் காதலை விட்டுக் கொடுக்கும் பெண்ணின் உள்ளத்து மொழியை ஆசிரியர் பதிவு செய்கிறார். நாம் காதலித்த நாட்களில் அனுபவித்த சந்தோஷங்கள் ஏராளமானவை. அவை எல்லாம் மறக்க முடியாத அனுபவங்களாய் என் மனதில் உள்ளது என கூறுகிறார்.

**“ஆயினும்**
**சாணை பிடிக்கப்பட்ட சாதியின் கூர்வாளால்**
**வெட்டுப்படாத உனதுயிர் வேண்டியே**
**கைவிடுகிறேன் எனது காதலை”**

உன்னுடைய காதலை நீ என் மீது மழையாகப் பொழிந்தாய். நீ தந்த முத்தத்தின் ஈரங்களை எனக்கு நினைவுப்பறவை நினைப்பூட்டுகிறது. சாதியின் பெயரால் உன்னைக் கொலை செய்வதைத் தடுக்கவே எனது காதலை நான் கைவிடுகிறேன் என்று கூறுகிறாள். பெண்ணின் உள்ளத்தில் காதல் ஒரு சந்தோஷமாக இருந்தாலும் தன்னுடைய காதலன் உயி-

ரோடு இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்தக் காதலையும் விட்டுக் கொடுக்கும் பெண்ணின் உள்ளத்து மொழியை கவிஞர் இக்கவிதையில் சுட்டுகிறார்.

"முதுகின் மேலொரு சேரி" என்ற கவிதையில் சேரியில் வாழும் ஒரு பெண் எவ்வளவு தான் தன்னை அழகுப்படுத்திக் கொண்டு வெளியே சென்றாலும் தான் ஒரு சேரியில் இருந்து வந்தவள் என்று நினைத்து தாழ்வு மனப்பான்மைக் கொள்ளும் உள்ளத்து மொழி காட்டப்பட்டுள்ளது. எல்லாப் பெண்களைப் போல தானும் காலையில் எழும்பி வீட்டு வேலைகளைச் செய்து குளித்து முடித்து சாப்பிட்டு விட்டு எல்லா ஒப்பனைகளையும் செய்து விட்டு வெளியே கிளம்புகிறாள். எவ்வளவு தான் ஆடை அலங்காரம் செய்து கொண்டு வந்தாலும் சேரி என்ற பெயர் முதுகில் ஒட்டிக் கொண்டு தான் இருக்கிறது. சேரி என்று சொல்வதின் மூலம் அந்தப் பெண்ணின் மனதில் ஒரு தாழ்வு மனப்பான்மை வந்து விடுகிறது. இதில் தன்னுடைய உள்ளத்தின் மொழியை சிறந்த முறையில் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

**ஆசையின் மொழி**

சுகிர்தராணியின் கவிதைகளில் தனது விருப்பம் சார்ந்த உலகம் வெளிப்படுவதை காண முடிகிறது. மட்டுமல்ல அவருடைய ஆசை சார்ந்த உலகமாக இந்த உலகம் மாற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவனவாகவும் இவரது கவிதைகள் அமைந்துள்ளன. இந்த விருப்பமானது தன்னுடைய அனுபவங்களின் அடிப்படையில் அமைந்தவையாகக் காணப்படுகின்றன. நூற்றாண்டுகளில் ஒற்றைக் கேள்வி என்ற கவிதையில் சேரியில் வாழும் பெண் தன்னுடைய சேரியானது ஊர் ஆகாதா என ஆசைப்படும் தன்மையைக் காட்டுகிறது.

**"தலைசாய்த்து நீரருந்தும்
சிறு பட்சியைப் போல
வீட்டின் முற்றத்தில்
அமர்ந்திருந்த அப்பாவிடம் கேட்கிறேன்
கேள்வியின் ஊஞ்சல்
காலத்தின் இருபுறமும் சென்று வருகிறது
பதிலின்றி பதில் சொல்வார் எவருமின்றி
சற்று தொலைவில் செப்பு வைத்து
தனியே விளையாடும் என் மகள்
உதட்டின் விளிம்புக்குள் துக்கத்தை மடித்து
அதே கேள்வியை கேட்கிறாள் என்னிடம்
சேரி ஊராகாதா அம்மா?"**

இந்த வரிகளின் மூலம் சேரி என்ற பெயரினால் அதில் வாழ்பவர்கள் அனுபவிக்கும் வலிகளையும், ஊர் ஆகாதா என்ற ஆசைகளையும் இக்கவிதையில் ஆசிரியர் பதிவு செய்கிறார். இக்கவிதையின் மூலம் ஆசிரியர் தன்னுடைய மனதில் உள்ள ஆசையை வெளிப்படுத்தும் விதத்தை அறிந்து கொள்ளலாம்.

**முடிவுரை**

சுகிர்தராணியின் கவிதைகள் பெண்மொழியை தனக்கேயான மொழியில் வெளிப்படுத்துகின்றன. பெண்களின் மனதில் காணப்படும் அன்பின் மொழி, உள்ளத்தின் மொழி, ஆசையின் மெழிி போன்றவை இவருடைய கவிதையில் வெளிப்படுகின்ற தன்மையை இக்கட்டுரை மூலம் அறியலாம்.

# சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

*முனைவர் க.செல்வராணி, கௌரவ விரிவுரையாளர், பாரத ரத்னா புரட்சித்தலைவர் Dr.M.G.R அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலக்கோடு.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர் தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை முறை பழக்கவழக்கங்கள், பண்பாடு, குறிக்கோள் இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிவது இலக்கியங்கள் ஆகும். இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி ஆகும். சங்ககால வாழ்க்கை முறை இயற்கையமைப்பை அடிப்படையாக கொண்டது.சங்ககாலத்தில் பிறப்பால் இனப்பாகுபாடும், தொழிலும் பகுக்கப்படவில்லை. ஆனால் பிறந்த இடத்தால் மக்கள் பாகுபாடும், செய் தொழிலும், வாழ்க்கை முறையும் நிர்ணயிக்கப்பட்டன.

**இயற்கைநிலை**

தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் பாடுபொருளாக அமைவது இயற்கையே. நம் இலக்கிய மரபில் மலை, காடு, வயல், பாலை என்ற ஐவகை இயற்கைக் கூறுகளும் இன்றியமையாத முக்கியப் பங்கு வகிப்பவையாக உள்ளது.

**"மண் திணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**வளித்தலைஇய தீயும்**
**தீமுரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெறும் பூதத் தியற்கை போல"**

என்ற புறப்பாடல் வரிகளில் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் ஐம்பெரும் பூதங்களால் அமைந்ததே இவ்வுலகம் எனும் உண்மை உணர்த்தப்பட்டுள்ளது. இதிலிருந்து பார்க்கும் பொழுது இயற்கையிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் உயரிய கொள்கையினைக் கொண்டவர்களாக சங்ககால மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

**அறநெறித்தன்மை**

மன்னர் எவ்வழியோ, மக்களும் அவ்வழியே என்பதற்கேற்ப அறநெறியிலே மன்னர்கள் ஆட்சி செய்தனர். சங்ககாலத்தில் அரசர்கள் நிகழ்த்திய போர்கள் அறநெறியிலே நடத்தினர் என்று புலவர்கள் புகழ்ந்தார்கள்.

**"ஆவும் ஆனியற் பார்பன மார்க்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்க டனிறுக்கும்**
**பொன்போற் புதல்வர் பெறாஅதீரும்**
**எம் அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென"** **(புறம் 9)**

பசு, பார்ப்பன், பெண்டிர், பிணியாளர், பிதிர்கடன் ஆற்றுதர்குரிய புதல்வர்களைப் பெறாதாரையும், அரசர்கள் போரில் கொல்லக்கூடாது என்பது அறவழிப்பட்ட போரின் அடையாளமாகும் என்று இப்பாடல் கூறுகிறது. மன்னர்கள் போர் புரிய வேண்டுமெனறால் மேலே கூறியவர்கள் அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டுத்தான் போரை நடத்துவார்கள்.

**கடவுள் வழிபாடு**

உலகின் பெரும்பாலான மக்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். கடவுள் நம்பிக்கையும், சமயநெறியும் மனிதனைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தித் தனிப் பண்புடையவனாக்குகின்றன. வேலன் வெறியாடல், பலியிடுதல், குழுவாகச் சேர்ந்து வழிபடுதல் போன்ற நிகழ்வுகளில் அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலுடைய தெய்வங்களே முதன்மையாக இருந்தன. செடி, கொடிகள், மலைமுகடு, விலங்கு போன்றவற்றுடன் அணங்கு,

சூரமகளிர் போன்ற அற்புதத் தன்மைக் கொண்ட சக்திகள் மக்களுக்கு நெருக்கமாக இருந்தன. இயற்கையைப் பண்பாட்டின் அங்கமாக்கும் நிலையில் தொல் சமய நம்பிக்கைகள் தமிழரின் வாழ்க்கையில் ஆழமாக ஊடுருவியிருந்தன.

குறிஞ்சி நிலக் கடவுளான முருகன் - சுப்பிரமணியனாகவும்
முல்லை நிலக் கடவுளான மயோன் - கிருஷ்ணனாகவும்,
மருத நிலக் கடவுளான வேந்தன் - இந்திரனாகவும்
நெய்தல் நிலக் கடவுளான கடலோன் - வருணனாகவும்
பாலை நிலக் கடவுளான கொற்றவை – பார்வதியாகவும்

உருமாற்றப்பட்டமை, அரசியல் பின்புலமுடையது மலைவாழ் மக்களின் எளிய கடவுளான முருகனுக்குத் தந்தையாகச் சிவனும், தாயாகப் பார்வதியும், இன்னொரு மனைவியாகத் தேவசேனையும் புனையப்பட்டது.

**உயரினும் மானம் பெரிது**

தமிழர்கள் மானத்தையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். சேரமான் கணைக்கால் இரும்பொறை என்னும் மன்னன் மானத்திற்காகத் தன் இன்னுயிரையும் நீத்தான் என்று புறம் 74 ம் பாடல் சுட்டுகிறது. சிறையில் அடைக்கப்பட்ட இரும்பொறைக்கு மிகுதியான நீர் வேட்கை, நீர் கேட்ட இரும்பொறைக்கு காலம் தாழ்த்தி காவலாளி இடக் கையில் சிறிதளவே நீரை மண்குவளையில் கொடுக்கிறான்.அதைக் கண்ட அம்மன்னன் எழுதிய பாடல்,

**“குழவி இறப்பினும் ஊன் தடிபிறப்பினும்**
**ஆளன்று என்று வாளில் தப்பார்**
**தொடர்படு நமலியின் இடர்ப்படுத்து இர்கிய**
**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை இன்றி வயிற்றுத்தீ தணியத்**
**தான் இரந்து உண்ணும் அளவை**
**ஈன் மரோ அவடவுலகத்தானே”** (புறம் 74)

என்று எழுதிவிட்ட இரும்பொறை கடைசிவரை நீரே அருந்தாமல் உயிர்விட்டான். நம் தமிழ்மரபில் குழவி இறந்து பிறந்தாலும், சதைப்பிண்டமாக பிறப்பினும், வாளால் கீறி புதைக்கும் வழக்கம் நம் தமிழர் மரபுநிலை.

**அன்புடமை**

அன்புடையோர் பண்புடையவராக விளங்குவர் அன்பு தான் நாம் வாழ்வதற்கும், பிறரை வாழ்விப்பதற்கும் அடிப்படையான பண்பாகத் திகழ்கின்றது. தலைவன் தலைவியின் அன்பின் வலிமையை,

**“யாயும் ஞாயும் யார் ஆகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”** (குறுந் 40)

என்ற பாடலின் வழி தலைவன் செம்மண் நிலத்தில் விழுந்த மழை நீரை பிரிக்க இயலாது, அது போல நம்மையும் பிரிக்க இயலாது என்பதை வலியுறுத்திக் கூறுவதை அறியமுடிகின்றது. தலைவியின் அன்பு நிலையை தேவகுலத்தார்,

**“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”** (குறுந் 3)

என்று அன்பின் பெருமையை யாராலும் அளந்தறிந்து காட்டிட இயலாது என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளார். வினை மேற்கொண்ட தலைவன் வினை முடிந்தால் விரைவில் உன்னை வந்தடைவான் என்பதைத் தோழி தலைவிக்குக் கூறுவதை,

**“உள்ளார் கொல்லோதோழி உள்ளியும்**
**வாய்ப்புணர்வு இன்மையின் புலப்படுத்துகிறாள்”** (குறுந் 232)

என்றுகூறி தலைவனின் அன்பை புலப்படுத்துகின்றாள்.

**இல்லற வாழ்க்கை**

மனம் ஒத்து வாழக்கூடிய அன்பான வாழ்க்கையே இல்லற வாழ்வின் அடிப்படை பண்பாகும்,

"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" (கலித்தொகை)

ஒவ்வொருவரும் கடமையறம் ஆற்றினர். அக வாழ்க்கை சிறப்புற அமைவதைக் கடமையாகக் கொண்டு, மகளிரும் வினையறம் மேற்கொண்டு புற வாழ்க்கையைப் பேணிக் காப்பதை ஆடவரும் தத்தம் கடமையாக மேற்கொண்டனர் இதை,

"வினையே ஆடவர்க்குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென" (குறுந்தொகை)

என்று குறுந்தொகை கூறுகின்றன.

**விருந்தோம்பல்**

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு" (குறள் 86)

வந்த விருந்தினரை உபசரித்துவிட்டு இனிவரும் விருந்தினரை உபசரிக்க காத்திருப்பவன் தேவர்கட்கு நல்ல விருந்தினர் ஆவான் என்கிறது திருக்குறள்.

விருந்தோம்பலில் தலைசிறந்தவர்கள் தமிழர்கள் என்பதற்கு சங்ககால மக்களே சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்திருக்கிறார்கள். தனக்கு கிடைத்தவற்றைத் தானே தனித்து உண்ணாது பலருக்கும் பகிர்ந்து கொடுத்தலே விருந்தோம்பலாகும்.

"அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லைசான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்" (நற் 142)

நடு இரவில்கூட விருந்தினர் வந்தால் அவர்களை இன்முகத்துடன் உபசரிக்கும் நிலை சங்ககாலத்திலே காணப்பட்டது.

"கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேம்கமழ் கதப்பின் கொடிச்சி மகிழ்ந்து கொடு
காந்தள அம்சிறுகுடிப் பகுக்கும்" (நற் 84)

என்ற பாடலின் மூலம் மலைச்சாரலில் கானவனால் அம்பு எய்து வீழ்த்தப்பட்ட முள்ளம் பன்றியின் இறைச்சியை அவன் மனைவி மகிழ்வுடன் தன் ஊரிலுள்ள பலருக்கும் பகிர்ந்து கொடுத்ததை குறிப்பிடுகின்றது.

**நம்பிக்கைகள்**

சங்கத் தமிழரின் பழக்கங்களில் நம்பிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நன்மையைத் தேடும் மனிதனின் பற்றுக் கோடாக நம்பிக்கைகள் துணைநிற்கின்றன. மனதானது அழைக்கப்படும் போது நம்பிக்கை எனும் விழுதைப் பற்றிக் கொண்டு புத்துணர்ச்சி கொள்கின்றான். கூடல் இழைத்தல், விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல், கண்துடித்தல், பல்லிநிமித்தம், தும்மல், எண்கள், கனவு, காக்கை கரைதல், பறவை நிமித்தம், விலங்கு, உன்னம், ஊழ்வினை, மறுமை, கூற்றுவன், சொர்க்கம், நரகம், பேய், விண்ணியல், மழை, பிறை என பல உண்டு.

**கடமை**

சமுதாயத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு கடமை இருக்கிறது. இன்று போல் அல்லாது அக்காலம் போர்த் தொழிலை முதன்மைப் படுத்தியச் சமுதாயமாகத் திகழ்ந்தது.

"ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறநானூறு)

என்ற புறநானூற்று பாடல் வழி அறியமுடிகின்றுது.

**ஈகை**

வறியவனின் கொடுமையான பசியைத் தீர்ப்பவன் கடவுளுக்கு நிகரானவன், பிரதிபல-னை எதிர்பார்க்காமல் கொடுப்பது சாலச்சிறந்தது அத்தகைய பண்பு நம் பழந்தமிழர் பண்பு.

"அறத்தான் வருவதே இன்பம் - வேறு இன்பம்
என்பது இல்லை என்று வாழ்ந்தனர் நம்தமிழர்"

**"செல்வத்துப்பயனே ஈதல்**
**தூய்ப்போம் எனினே தப்புனபலவே"** (புறம் 189)

பிறருக்குக் கொடுக்கக், கொடுக்க செல்வம் வளரும், இல்லையெனில் செல்வம் இருந்த இடமே இல்லாமல் போய் விடும். வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளல் போல், தனியெ-ாருவனுக்கு உணவில்லை எனில் இவ்வுலகை அழித்தல் வேண்டும் என்ற நிலையில் பசியில் வருபவனுக்கு உணவு கொடுத்து அவர்களின் முகம் கண்டு இன்பம் எய்தினர் நம் பழந்தமிழர்.

**"நீர் இன்றியமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"** (புறம் 18)

இவ்வுலக வாழ்விற்கு நீர் அவசியம். உயிர் வாழ உணவு அவசியம். பிற உயிரையும், தன் உயிர்போல் நேசிக்கும் பண்பு நம் தமிழருக்கு உண்டு.

**அரசுரிமை**

அரசுரிமை வழிவழியாக வந்தது. தந்தைக்குப் பின்னர் மகன் பட்டத்துக்கு வருவதே முறை என்பதை,

**"முத்தேன் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்**
**பாறர வந்து பழிவிறற்றாயம்"**

அக்காலத்தில் வழிவழியாகப் பட்டத்துக்கு வருவதை ஒரு பண்பாடகக் கருதியுள்ளனர்.

**முடிவுரை**

சங்ககால மக்கள் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற உயரிய நோக்குடன் வாழ்ந்தவர்கள். அக மற்றும் புற வாழ்க்கையில் தனக்கென உயரிய ஒழுக்கறங்களைப் பின்பற்றி வந்தனர். சங்க இலக்கியங்களில் காணப்படும் மக்களின் வாழ்க்கை முறை உயா-ியது, என்றும் போற்றத்தக்கதாகக் காணப்படுகின்றன. சங்க தமிழர்கள் அக வாழ்க்கையில் மட்டும் இல்லாமல் புற வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினார்கள் என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகின்றது.

# புறநானூற்றில் அரசியல்

***செ.கார்குழலி,** பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை.

**முன்னுரை**

அரசியல் என்பது மக்களை நல்வழிப்படுத்திச் செல்லும் ஓர் அங்கமாகும். மனிதனுடைய அகவாழ்வையும், புறவாழ்யையும் செம்மைப்படுத்திச் செல்வது அரசியலாகும். மன்னன் எவ்வழி அவ்வழியே மக்களும் செல்வர். மன்னன் நல்வழியில் சென்று நாட்டு மக்களையும் நல்லாற்றுப்படுத்த வேண்டும். ஆள்வது அரசு, ஆளப்படுவது குடி, இந்த இரண்டு சேர்வதே அரசியலாகும். பண்டைய நாளில் தமிழக அரசியல் குறித்து அறிய உதவுவது புறநானூறும் பதிற்றுப்பத்தும் ஆகும், புறநானூற்றில் காணப்படும் அரசியல் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அரசு அரசியல் விளக்கம்**

அரசியல் என்பது "அரசுகள் அல்லது அரசியல்" அமைப்புகளை இயக்கி நிருவகிக்கும் செய்முறைக்கலை அல்லது அறிவியல் ஆகும். அரசியலுக்காகப் பயன்படுத்தப்படும் 'Politics' என்னும் ஆங்கிலச் சொல் பாலிஸ் (Polish) என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. பாலிஸ் என்ற சொல் பட்டினம், மக்கள் வாழும் இடம் என்ற பொருளைக் குறிக்கம். எனவே, வாழும் மக்களின் நலத்தை நாடுவதை 'அரசியல்' எனலாம். தனிமனிதனின் தனி உரிமைகளைப் பாதுகாப்பதும், சமூக நலனுக்காக இயங்கும் அமைப்பினையும் 'அரசியல்' எனக் கூறலாம்.

மானிடரின் மேல் நிலைக்கும், அவரின் கீழ்நிலைக்கும் இடையே போராட்டம் நிகழ்கிறது. இப்போரட்டத்தைத் தவிர்க்க அரசியல் தேவைப்படுகிறது. ஒரு மனிதனின் சுயநலமூலம், அறமல்லாத செயல்களும் சமூகத்தில் உள்ளவர்களைப் பாதிக்காவண்ணம் இவ்வரசியல், ஒருங்கமைப்பை ஏற்படுத்திச் சமூகத்தில் ஒருமைப்பாட்டையும், நீதியையும், ஒழுக்கத்தையும் கட்டிக் காப்பதாகக் காணப்படுகிறது. இவ்வகை ஒழுங்குகள் முறைமைகள் (அறங்கள்) அரசியல் அறங்களாக அமைகின்றன.

'அரசியல் அறம்' என்பது அறங்கள் பலவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று எனலாம். அரசனும், அவனைச் சார்ந்த அரசும் ஒழுங்காக அமைந்தால் நாடும், அதிலுள்ள மக்களும் அவ்வாறே காணப்படுவர். அரசுக்கு அணியாய் திகழும் அரசன் நாட்டுக்குச் சிரசு போன்றவன். சிரசு சீராய் இருந்தால் சரீரமாகிய நாடும், நாட்டு மக்களும் சீராய் காணப்படுவர். எனவே, அரசியல் அறம் நாட்டுக்கு நன்மை தருவதாகும்.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்" (குறள்-388)**

என்பர் வள்ளுவர். 'முறைமை' யோடு (அறத்தோடு) ஆட்சிபுரிந்து மக்களைக் காப்பாற்றும் மன்னனை, அம்மக்களால் 'தெய்வம்' என்று உயர்த்திப் பேசப்படுவான். ஆக இறைவனோடு ஒப்பிடக்கூடிய ஒரு நிலையில் காணப்படும் நபர் 'அரசனே' எனலாம். அரசன் நியாயம் செய்பவனாக, நீதியை நடப்பிப்பவனாக, பகைவரிடமிருந்து காப்பவனாக, உயர் குணங்கள் நிரம்பப் பெற்றவனாக, காணப்படுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

"அஞ்சாமை, அல்லல் நீக்கல், அளிஉடைமை, அறன் இழுக்காமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை இன்சொல்வுடைமை, ஈகையுடைமை ஊக்கமுடைமை, கடுஞ்சொல் உரையாடாமை, காட்சிக்கு எளிமையுடைமை, செவிகைப்பச் சொற்பொறுத்தல், துணிவுடைமை, தூங்காமை, பெண்வழிச்சேராமை, பொச்சாவாமை,

மடியின்மை, மறன் இழுக்காமானம் உடைமை" போன்றவை அரசனின் பண்புகளாக காணப்படவேண்டுமென்பார் வள்ளுவர்,

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு"** (குறள் -385)

என்பார் வள்ளுவர்,

மேலும் அரசன் நியாயமான முறையில் விசாரணை நடத்த வேண்டுமென அறிவுறுத்துவது காணமுடிகிறது.

**"அநியாயஞ்செய்வது ராஜாக்களுக்கு அருவருப்பு**
**நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்"** (நீதி 16:12)
**"நியாயத்தினால் ராஜா தேசத்தை**
**நிலைநிறுத்துகிறான்"** (நீதி 29:4)
**"ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய்**
**விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம்"** (நீதி 29:14)

என்றும் விவிலியப்பகுதிகள் அரசனின் நீதியினால் அவனின் ஆட்சி சிறப்பதோடல்லாமல், நாட்டின் அமைதியும் நிலைநிறுத்தப்படுகிறதென்ற உண்மை அறியப்பெறுவது காணலாம்.

**அரசு செலுத்தும் முறை**

மன்னன் முறையறிந்து ஆட்சி செய்ய வேண்டும். கொடுங்கோலாட்சி நடத்தினால் மக்களுக்கும், அரசனுக்கும் இடையே நல்லுறவு ஏற்படாது. அரசன் என்பவன் ஆட்சி செய்யும் முறையினை வள்ளுவர்.

**"படைகுடி கூழ் அமைச்சுளப்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு"**

என்று கூறியுள்ளார். முன்னை நீதி தவறாது அறநெறிப்படி நாட்டை ஆள வேண்டும் இல்லையெனில் மன்னரது ஆட்சி துன்பத்தையே விளைவிக்கும் இதனை,

**"கொடுங்கோல் மறமன்னா் கீழ்வாழ்தல் இன்னா"**

என்றும்,

**"முறையின்றி ஆளும் அரசின்னா"**

என்றும், நீதி இலக்கியமான இன்னாநாற்பது கூறுகின்றது. புறநானூற்றில் நரிவெருஉத்தலையார், சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் அரசனிடம்,

**"அருளும் அன்பும் நீக்கி நீங்கா**
**அளிதோ தானே அது பெறலருங்குரைத்தே"** (புறம் 5)

என்ற அடிகளின் மூலம் அன்பும் அருளும் இல்லாத கீழ்மக்களோடு சேராது நின்நாட்டு மக்களைக் குழந்தை வளர்ப்பது போலப் பாதுகாப்பாயாக என்று அறிவுறுத்துகின்றார்.

**புறநானூற்றில் அரசியல்**

சங்க இலக்கிய நூல்களுள் புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய நூல்களில் அரசியல் சிந்தனைகள் நிறைந்து காணப்படுகின்றன. ஆட்சி அமைப்பு முறைமையும் வெளிப்படுகின்றது. இவ்விலக்கியங்களில் அரசருக்குரிய பண்புகள் அரசருக்குரிய கடமைகள் போர்முறை, சமதா்ம அரசியல் பகைவருக்கு அருள்நீதி வழங்கல், புலவர்களைப் போற்றுதல் முதலிய பண்புக் கூறுகள் இடம் பெற்றுள்ளன.

**அரசர்**

புறநானூற்றில் அரசர் குறித்த செய்திகள் பலவிடங்களில் பேசப்படுகின்றன. அதற்குச் சான்றாக.

**"சீறூர் மன்னர் ஆயினும், எம் வயின்**
**பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரே"** (புறம் 197)
**"புரவிற்கு ஆற்றாச் சிறூர்த்**
**தொன்மை சுட்டிய வண்மையோனே"** (புறம் 330)
**"காய்நெல்லறுத்துக் கவளங் கொளினே**
**மாநிறை வில்லதும் பன்னாட்காகும்"** (புறம் 184)

மேலும் அரசர்க்கும் அரசு அதிகாரிகளுக்கும் உரிய அறம் நியாயமான முறையில் பொருள் ஈட்டலும், அதைக் காத்தலும், உதவுவதும் சிறந்து விளங்கினர்.

**ஆட்சிமுறை**

அரசா் உலகில் உயிரும் உடம்பும் சேர்ந்த வாழ்க்கை வாழ உணவும் நீரும் இன்றியமையாதவை என அறிந்து. அதற்கேற்ப நாடெங்கும் நீர்வளம் பெருக்ககுளம் போன்ற நீர் நிலைகளை அமைக்க வேண்டும், நீரினை அணைக் கட்டித்தேக்கி நாட்டில் நீர் வளம் பெருக்கிப்பயிர் வளம் சிறக்கச் செய்தால் அரசனின் புகழ் சிறக்கும், என்று கூறினர்.

அரசன் தந்தையாக விளங்கினான் என்ற செய்தியையும் மக்களைத் தாய்ப்போல் காத்தான் என்ற கருத்தையும் வலியுத்தும் வகையில்

**"புலி புறங்களுக்கும் குருளை போல**
**மெலிவு இல் செங்கோல் நீ புறங்காப்ப"** (புறம் ப.42)

தமது நாட்டில் யாரும் பசியால் வாடக் கூடாது என்பதில் கவனம் கொண்டிருந்தான். நாட்டில் திருட்டுப்பயம் இல்லாமல் மக்கள் எங்கும் நடமாடமுடிந்தது. மன்னனுடைய திருவில் ஆட்சிச்சிறப்பை விவரிக்கும் வகையில்

**"அறிவும் ஈரமும், பருங்கண்ணோட்டமும்**
**சோறு படுக்கம் தீயொடு**
**திருவில் அல்லது கொலைவில் அறியார்**
**நாஞ்சில் அல்லது படையும் அறியார்.**
**…………………………………………………..**
**…………………………………………………..**
**பகைவர் உண்ணா அருமண்ணினையே"** (புறம் பா.20)

என்னும் பாடல் வாயிலாக புறநானூற்றில் வரும் குறுங்கோழியூர் கிழார் பாடல் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு சங்ககால அரசர்கள் நல்லாட்சி நடத்தி மக்களை நல்வழிப்படுத்தி அரசியல் வாழ்வைச் சிறக்கப் செய்தனா் என்றக் கருத்தை நிலை நாட்டுகின்றது.

**முறைசெய்தல்**

அரசன் தன்னுடைய நன்மைக்காக இன்பத்துக்காக ஆள்பவனல்ல, நாட்டின் நன்மைக்காக வாழ்பவன், குடிமக்களின் குறைகளைப் போக்குவதற்காக வாழ்பவன் என்ற கொள்கையை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னேயே தமிழர்கள் வலியுறுத்திவந்தனர். குடிமக்களுக்காகத்தான் அரசு குடி மக்களின் ஊழியன் தான் மன்னவன் என்ற கருத்து நிலைத்திருந்தது. இதனால் தான் பண்டைய தமிழ் மன்னர்கள் அநீதிக்கு அஞ்சினர். குடிமக்களின் எண்ணப்படி கோலோச்சினா நீதிக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர். உலகத்துக்கு உயிர் அரசுதான் என்பது பழந்தமிழா் கருத்து.

உலகத்திற்கு நெல்லும் உயிர் அன்று தண்ணீரும் உயா் அன்று. இப்பரந்த உலகம் மன்னைத்தான் உயிராகக் கொண்டிருக்கின்றது. ஆகையால் "நான் தான், இவ்வுலகத்திற்கு உயிர்" என்ற அறிந்து அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்வது. வேற்படைகள் மிகுந்த சேனைகளையுடைய அரசன் கடமையாகும்.

**"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"** (புறம் 186)

இப்பாடல் அரசியலின் முதன்மையையும் அரசனுடைய கடமையையும் கூறிற்று. நாட்டின் முன்னேற்றத்தை மக்களின் நல்வாழ்வைக் கருத்திற்குகொள்ளாத ஒரு அரசாங்கம் உள்ள நாட்டிலே வறுமைதான் குடிகொண்டுவாழும். ஆதனால் நாட்டிலே நீர்பாசன வசதிகளை ஏற்படுத்த வேண்டும். உழவருக்கு ஊக்கமூட்ட வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான கைத்தொழிற் பண்டங்களைப் பெருக்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

**மக்களாட்சி**

புறநானூற்றுக் காலத்தில் மன்னர்களே நாட்டை ஆண்டு வந்தனர். அது முடியாட்சியாய் இருந்தபோதும் குடியாட்சியாய்த் திகழ்ந்தது. புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய பெண்பாற் புலவர்களின் சிறந்து நின்ற ஔவையார் ஒரு நாடு செம்மையாக, சிறந்ததாக, ஒழுக்கத்தைப் பேணிக்காப்பதாக விளங்குதல் வேண்டும். அதற்கு அந்நாட்டில் வாழும் மக்கள் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். அந்நாட்டின் நிலம் வளம் மிக்கதாகவோ, வளமற்றதாகவோ, மேடாகவோ பள்ளமாகவோ கூட இருக்கலாம். அதைக்கொண்டு அந்நாட்டை நல்லது என்றோ தீயது என்று கூற முடியாது. நிலம் எவ்வாராயினும் அதில் வாழ்பவர் நல்லவராகி வாழுவதை வைத்துதான்.

அந்நாட்டை உயர்வுமிக்கதாகக் கூற முடியும் என்பதை,

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"** (புறம்.187)

என்ற பாடல் உணர்த்துகிறது.

**"நின் ஒன்று மொழிவல்**
**குழவி கொள்பவரின் ஓம்புமிதி"** (புறம்.5)

தாயைப்போல் மக்களைக் காக்கவேண்டும்.

**முடிவுரை**

புறநானூற்றில் அரசியல் என்னும் இக்கட்டுரையின் மூலம் அரசின் செயல்கள் ஆட்சிமுறை மக்களாட்சி, முறை செய்து காப்பாற்றிய முறை பண்பட்ட அரசியல் என்பனவற்றை அறியமுடிகின்றது.

# தோல் புதினத்தில் தொழிலாளர்களின் நிலை

*மா.கவரிமாமொழி, தமிழ்த்துறை, ஸ்ரீ சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரி, சேலம்-3.

நம் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளை படம்பிடித்துக் காட்டுவது நாவல் இலக்கியமாகும். தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளையும், தொழிலாளர்களுக்கு எதிராக செயல்படும் முதலாளிகளைப் பற்றியும், தொழிலாளிகளுக்கு அதனால் ஏற்படும் மனரீதியான பிரச்சனைகளையும், உடலில் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**தோல் புதினம் அறிமுகம்**

தோல் புதினம் தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் ஆண், பெண் தொழிலார்களின் அவல நிலை, அவர்களின் ஒற்றுமை, அவ்வொற்றுமையைக் குலைக்க வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் முதலாளிகள், முதலாளிகளுக்கு எதிராக நடக்கும் போராட்டங்கள் பற்றி கூறிய முதல் புதினம் தோல் ஆகும். சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வாழ்வை போராட்ட உணர்வோடும், நம்பிக்கையோடும் எழுச்சியோடும் சித்தரித்துக் காட்டுகிறது இப்புதினம். மேலும் தோல் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கை சோகமும், துக்கமும் நிறைந்த வாழ்க்கையாகவே இருந்தது என்பது நம்மால் உணரமுடிகிறது.

**முதலாளிகளின் பதுக்கல்**

முதலாளி வர்க்கத்தினர் ஒன்று சேர்ந்து தொழிலாளர்களை தண்டிக்கும் வண்ணம் மக்களின் அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்தனர். இதனால் தேசம் முழுவதும் உணவு நெருக்கடியும், பணப்பற்றாக்குறையும் நிலவியது. தோல்தொழிற்சாலை ஊழியர்களின் வீட்டில் அடுப்பு பற்ற வைத்துக்கூட ஆறேழு நாட்கள் ஆனது. அவர்கள் உண்ண உணவின்றி வயிற்றுப் பசியால் வாடினர். இதனை,

**“ஈர விறகுக்கும்**
**ஆறேழு நாள்**
**ஏறிய மறந்த**
**அடுப்புக்கும்**
**போராட்டம் நடந்தபடி**
**ஒரு குடிசையில்**
**புகை எழுப்பி**
**மேகம் சேரும்**
**ஆனால்**
**விறகேதுமின்றி**
**வெந்து கொண்டிருக்கும்**
**மனசு**
**எரிந்து கொண்டிருக்கும்**
**வயிறு”**[1]

என்ற இரா. வேலுச்சாமியின் கவிதை வரிகள் இங்கு பொருத்தமுடையாதாக அமைந்துள்ளது.

**வறுமைநிலை**

மக்கள் தங்கள் அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கு முடியாமல் தவிக்கும் நிலையே வறுமை எனலாம். வறுமையின் பிடியில் உள்ள குடும்பம் நரகமானது. வாழ்வில் இன்பம் ஒன்று இல்லாமல் செய்து விடுவது வறுமையே. இதனை வள்ளுவர்,

**“இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையில்**
**இன்மையே இன்னா தது”**[2]

மனிதர்களின் வாழ்க்கை நல்வழியிலிருந்து தீய வழிக்குச் செல்ல வறுமை காரணமாக அமைகிறது. இவ்வாறு முதலாளிகளின் பதுக்கல்களால் தொழிலாளர்கள் வறுமையில் வாடினர்.

**பெண்கள் நிலை**

தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் பெரும்பாலும் முடித்தள்ளும் பணியை மேற்கொண்டதால், பலர் நோய்வாய்ப்பட்டனர். ஆடு மற்றும் மாட்டு தோலின் வாடைத் தாங்காமல் அடிக்கடி வாந்தி எடுப்பர். சுண்ணாம்புத் தண்ணீரில் இறங்கி தோலை அலசியதால் கால்கள் வெந்து ரணமாகி காய்ச்சல் வந்துவிடும். உடம்பு சரியில்லை என்றாலும் ஒருநாள்கூட ஓய்வு எடுக்க முடியாத நிலையில் அவர்களின் நிலைமை இருந்தது. அப்பெண்களில் பெரும்பாலோர் முதலாளிகளுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் விருந்தாகவே ஆகின்றனர். இதனால் இறந்த பெண்களும் உண்டு. தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் உடலால் மட்டுமின்றி, முதலாளிகளால் உள்ளத்திலும் வலியோடு வாழ்ந்தனர்.

**ஆண்கள் நிலை**

ஆண்கள் வேலைக்கு சேரும்முன் ஒப்பந்த அடிப்படையிலே வேலைக்கு அமர்த்தப்படுவர். அவ்வொப்பந்தம் முடியும் முன்னர் யாராவது சென்றால் அவர்களை அடியாட்கள் வைத்து மிரட்டி தூக்கிட்டு வந்துவிடுவார்கள். மீறிப்பேசினால் அடித்து துன்புறுத்தப்படுவர். திடம் வாய்ந்த தோள்களையும், உடைய ஆண்கள் சுண்ணாம்பு குழியில் இறங்கி வேலை செய்ததால் உடம்பே ரணமாகி குஷ்டரோகியைப் போல் காணப்பட்டனர். ஒரு சிலருக்கு சுண்ணாம்புக் கால்வாயில் நின்று தோளினை அலசுவதால் கைகளும், கால்களும் வெந்தும், பாதங்களில் வெடிப்பும் ஏற்பட்டு நடக்கவே சிரமப்பட்டனர்.

**உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லாமை**

தாழ்ந்த குலத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வரலாற்றுக்கு எட்டாத நீண்ட காலம் முதற்கொண்டே தமது சொந்த நாட்டு மக்களால் இழிவு படுத்தப்பட்டு வருவதும், உழைப்புக்கு தகுந்த ஊதியம் பெறாமல் மௌனமாக உழைத்து வருவதும் உணர முடிகிறது.

**“இந்தியாவின் தொழிலாளி மக்களே! உங்களுடைய மௌனமான உழைப்பால் பல நாடுகள் மேன்மை அடைந்தன! ஆனால் நீங்கள் பெற்றது என்ன?”**[3]

என்ற விவேகானந்தரின் வினாவிற்கு இன்னும் விடையேதும் கிடைக்கவில்லை.

**சேரி மக்களின் வாழ்விடம்**

ஊருக்கு ஒதுக்குபுறமாக ஆற்றினை ஒட்டி இருக்கும் பகுதிதான் சேரி. அப்பகுதி சுற்றி குப்பைமேடும், அதில் அழுகி கிடக்கும் மாமிசங்களை உண்ண நாய்கள் சண்டையிட்டுக்கொள்ளும் இப்படிப்பட்ட சூழலில் தான் சேரிமக்கள் வாழ்ந்து வருகின்றனர். வடக்கே வரும் தென்றல் காற்றும் ஊருக்குள் வரும்போது தீட்டுப்பட்டுவிடக்கூடாது என்பதற்கே அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

> **“தெளிந்த ஆற்றுநீர் அருகில் இருக்கும்போதே அவர்களுக்கு சாக்கடை நீரை நாம் கொடுத்து வந்திருக்கிறோம்”**[4]

என்ற வரிகள் மேல்தட்டு மக்கள் அடித்தட்டு மக்களை அடிமைப்படுத்தி வந்த நிலைப் பற்றி விவேகானந்தர் கூறியக் கருத்து இங்கு ஏற்புடையததாக உள்ளது. அப்பகுதியை சேர்ந்த ஆண்கள் தண்டனைக்கு உட்படுத்துவதும், பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதும் முதலாளிகளின் உரிமைகளின் ஒன்றாகவே கருதப்பட்டது. நாதியற்ற அப்பாவி மக்கள் தங்களது பிறப்பையும் தலைவிதியையும் நினைத்து வருத்தமடைந்தனரே தவிர வேறு எந்த வழியும் அவர்களுக்குப் புலப்படவில்லை.

**முடிவுரை**

தோல் தொழிலாளர்கள் வாழும் பகுதி, போதிய வருமானம் இன்றி அவர்கள் தவிக்கும் நிலை, முதலாளிகளின் செயல்களால் அவர்கள் வாழ்வில் ஏற்படும் வறுமை, தோல் தொழிலால் ஏற்படும் உடல்ரீதியான பாதிப்புகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் ஏற்படும் கொடுமைகள் போன்றவற்றை இக்கட்டுரை விளக்கும் வாழ்க்கை நிகழ்வுகள் ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

1. இரா. வேலுச்சாமி, கனவுத்தேர்வுகள்- ப.எண்:12
2. திருக்குறள், குறள் எண் :1041
3. சுவாமி விவேகானந்தர், புதிய இந்தியாவைப் படைப்போம்- ப.எண்:16
4. மேலது ப.எண்:24

**துணைநூற்பட்டியல்**


1. சுவாமி விவேகானந்தர் - புதிய இந்தியாவைப் படைப்போம், ராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர,சென்னை 014.
2. பரிமேலழகர் - திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை 008.
3. வேலுச்சாமி. இரா - கனவுத்தேர்வுகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

# சங்க இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் மு.சங்கரழகு,** தமிழ்த்துறைத் தலைவர், என்.பி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நத்தம், திண்டுக்கல்.

**முன்னுரை**

இலக்கியம் என்பது வாழ்க்கையை வழிமொழிந்து சொல்வதுதான் இலக்கியம். வாழக்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம் என்பர். தமிழ் இலக்கியங்கள் தனிமனிதனை சுத்திகரிக்கும் ஆக்கப்பணியை செய்து வருகிறது. இவ்வகையில் தமிழ் இலக்கியங்களை வாழ்வியல் இலக்கியங்கள் என்றும் கூறலாம். மனிதனின் சமுத்திர உணர்ச்சிகளைச் சின்னச் சின்ன சிப்பிகளில் வைத்துக் காட்டுகிறது. இலக்கியங்களின் கருத்துக்குவியல்கள் வாழ்வை உயர்த்தும் வாழ்வியல் கருத்துகளைக் கூறி அவனை வாழ்வாங்கு வாழச் செய்கிறது.

மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கைச் சூழல் இன்றைய சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது. மனிதப் பண்புகளைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமற்ற நிகழ்வுகளால் மட்டுமே நகர்ந்து கொண்டிருக்கிறது இன்றைய சமூகம் இதனை நெறிப்படுத்த மேம்பாடடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வாழ்வியல் சிந்தனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தனிமனித ஒழுக்கம்**

வாழ்வியல் ஒழுக்கம் என்பது நற்பண்பாகும். நன்நெறிகளை பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வில் மேம்பட்ட மனிதராக வாழ முடியும். தனிமனித ஒழுக்கமே சமூகம் மேம்பட அடிப்படை காரணமாக இருக்கும். தனிமனித வாழ்வியல் ஒழுக்கத்தை அனைத்து அற இலக்கியங்களும் முதன்மைப்படுத்துகின்றன. பழமொழி நானூறு ஒழுக்கத்தை விட உயர்ந்தது ஒன்றுமில்லை என்பதை

**"கல்லாதவரிடைக் கட்டுரையின் மிக்கது ஓர்**
**பொல்லாதது இல்லை ஒருவருக்கு-நல்லாய்**
**ஓழுக்கத்தின் மிக்க இழவு இல்லை இல்லை**
**ஒழுக்கத்தின் மிக்க உயர்வு" (64-பழமொழி நானூறு)**

எனக்கூறும் நல்லொழுக்கமே செல்வம் என்கிறது நான்மணிக்கடிகை. அதே வேளையில் ஒழுக்கம் தவறியவர்களிடத்துச் செல்வம் தங்காது என்று

**"திருவும் திணை வகையான நில்லார் பெருவலிக்**
**கூற்றவும் கூறுவசெய்து உண்ணாது ஆற்ற**
**மறைக்க மறையாதாம் காமம் முறையும்**
**இறை வகையான நின்றுவிடும்" (39- நான்மணிக்கடிகை)**

எனப் பகர்கிறது. கல்வி கற்றால் ஒழுக்கம் வரும் என்று அனைத்து இலக்கியங்களும் கூறுகிறபோது முதுமொழிக்காஞ்சி ஒழுக்கம் கல்வியை விட சிறந்தது என்கிறது.

**"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**ஓதலின் சிறந்தன்று. ஒழுக்கம் உடைமை" (1-முதுமொழிக்காஞ்சி)**

**அறம்**

மனித இயக்கத்தின் வாழ்வியல் அடிப்படைப் பண்புகளே அறமாகும். அறம் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களுள் பல இடங்களில் வந்துள்ளது அறநெறியே மாந்தரின் நல்வாழ்வுக்கு உகந்தது. அறம் என்பது நற்செயல் என்பதைச் சுட்டும் கலைச்சொல், அறம் என்ற சொல் நன்மை, ஈகை, நீதி முதலிய பொருள்களில் வழங்கலாயிற்று, பொருள்களையும் தன்னுள் தழுவி நிற்பது அறம். பொதுவாக நல்லொழுக்கமும், நற்செய்கைகளும் அறம் என்று அறியப்படும். அறம் மனிதனில் வாழ்வியல் கூறுகளில் ஓன்று தமிழ் இலக்கியங்கள் அறம் பற்றி அதிகம் பேசுகின்றது.

**இல்லறம்**

அறநெறியில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை வேறு நெறியில் சென்று பெற்றிட இயலாது.

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பொறுவ தெவன்" (குறள் -46)** என வள்ளுவர் கூறுகிறார்.

இல்லறம் என்பது இல்வாழ்க்கையைக் குறிப்பதாகும். இது ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்வதாகும்.

திருமணம் என்பது உடற்சேர்க்கையன்று அது உணர்வுகளின் சேர்க்கை. திருமணம் புரிந்து இல்லறத்தை நடத்துவது இன்பத்திற்காக மட்டுமல்ல அறத்திற்காகவும் என்பது பழந்தமிழ்க் கொள்கையாகும். இல்லறம் துறவறத்திற்கு முரணபட்டதன்று. இளமையில் முதிர்ச்சி மூப்பதல் போல இல்லறத்தின் முதிர்ச்சி துறவெனக் கொள்ளல் வேண்டும்.

இல்லறம் நடத்தி இறுதிக் காலத்துத் தமக்குக் காவலாக அமைந்த மக்களோடு கூடிய-ிருந்து அறத்தை விரும்பும் சுற்றத்தோடு சிறந்த பணிகளைச் செய்தல் இல்லற வாழ்வு நடத்தியதன் பயன் எனத் தொல்காப்பியம் கூறியுள்ளதை காணலாம்.

**"காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களோடு துவன்றி**
**அறம்புரி சுற்றமோடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்தவன் பயனே" (51-தொ.பொ.கற்பு)**

மனத்தூய்மை உடையவர்க்கே நன்மக்கள் வாய்ப்பர். அதனால் கணவன் மனைவி பண்பினராய் இருத்தல் வேண்டும். நன்மக்களை பெற்ற தந்தை அவர்களை அவையத்து முந்தியிருப்பச் செய்தல் வேண்டும. சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே என்று புறநானூற்றுப் பாடல் புகழும். இல்லறம் பற்றிய இல்லாத கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களில் இல்லை.

**விருந்தோம்பல்**

சங்ககால மக்கள் ஈதலையும் விரும்தோம்புதலையும் இரு கண்களாகக் கருதி அவற்றை வாழ்வில் பின்பற்றி வந்தனர். விருந்து என்பதற்குப் புதுமை என்று விளக்கமளிக்கிறது தொல்காப்பியம். முன்பின் அறியாத புதியோர்க்கு எளிய உணவாயினும் அதனைப் பகிர்ந்தளித்து உண்ணும் குணம் சங்கத்தமிழர்களிடைய மிகுந்து இருந்தது.

நல்லியக்கோடன் தன்னை நாடி வந்த பாணர்களுக்குப் பரிசில் கொடுப்பது மட்டுமன்றி விரும்தோம்புதலிலும் குறைவில்லாதவன் தான் அரசனாக இருந்தபோது விருந்தளிக்கும் போது முன்னின்று செய்யக் கூடியவன்.

**"பல்வேறு அடிசில்**
**விளங்கப் பொற்கலத்தில் விரும்புவன பேணி**
**ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி. (244-245 சிறுபாணாற்றுபடை)**

என்னும் அடிகள் இதற்குச் சான்று.

தமிழ் இலக்கியங்களில் விரும்தோம்பல் விரும்பி தொடா்ந்து கடைப்பிடித்து வந்த வாழ்வியல் நிகழ்வு ஆகும். தமிழர் விருந்தினர் உண்டபின் எஞ்சிய உணவையே மகிழ்வுடன் உண்டனர். இதனை

**"விருந்து உண்டு எஞ்சிய மிச்சம் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது"**

என்னும் அடிகள் மூலம் அறியலாம்.

**ஈகை**

ஈகை என்பது எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றித் துன்புற்ற ஒருவர்க்கு அளித்தலாகும். பொருள் ஈட்டினால் மட்டுமே போதாது அதை ஈதலும் வேண்டும் அதனால்தான் புறநானூறு,

**"செல்வத்துப் பயனே ஈதல்" (8-புறநானூறு)** என்கிறது.

**"ஆற்றுதல் என்பது அலந்தவா்க்கு உதவுதல்"** எனக் கலித்தொகை சுட்டுகிறது தோண்ட தோண்ட நீர் ஊறுவது போலக் கொடுக்கக் கொடுக்கத்தான் செல்வம் பெருகும் என்ற கருத்தும் நிலவியது. சான்றோரின் நெறியிலே வாழ்ந்தவன் ஆய் அண்டிரன் புறநானூற்றிலே அவனைப் பற்றி ஒரு செய்தி,

**"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறிவிலை வாணிக னாயலன் பிறகும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப் பட்டன் றவன் கைவண்மையே" (134- புறநானூறு)**

அடுத்தவர்க்கு கொடுத்தல் என்பதை வாழ்வில் தலையாயக் கடமையாக மதித்துள்ளனா் அக்கால மக்கள். கபிலா் பாரியின் ஈகையைப்ப பின்வருமாறு சுட்டுவர்.

**"முந்நூறு ஊறும் பாசிலா் பெற்றனா்**

**யாமும் பாரியும் உளமே**

**குன்றும் உண்டுநீர் பாடினீர் செலினே"** (110-புறநானூறு)

தமக்கென எதையும் சேர்த்து வைக்காது ஈகை செய்து இன்புற்று மகிழ்ந்தனர் என்று மன்னர் தம் கொடைப் பண்பினைக் குறிப்பிடுகின்றது. இதைத்தான் பின்னால் வந்த ஒரு திரைப்படம் கவிஞன்

**"அள்ளிக் கொடுத்து**
**வாழ்பவர் நெஞ்சம்**
**ஆனந்தப் பூந்தோப்பு"** என்றான். எனவே ஈகை வாழ்வில் நிகழ்வில் முக்கியத்தவம் பெற்றது.

**கல்வி**

கல்வியின் மகத்துவத்தை உணர்ந்தவர்களே சான்றோர்கள். கல்வி கற்க வேண்டுமெனில் ஆசிரியர்க்கு உரிய மரியாதை செலுத்தி கற்க வேண்டும். ஆசிரியர்களைக் காப்பதும் மாணவர்களின் இன்றைய கடமையாகக் கூறப்படுகிறது. கல்வியானது தாயின் மனதையும் மாற்றும் ஆற்றல் பெற்றது. சாதி வேறுபாட்டைக் கூட மாற்றவல்ல் சக்தி வாய்ந்தது கல்வி, அதனால் தான் ஔவையாரும் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எனக் கூறுகிறார்.

"கண்ணுடையோர் என்போர் கற்றோர்" என்று வள்ளுவரும். "கல்லாதவன் வாழும் வீடு வெளிச்சமில்லா வீடு" என்று புரட்சி கவிஞன் பாரதிதாசனும் எழுத்தறிவின் அவசியத்தை பாடினார்.

**" எழுத்து**
**விதைகள்**
**இதயங்களில்**
**தூவப்படும்**
**போது**
**செழித்து**
**வளர்வது**
**ஒரு**
**தனி மனிதன்**
**அல்ல**
**சமுதாயம்"**

என்று கவிஞர் மு.மேத்தா கல்விச்சிநதனைகளைகல்வெட்டாய்ப் பதித்து வைத்துள்ளார்.

**பொதுவுடைமை**

இயற்கையின் மூலம் பொதுவுடைமைச் சிந்தனைகளைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்துகிறார் கவிஞர் வைரமுத்து "வானம்" பற்றி கவிதையில்

**"குனிந்து குனிந்து**
**கூன் விழந்த மனிதா !**
**வான் பார்க்க நிமிர்**
**வானம் முழுக்க**
**உனக்கு**
**நீ ஏன்**
**வரப்புக்கு போராடுகிறாய்? "**

என்ற வரிகள் தொழிலாளர்களின் நிலையைச் சுட்டி, அவர்களுக்கு ஒரு புத்துணர்வை ஏற்படுத்துவது போல் அமைகிறது. இன்றைய வாழ்வில் அடிமைத்தனத்தை நீக்கி, சுய சிந்தனையோடு வாழவேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. குனிந்தே பழக்கப்பட்டவனுக்குத் திடீரென நிமிர முடியவில்லை. அதனால் குனிந்து கொண்டே செல்லாதே, உன் வாழ்கைத் தரத்தை உயர்த்தப்பார். இந்த வானம், பூ, எல்லாம் உனக்கு பிறகு எதற்குப் போராடுகிறாய் என்று கேள்விக்கேட்டு அவனைச் சிந்திக்க வைக்கிறார்.

**முடிவுரை**

நாம் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க விரும்புகின்றோம். உயர்ந்த இலட்சியமுறை மனிதர்களை உருவாக்குவதன் மூலமாகத்தான சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். மனிதர்களை உருவாக்குவதற்குப் பெருமளவு தமிழ் இலக்கியங்களில் உள்ள வாழ்வியல் சிந்தனைகள் உதவும். பல்வேறு வகைகளில் விழிப்புணர்வை ஊட்டி மனிதம் காக்கப் பயன்படுகிறது இலக்கியங்கள்.

# கொங்கு வேளாளரின் வாழ்வியலில் பொருள்சாரா பண்பாடு

***முனைவர் ந.மணிமேகலை,** தமிழ்த்துறைத்தலைவர், காந்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ந.கந்தம்பாளையம்.

மனித குலம் குழுக்களாக வாழ்க்கை நடத்தியபோது சில வழக்கங்களைச் செயல்படுத்தி வந்தனர். இவ்வாறு வாழ்ந்த குழுவினர் நில அமைப்பு, பொருளாதாரம், உணவு, உடை, தெய்வ நம்பிக்கை போன்ற காரணங்களால் பல வாழ்வியல் நெறிகளைப் பேணி வந்தனர். இனக்குழு வாழ்க்கையை மேற்கொண்ட மக்களின் வாழ்வு முறைகள், இடம் பெயர்தல், பிறமக்களுடன் கலந்து பழகுதல் போன்றவற்றால் பழக்கவழக்கங்களில் மாற்றங்கள் தோன்றுவதும் இயல்பாகும். ஒரு குழுவால் பேணப்பட்ட வாழ்க்கையின் நெறிமுறைகள் காலமாறுதல்களால் அக்குழுவினரால் கைவிட்டுவிட நேரிடும் சூழல்களும் உருவாகும். புதிய நடைமுறைகள் வாழ்வில் இணையவும் வாய்ப்புகள் உருவாகும். புறச்சூழல்கள் மட்டுமின்றி உள்ளத்தின் எண்ணங்களிலும் மாற்றம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இத்தகைய மாற்றங்கள் நடைபெறுகிறபோது பழமையை முற்றிலும் விட்டுவிடமுடியாத சூழலில் அவை சடங்குகளாக உருமாற்றம் அடைகின்றன. சில மறக்கவும் செய்யப்படுகின்றன.

சடங்குகள் என்று இன்றைக்குச் சொல்லப்படுகின்றவை ஒரு காலத்தில் அந்த மக்களின் வாழ்க்கையில் பின்பற்றப்பட்டவை என்பதுதான் உண்மையாகும். அந்தப் பழைய முறையை நாம் கணிக்க இயலாதபோது சடங்குகளை மூடநம்பிக்கைகள் என்று எளிதாகச் சொல்லும் வழக்கம் உருவாகியுள்ளது. ஒவ்வோர் இனமும் தமக்கெனத் தனித்தனி நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், சடங்குகள் இவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறைகளே அந்த இனத்தைப் பிறிதொரு இனத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதோடு அந்த இனத்தின் தனித்தன்மையையும் காட்டுகின்றன. பல சடங்குகளுக்குக் காரணம் காணப்படும் நிலையில் அவை சடங்காக அன்றி வாழ்க்கையாக இருந்த நிலையில் அம்மக்களின் வாழ்வியலை உணர முடியும்.

சடங்குகள் இல்லாத - செய்யாத மனித குலம் உலகில் எங்கும் இல்லை. அப்படிச் சடங்குகள் வாழ்க்கையோடு இரண்டறப் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தச் சடங்குகளே அந்த மக்களின் உயர் நிலையாகிய பண்பாட்டைக் கணிப்பதற்கும், அந்த மக்கள் வாழ்ந்த சமுதாய அமைப்பைத் தெரிந்து கொள்வதற்கும் காரணிகளாக உள்ளன. இந்த அடிப்படையில் கொங்குவேளாளர் தம் வாழ்வியலில் பிறப்பு முதல் பூப்பு வரையிலான சடங்குகள் பற்றிய விளக்கம் தரப்படுகிறது. தாய்மைபேறு குறித்த செய்திகளை மட்டும் பார்ப்போம்

**தாய்மைப் பேறு**

மனிதகுலம் வளர்ச்சியடைய – விரிவடையத் தேவை மக்கள் தொகைப் பெருக்கமாகும். தனி ஒருவனின் குடும்பம் அல்லது அவனது குலம் விளங்கத் தேவை மக்கட்பேறு என்ற குழந்தைச் செல்வமாகும். ஒரு கணவன், மனைவிக்குப் பிறக்கும் குழந்தையானது குலம் வளர்ச்சியடையக் காரணமாக அமைவதோடு அந்தப் பெண் மலடி அல்லள் என்பதையும் அந்த ஆண் ஆண்மை உடையவன் என்பதையும் நிரூபிக்கும் சான்றாகவும் உள்ளது. எனவேதான் குழந்தைப் பேறு என்பது சிறப்பானதாகவும் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவும் உள்ளது.

**மருத்துவச்சி**

குழந்தைப் பேறு தாய்வீட்டில்தான் நடக்க வேண்டும் என்பது மரபு. பல தலைமுறையாக குழந்தைப்பேறு தாய்வீட்டிலே நடந்தது. ஆனால் இன்றைக்கு உள்ளது போன்று மருத்துவமனை வசதிகளும், உடல்கூறு பற்றிய அறிவும் இல்லாத காரணத்தால் அந்தந்த ஊரிலுள்ள மருத்துவச்சிகளே பேறு காலத் துணையாக இருந்தனர். மருத்துவச்சிகள் வயதானவர்களாகவும், அனுபவசாலிகளாகவும் இருந்து பேறு காலச் செயல்களில் துணையாக

நின்றனர். பேறு என்பது இயற்கையானது. கொங்கு வேளாள மகளிர் உடல் உழைப்பு உடையவர்கள். உடல் உழைப்ப உடையவர்களுக்கு குழந்தைப்பேறு எளிதாகத்தான் இருக்கம். இருப்பினும் சரியான நிலையில் இருக்க வைத்து குழந்தை பிறக்க மருத்துவச்சி துணை புரிவாள்.

குழந்தை பிறந்த அறையைத் தனிமைப்படுத்துவர். தீட்டு இடம் என ஒதுக்கி வைப்பர். குழந்தை பிறந்த அறயையில் நந்தா விளக்கு அகல் வைக்கப்படும். ஆமணக்க எண்ணெயில் (விளக்கெண்ணெய்) விளக்கு எரியும். அறையின் முன் வேப்பிலை தென்னைமட்டை வைப்பது சடங்காகும். பேறுகாலத் தீட்டைப் பிறர் தீண்டக் கூடாது. பிறரின் நோய்கிருமிகள் சிசுவிற்கு போகக் கூடாது என்பதே அறிவு பூர்வமான கருத்தாகும். குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தை அழவில்லை என்றால் விளக்கெண்ணை விளக்கில் எற்றப்பட்ட திரியில் ஊசியைக் காயவைத்துச் சூடுபோட்டுக் குழந்தையை அழச் செய்து காப்பாற்றினர். மேலும் மருத்துவச்சிகள் குழந்தை ஓரளவு வளர்ச்சி அடையும் வரை துணை நின்றனர்.

மருத்துவச்சி குழந்தைக்கு குளிப்பாட்டும் பணியையும் செய்துள்ளனர். பலவகை மூலிகைகளை (சின்னத்தழை, சீரித்தழை, முடிதழை, திருநீற்றுப்பத்திரி, மாசிப்பத்திரி, கற்பூரவல்லி, நாட்டு மருந்துக்கடைகளில் விற்கும் பச்சிலை, கஸ்தூரி மஞ்சள், பூலாங்கிழங்கு, ஆவாரம்பூ) இடித்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு பூசிக் குளிப்பாட்டுவார்கள். வாரம் ஒரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவதும் நாட்டுக்கோழி முட்டை தேய்த்துக் குளிப்பாட்டுவதும் செய்வார்கள். குழந்தைக்குத் தலைக்குக் குளிப்பாட்டும்போது கறுப்பு வளையல் ஒன்றைக் கையில் போட்டு நீர் ஊற்றிப் பின்னர் குளியல் முடித்தவுடன் அந்தக் கறுப்பு வளையலை எடுத்து மஞ்சள் தண்ணீர், நவதானியம் இடப்பட்டுள்ள வட்டிலில் போட்டுக் குழந்தையின் தலையைச் சுற்றி உடைத்து முச்சந்தியில் சென்று ஊற்றிவிட்டு வருவார்கள்.

இச்செயல்களில் கண்ணேறு கழித்தல் என்பதும் உடல் வளம் குறித்த மூலிகைப் பயன்பாடும் பொருந்தி இருப்பதைக் காணமுடிகிறது.

குழந்தையைப் பேணுதலும், பிள்ளைத் தாய்ச்சியைக் கவனிப்பதும் இன்றியமையாததாகும். கருப்பைசீழ் பிடிக்காமல் பாதுகாப்பாக இருக்க சுக்குக் கருப்பட்டியும், செலவு ரசமும் தருவார்கள்.

குழந்தை பிறந்து 11-15ஆம் நாளில் வீட்டின் எஞ்சிய பகுதியையும் பிள்ளைத்தாய்ச்சியும் குழந்தையும் இருந்த அறையையும் சாணத்தால் மெழுகி மாட்டுக் கோமியம் (சிறுநீர்) கொண்டு வந்து இறைத்துத் தூய்மை செய்து ‘வீடுபுகும்’ செயலைச் செய்வார்கள். சில நேரங்களில், வாய்ப்பிருப்பின் அந்தணரை அழைத்துச் சடங்கு (புனிதநீராட்டல்) செய்வர். செப்புக்குடம் (கலசத்திற்கு) வேட்டி, துண்டு, தேங்காய், பழம் 5 படி பச்சரிசி, பணம் ஆகியன தானமாகக் கொடுக்கப்படும். மஞ்சள் குங்குமம் இட்டு, உடல் நலத்திற்கேற்ற மூலிகை நறுமணப்புகையிட்டு, மாவலை தோரணம் கட்டி புதின நீர் தெளித்து, அக்கம்பக்கத்தார்க்கு விருந்து வைப்பார்கள். அந்தக் காலகட்டத்தில் குழந்தையின் தந்தை அவர்களின் பங்காளிகள் ஆகியோருக்கும் தீட்டு உண்டு என்பதால் கோயில், குளம் செல்லக் கூடாது.

**பெயர் சூட்டுதல்**

பிறந்த குழந்தைக்குத் தீட்டுக் கழித்த பின் மூன்றாம் மாதம் பெயர் சூட்டுதல் மரபாகும். குழந்தையின் தந்தை வீட்டிலிருந்து பங்காளிகளோடு வந்து பெயர் வைத்தல் வழக்கமாகும். அப்போது அவர்கள் 1மிடா அரிசி அல்லது 10வள்ளம், சுக்கு, மிளகு, பூண்டு, இனிப்பு, காரம் கொண்டு வருவார்கள். குழந்தையை குளிப்பாட்டி, புதுத்துணி போட்டு நகையும் பூட்டுவார்கள். தாயின் மடியிலுள்ள குழந்தைக்கு கிண்ணத்தில் தேன் ஊற்றப்பட்டு அத்தேனில் புவுன்காசு அல்லது மோதிரத்தை முக்கி எடுத்து வயதானவர் ஒரு சொட்டுத் தேனைக் குழந்தை வாயில் வைத்து, வலதுகாதில் குழந்தைக்குரிய பெயரை மூன்று முறை சொல்ல மற்றவர்கள் அதே போல் சொல்லப் பெயரிடுதல் நிறைவேறும்.

பொதுவாகக் குழந்தைகளுக்குத் தெய்வப் பெயர்கள் குலதெய்வப் பெயர்கள், முன்னோர்களின் பெயர்களைச் சூட்டுதல் மரபாகும். அக்காலத்தில் குழந்தைக்கு அக்குழந்தையுடைய தாத்தாவின் பெயரையே வைத்தார்கள். எனவே அக்குழந்தை தாத்தாவின் பெயரைத் தாங்கியதால் பெயரன் என்று அழைக்கப்பட்டான். இந்தப் பெயரனே பேரன் என்று பேச்சு வழக்கில் வழங்குகிறது.

**மாராயம்**

பெயர் சூட்டிய மூன்றாம் மாதம் குழந்தையைத் தந்தை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு செல்வர். தாய் வீட்டிலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்லும் பெண்ணுக்கு அம்மா வீட்டிலிருந்து 1மிடா அரிசி/10வள்ளம், இனிப்பு, காரப் பலகாரம் செய்து கொடுத்தனுப்புவதோடு

குழந்தைக்குத் தேவையான தொட்டில் வேட்டி, தொட்டில் கொக்கி, வெண்கலத்தால் ஆன எண்ணெய் கிண்ணம் குழந்தைக்கு குளிப்பாட்டத் தேவைப்படும் செம்பு, அண்டா, குடம், முக்காலி, மஞ்சள் தண்ணீர் சுற்றும் தட்டு, தாய் வீட்டின் வசதிக்குத் தக்க நலையில் குழந்தைக்குப் புதுத்துணி, கைக்குத் தங்க வளையல், இடுப்புக்குத் தங்க அரைஞாண் ஆகியன செய்தனுப்புதல் மரபாக நடைபெற்று வருகிறது.

குழந்தையின் தேவைகள் தாய் வீட்டாரால் செய்யப்படுகிறது. இது தாய் வீடு பெண்ணுக்குச் செய்யும் கடமை மட்டுமன்று. பெண்ணுக்குத் தாய் வீட்டிலுள்ள உரிமையையும் காட்டும். தாயும், குழந்தையும் கணவன் வீட்டில் இருக்கும்போது பெண் வீட்டுக்குடி வண்ணான், வண்ணாத்தி ஆகியோர் குழந்தையின் தந்தை வீட்டிற்கு மாராயம் பெற வருவர். அப்படி வந்த அவர்களுக்கு இன்சொல் கூறி விருந்து கொடுத்துத் தங்கள் வசதிக்கேற்ப பணம் அல்லது மாடடுக் கன்று மாராயமாகக் கொடுப்பது வழக்கமாகும். குழந்தை பிறந்த நாளிலிருந்து அக்குழந்தைகயின் துணிகளை தூய்மை செய்தது முதலான செயல்களுக்குரிய கூலியாக இதனைச் செய்வார்கள்.

'மாராயம்' என்ற சொல்வழக்கு தொல்காப்பியத்தில் காணப்படும் ஒன்றாகும். தொல்காப்பியர் புறத்திணையியலில் வஞ்சித்திணை என்ற போர்முறைத் திணை (ஒழுக்கம்) ஒன்றை விளக்குகையில் அதன் உட்பிரிவாக "மாராயம் பெற்ற நெடுமொழியானும்" என்று குறிக்கிறார். "மாராயம் என்பதனை 'வேந்தனால் சிறப்புப் பெற்ற பெருமை மிக்க சொற்கள்' என விளக்கம் தருகிறார்" முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள். எனவே ஒருவன் செய்த செயலுக்கு நன்றியாக அச்செயலின் பயனைப் பெற்றவர் சொல்லும் நன்றி சொற்களையம் அன்பளிப்புகளையும் 'மாராயம்' எனலாம் என்று கருதமுடிகிறது. மாராயம் கொடுத்தல் என்பது தலைச்சன் குழந்தைக்க மட்டுமே உண்டு. அடுத்துப் பிறக்கும் குழந்தைகளுக்கு மாராயம் கொடுப்பது இல்லை.

**காது குத்துதல்**

காதுகுத்துதல் என்பது தொன்று தொட்டு மேற்கொள்ளப்படுகிறது. பெண்கள் மட்டுமில்லாமல் ஆண்களும் காதுகுத்திக் கடுக்கன் போட்டிருந்ததையும் பழைய மரபுகள் உணர்த்துகின்றன. கொங்கு வாழ்வியலில் குழந்தைகளுக்குக் காதுகுத்தும் சடங்கு விழாவாக நடைபெறகிறது. ஏழு அல்லது ஒன்பது ஆகிய ஒற்றைப்படை எண்ணுள்ள மாதங்களில் இது நடைபெறும். இளங்காதாக இருக்கும்போதே நடைபெறுவது நல்லது என்ற எண்ணம் இதற்கு அடிப்படையாகும்.

காது குத்தும் ஆசாரிக்குத் தேங்காய், பழம், அரிசி, சமையல் பொருட்களான உப்பு, பருப்பு, மிளகாய், சர்க்கரை ஆகியன காணிக்கையோடு கொடுக்கப்படும். ஆசாரியார் விநாயகர் துதி செய்து குழந்தைக்குக் காது குத்தி நகைபோட்டு விடுவார். குழந்தை பிறந்தவுடன் இறந்தாலும் அல்லது இறந்தே பிண்டமாகப் பிறந்தாலும் வாளினால் சிறுகீறலை உருவாக்கியே புதைப்பர். இதனை,

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளில் தப்பார்**
**தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ இவ் வுலகத் தானே"**

என்று புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. வீரத்தின் குறியீடான விழுப்புண்படுதல் காதுகுத்துதல் சடங்கில் நிலைபெற்றுள்ளது எனலாம். இது நம்பிக்கை சார்ந்த ஒன்றாகவும் உள்ளது. அதாவது, கண்பார்வை நன்றாக அமைவதற்குக் காதுகுத்தப்படுகின்றது என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும்.

**முடி எடுத்தல்/மொட்டையடித்தல்**

ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தை எதுவாக இருந்தாலும் மொட்டையடித்தல் சடங்கு கொங்கு வேளாளரிடம் கண்டிப்பாக நடைபெறுகிறது. குழந்தையின் 11-வது மாதத்தில் தலையிலுள்ள உச்சி மறைந்த நிலையில் மொட்டையடித்தல் மரபாகும். பெரும்பாலும் தந்தை வீட்டுக் குல தெய்வக் கோவில்களில் தான் முடிஎடுப்பார்கள். குழந்தைக்கு வேண்டுதல் இருந்தால் மட்டுமே பிற கோவில்களிலும் முடி எடுப்பதும் உண்டு.

முடி எடுத்தலின் போது நடைபெறும் விருந்துக்குப் பெண் வீட்டிலிருந்தே அனைத்தும் கொண்டுவரப்படும். குழந்தைக்குப் புதுத்துணியும் எடுத்து வருவர். குழந்தையைத் தாய்மாமன் மடியில் வைத்தே முடி எடுப்பர். தாய் மாமனுக்கு மட்டுமே அந்த உரிமை

உண்டு. காதுகுத்துதல் போன்றே முடி எடுத்தலும் பழைய நிகழ்வுகளின் எச்சமாகிச் சடங்காக போய் விட்டமையை அறிய முடிகிறது.

முடி எடுத்தல் என்பது தூய்மை செய்தல் என்று அறிவியல் கண்ணோட்டத்திலும் காண முடிகிறது. குழந்தைக்கு முடி எடுப்பதோடன்றி வாழ்நாளில் பல சந்தர்ப்பங்களில் ஆண், பெண் இருவருமே முடி எடுக்கின்றனர். தாம் நினைத்த வேண்டுதல், நிறைவேறிய நிலையிலும், தனக்கு ஏற்பட்ட நோய் நீங்கின் முடி எடுத்தல் என்று வேண்டிய நிலையில் நோய் நீங்கியவுடன் முடி எடுத்தலும் அப்போது தெய்வங்களின் தன்மைக்கு ஏற்றாற்போல் பொங்கல் வைத்து அபிடேகம் செய்தல், கிடாவெட்டுதல் செய்தும் மொட்டையடித்துக் கொள்கின்றனர்.

பெரும்பாலும் முடி எடுத்தல் வெயில் கடுமையாக உள்ள மாசி முதல் வைகாசி வரை உள்ள காலங்களிலேயே நடைபெறும். கருமையான மயிர் சூரிய வெப்பத்தை ஈர்த்து உடம்பைச் சூடாக்கும் தன்மை கொண்டது. முடி எடுத்து சந்தனம் பூசுதல் உடல் குளிர்ச்சியைத் தரக்கூடியது. முடி எடுத்தல் என்பது அழகைக் கெடுத்தல் என்பதாகும். அழகற்ற குழந்தையைத் தீய சக்திகள் அணுகாது என்பதும் முடிநீக்கிய நிலையில் ஊனப்பட்டுள்ளதால் அவை அணுகாது என்பதும் நம்பிக்கையாகும்.

**பள்ளிக்கு அனுப்புதல்**

கொங்கு வேளாளர்கள் தம் குழந்தைகளை ஐந்து வயது முடிந்து ஆறாவது வயதில் பள்ளிக்கு அனுப்பினர். தம் மக்கள் பள்ளிக்குச் செல்வதையே பேறாகக் கருதினர். புத்தாடை அணிந்து விநாயகர் கோவில் சென்று வணங்கி படிக்கச் சென்றனர். ஆசிரியர்க்கு பொருள் கொடுத்து கல்வியை முறையாகக் கற்றனர்.

கொங்கு வேளாளர்களில் ஆண் பெண் இருபாலரும் சரிநிகர் சமமாக கல்வியில் உயர்ந்துள்ளனர். எல்லாவகையான அரசு அலுவலகங்களிலும் முன்னணியில் நிற்கின்றனர். கொங்கு வேளாளர்கள் எல்லாக் கல்வியும் பெற்று வளமுடனும் நலமுடனும் இன்று வாழ்கின்றனர்.

**தொகுப்புரை**

உடல்கூறு அளவில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேறுபாடுகளில் பெண் பூப்பு அடைவதும், தாய்மை அடைவதும் குறிப்பாகக் குறிக்கத்தக்க சிறப்பான வேறுபாடுகளாகும். பூப்பு அடைந்த நிலையே தாய்மைக்கு வழி வகுக்கும். எனவே ஒன்றன் அடித்தளத்தில் இன்னொன்று நிகழ்கிறது. அத்தகைய தாய்மையின் நிலைப்பாடுகளை அறிந்து கொள்ள முடிந்தது.

# குறுந்தொகை உணர்த்தும் மாண்பமை மரபுகள்

***மைத்திரிஅன்பு,** தலைவர், தமிழ் மாடம் அறக்கட்டளை, செய்யாறு – 604 407.

கடைச்சங்க காலமே சங்ககாலம் என்று அழைக்கப்படுகிறது. அக்காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை அறிய சங்கஇலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. இயற்கை நிலஅமைப்புக்கு தக்கவாறு பிரிக்கப்பட்டிருந்த ஐந்து நிலப்பாகுப்பாட்டின் கீழ் அக்கால மக்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. இதில் மலையும் குன்றும் குறிஞ்சிமலைகளுக்குக் கீழே காடு ஆறுகளும் ஏரிகளும் பாய்ந்தோடும் நீர்நிலைகளும் மருதம் கடற்கரையோர நிலப்பகுதிகள் நெய்தல், என்றாகின்றன. இந்நெய்தல் நிலப்பகுதிகள்,***"மேற்கு கடற்கரையை அடுத்திருந்த சேரநாடாகவும் (தற்போதய மலையாள நாடு), துளுநாடாகவும் (தற்பொழுது தென்கண்ட வடகண்ட மாவட்டங்கள்) தமிழ்நாடாகவும் இருந்தமையால் நீண்டிருந்திருக்கிறது. மேலும் இப்பகுதியில் வசித்த மக்கள் துன்பம் நிறைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளனர்" (மயிலை சீனிவேங்கடசாமி., பழங்காலத் தமிழர் வணிகம்., ப.8)*** ஏனெனில் இவர்கள் நாள்தோறும் கடலில் வெகுதூரம் சென்று மீன்பிடித்து வந்து வாழ்க்கையை நடத்தியிருக்கிறார்கள். இந்த நால்வகை நிலமல்லாது, திரிந்த நிலையிலான வறண்டபிரதேசமாக பாலை நிலம் அமைந்திருக்கிறது. மேற்கண்ட ஐந்து வகையான நிலப்பிரிவின்கீழ் வாழ்ந்த மக்களின் சமூக வாழ்வியலில் காணலாகும் மாண்பமை மரபுகளை குறுந்தொகையில் ஆராயும் நோக்கத்தில் இக்கட்டுரை அமைக்கப்பெறுகிறது.

**சங்க இலக்கியத்தில் குறுந்தொகை**

சங்க இலக்கிய நூல்கள் பழந்தமிழரின் நற்பண்புகளையும் சமூக வாழ்வியலையும் எடுத்தியம்புகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள், சகமனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கான வாழ்வியல் நெறிகளையும் வகுத்து, செம்மையான வாழ்வை வாழ்ந்துள்ளனர் என்பதை சங்கத்தமிழ் நூல்கள் மூலம் அறிகிறோம். சங்கத்தொகை நூல்களுள் - 'நல்ல' என்னும் அடைமொழி பெற்று குறுந்தொகை சிறந்து விளங்குகிறது. மேலும் இந்நூலை கவனித்து வாசிப்பவர்களுக்கு இலக்கிய இன்பம் ததும்பச்செய்யும் இயல்பியலையும், உவமையழகியலையும், சங்ககால மக்கள் வாழ்வியலையும் வெளிப்படுத்தும் வகையில் பூரிக்கோ தொகுத்துள்ளார்.

**மாண்பமை மரபுகள்**

ஒரு சமூகமதிப்பு என்பது சமூக உறுப்பினர்களின் மாண்புகளால் வந்தமைவதாகும். சங்ககாலத்தில் அறம் என்னும் மதிப்பை அனைத்து உறுப்பினர்களும் பெரும்பேறாகப் பெற்றிருந்தனர். அதனடிப்படையிலேயே சங்ககால சமுதாயம் உயர்ந்த சிந்தனை கொண்டதாகத் திகழ்கிறது. அதனால்தான் வ.சுப.மாணிக்கனார்,***"உலகம் என்பது குடும்பங்களின் தொகுதி. வாழைத்தோப்பில் ஒரு மரம் நோயுற்றாலும் அந்நோய் ஏனையவற்றுக்கும் பரவுமாப்போல, ஓர் ஊரில் ஒரு குடும்பம் இயல்பான அறநெறி பிறழ்ந்தால் அத்தீ வளி எங்கும் பரவிவிடும். ஆதலின் நன்னெறியைப் போற்றுவது ஊரார் கடனாகும். இன்று எல்லாம் அரசின் பொறுப்பு என்று விட்டுவிட்டு அவரவர் காரியம் பார்ப்பது போன்ற தன்னலப்போக்கு சங்ககாலத்தில் இருந்ததில்லை. ஊரின் ஒழுங்கு தன் பொறுப்பு என்று ஒவ்வொரு ஊராரும் கருதினர்." (வ.சுப.மாணிக்கம்., சங்கநெறி., பக்.3-7)*** என்று குறிப்பிடுகிறார்.

**இயற்கையை வணங்கும் மாண்பு**

சங்ககால மக்கள் இயற்கை வழிபாட்டினை மேற்கொண்டவர்களாக இருந்துள்ளனர். இதற்கு உதாரணமாக,

> **"வளை உடைத்தனையது ஆகி, பலர்தொழ**
> **செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி**
> **இன்னாப் பிறந்தன்று பிறையே"** **(குறுந்தொகை., பா.எ.307)**

என்னும் குறுத்தொகைப் பாடலைக்குறிப்பிடலாம். மாலை நேரத்தில் பிறைச்சந்திரனை வணங்கிய சங்ககால மகளிரை இப்பாடல் குறிக்கிறது. அதேபோல மற்றொரு பாடல்,

“ஞாயிறு காணாத மாண்நிழற் படீஇய
மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்
தண்மழை தலைய வாகுக நம் நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே” (மேலது., பா.எ.378)

சுட்டெரிக்கக் கூடிய சூரியன் தணிக்கவும், மரங்கள் நிழல் தரும்வகையில் தழைக்கவும், வழி நடப்பதற்கு ஏற்றவாறு அமையவும் என்றவாறு உடன்போக்கில் சென்ற பெண்ணின் பயணம் எந்த இடையீடும் துன்பமும் இல்லாமல் அமைய வேண்டும் என்று தாயொருந்த்தி இயற்கையை வேண்டுவதாக அமைந்திருக்கிறது. ஆக சங்ககால மக்களின் அன்றாட வாழ்வியலில் இயற்கையுடனான இயைபு வழிபாடாக இருந்திருந்திப்பதை இப்பாடல்கள் வழி-யே உணர்கிறோம்.

**செல்வம் ஈட்டும் மாண்பமை**

'செயல்' என்பது நிலையற்ற அனைத்தையும் நிலைபெறச் செய்துவிடும் ஆற்றல்பெற்றதாகும். இவ்வுலகில் செயல் மூலம் பெற்ற அனைத்தும் புகழாகின்றன. அவ்வாறு புகழ்பெற வாழ்பவர்களே வாழ்பவர்கள் ஆவர். அதனால் சங்ககால மக்கள் நிலையில்லாத செல்வத்தை, நிலைத்த புகழைப்பெற வேண்டி தேடிச்சென்றுள்ளனர் என்பதை பின்வரும் பாடல் விவரிக்கிறது.

“அவரே கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியம் காடு இறந்தோரே” (மேலது., பா.எ.216)

இப்பாடலில் வரும் 'கேடுஇல் விழுப்பொருள்' என்னும் தொடர் அழிவற்ற செல்வத்தைப் பெற்று, அதனினும் அழிவற்ற புகழை அடையவேண்டும் என்ற கருத்தினை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

**இல்லற மாண்பு**

சங்க இலக்கியம் உணர்த்திய எண்ணற்ற கருத்துக்களுள் தலையாயது இல்லறமாகும். அதனால்தான் சங்ககால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றி வந்தமையை குறுந்தொகை பல்வேறு பாடல்களில் உணர்த்தக் காண்கிறோம். உதாரணமாக ஒரு பாடல்,

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீ,
குவளை உன்கண் குய்ப்புகை கமழக்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதன் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே” (மேலது., பா.எ.167)

இப்பாடல் இல்லறத்தின்கண் வாழும் ஒரு பெண்ணின் உணவு சமைக்கும் தன்மையை விளக்குவதோடு, அவள் அன்புக்கும் அமிழ்தத்திற்கும் கணவர் தந்த பாராட்டையும் அதனால் இல்லறத்தில் எழுந்த இனம்புரியா மகிழ்ச்சியையும் விவரிக்கிறது. இல்லறத்தில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் எவ்வாறு அன்புடன் ஒழுக வேண்டும் என்ற நற்கருத்தை இப்பாடல் வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

**விருந்தோம்பல் பண்பு**

நம் வீட்டைத்தேடி வரும் விருந்தினர்களை அன்போடு வரவேற்று, உபசரிப்பது தமிழர் பண்பாடுகளில் மேலானதாகும். விருந்தினர்களின் அகம் மகிழும் வண்ணம், அவர்களுக்கு நாம் மனமுவந்து அமுது படைப்பதை கடமையாகக் கொள்ளவேண்டும். சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் அவ்வாறே வாழ்ந்துள்ளனர். நெய்யோடு வெண்ணெயையும், அரிசியால் சமைத்த வெண்சோற்றையும் ஏழு கலங்களில் இட்டு காக்கைக்கு வைத்து, பின் தானும், தன் உறவினர்களும் உண்ணும் மரபு தமிழகத்தில் பழங்காலங்களில் இருந்திருக்கிறது என்பதை பின்வரும் பாடலடிகள் விளக்குகின்றன.

“எழுகலத்து ஏந்தினும் சிறிது – என் தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு
விரைந்து வரக் கரைந்த காக்கையது பலியே” (மேலது., பா.எ.210)

மேலும் கார்காலத்தின் தொடக்கத்தில் குளிர்காற்று வீசும் நேரத்தில், பிச்சைக்கேட்டு வந்தவர்களுக்கு, வெண்சோற்றுடன் வெந்நீரையும் தந்து தமிழர்கள் உபசரித்தனர் என்பதை,

“ஆசு இல் தெருவின் ஆசுஇல் வியன்கடை,
செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது
ஓர் இல் பிச்சை ஆர மாந்தி

**அற்சிர பெய்ய வெப்பத் தண்ணீர்**
**சேமச் செப்பில் பெறீ இயரோ நீயே"** (மேலது., பா.எ.278)

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது. இப்பாடல் காட்சிகளின் மூலம் வறுமையில் வாடிய ஒருவனுக்கு இனிய அமுதுதந்து, குளிர் நீங்கும் வகையில் வெந்நீரை பருகத்தந்த சங்ககால மக்களின் மனநிலையை அறிந்துகொள்ள முடிகிறது.

**கல்வியும் செல்வமும்**

சங்ககாலத் தமிழர்கள் வாழ்க்கையில் காதலும் வீரமும் எந்தஅளவில் பேசப்படுகிறதோ, அதற்கு நிகராகவே கல்வியும் செல்வமும் சிறந்தோங்கிய நிலையில் பேசப்பட்டுள்ளன. சங்ககாலப் புலவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியிருந்ததும், சங்ககால மக்கள் கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்திருந்ததுமே இதற்குக் காரணமாகும். அதனால்தான் ஔவை மூதாட்டி கல்வியின் சிறப்பைக் கீழ்க்காணுமாறு போற்றுகின்றார்.

**"அன்னாய்! இவனோர் இளமாணாக்கன்**
**தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ?"** (மேலது., பா.எ.33)

இப்பாடலடி கல்வி பயின்றால் மட்டுமே வறுமையிலிருந்து விடுபட்டு, தன் சொல்லாற்றலால் செல்வமும் புகழும் பெறமுடியும் என்ற கருத்தை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

**கற்புநெறியிலான காதல் வாழ்வு**

சங்க இலக்கியத்தில் மக்கள் வாழ்ந்த ஒழுக்கமுறை 'கற்பு' என்றழைக்கப்பெற்றது. "திண்ணிய ஒருமுக ஆற்றலை இது குறித்துவரினும் இதற்குக் கற்பித்தல், கற்பித்தவாறு நடத்தல் எனப் பொருள் கொள்ளலாம். மரபுவழியாக தம் பெற்றோர் மூலமாகக் கற்றுக்கொள்ளுதலையே இது குறிக்கிறது" (கு.வெ.பாலசுப்பிரமணியன்., சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்., ப.112) என்று ஆய்வாளர்கள் கற்பென்னும் சொல்லுக்கு விளக்கம் தருகின்றனர். காதல்மணம் கொண்டு தலைவனும் தலைவியும் ஒத்த சிந்தனையில் செயலாற்றும் நிலையென சங்க இலக்கியங்கள் உடன்போக்கைக் குறிப்பிடுகின்றன.

**"ஊர்அலர் எழ, சேரி கல்லென**
**ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை**
**தானே இருக்க, தன்மனை யானே**
**நெல்லிதின்ற முள்எயிறு தயங்க**
**உணல் ஆழ்ந்திசினால் அவரொடு"** (மேலது., பா.எ.262)

இப்பாடல் தலைவனுடன் தலைவியை மணம்முடித்து வைக்க இயலாதத் தாயை 'அறனற்றவள்' என இழிந்துரைப்பதையும், தோழி உடன்போக்கில் தலைவியை விடுவிப்பதே சிறந்தது என்று எடுத்துரைப்பதையும் விளக்குவதாக அமைந்திருக்கிறது.

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் 'செல்வி' என்னும் சொல் 'கற்பின்செல்வி' என்பதைக் குறிப்பதாகும். செல்வி என்ற பருவத்திற்குரிய பெண்கள் சுதந்திரமாக முடிவெடுக்கும் குணம் கொண்ட பெண்களாவர். அவ்வகையில் 'கற்பின்செல்வி' என்று சொல்லும் பொழுது, ஒழுக்கமான வாழ்வை மேற்கொள்ள விரும்பும் தலைவி, தலைவனுடன் இணைந்து வாழும் வாழ்வை மேற்கொள்ள முடிவெடுக்கிறாள் என்பதே கற்பினள் எடுக்கும் திண்ணமான முடிவு எனலாம். அவ்வாறு ***"அவள் எடுக்கும் முடிவால் அவளுக்கு ஏற்படும் துயரங்களைப் பற்றி அவள் கவலைக்கொள்ளப் போவதில்லை" (நிழலான்று அவிந்த..................கோல்அமை குறுந்தொடித் தளிர் அன்னோளே"– குறுந்தொகை., பா.எ.365)*** என்பதையே பாலைத்திணைப் பாடல்கள் விவரிக்கின்றன. இருப்பினும் கற்புடையாள் தன் தலைவன்மீது வைத்திருக்கும் அன்பின் மீதான அழுத்தத்தால் அத்தனை துன்பங்களையும் இன்பமாக மாற்றியமைத்துக்கொள்ளும் மனம் கொண்டவளாக இருக்கிறாள் என்பதற்குச் சிறந்த உதாரணமாகக் கீழ்க்காணும் பாடலைக் குறிப்பிடலாம்.

**"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்**
**புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்**
**உள்ளலும் உள்ளாம் அன்றே-தோழி?**
**உயிர்க்கு உயிர் அன்னர் ஆகலின் தம்இன்று**
**இமைப்புவரை அமையா நம்வயின்**
**மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே"** (மேலது., பா.எ.218)

தலைவின் மனத்திண்மைக்கு மிகமுக்கிய காரணியாக அமைவது, தலைவன் மீது அவள் கொண்டுள்ள அன்பும், நம்பிக்கையுமாகும். அதேபோல தலைவியும் தலைவனுக்கு உயிருக்கு நிகரானவளாவாள். இச்சூழலில் தலைவனை பிரிந்திருக்கும் தலைவி, கொற்றவைக்கு பலியிட்டு வழிபடல், நோன்பு மேற்கொள்ளல், நிமிர்த்தம் பார்த்தல், நற்சொல் கேட்டல் முதலான நம்பிக்கைகள் எதிலும் நாட்டம் கொள்ளாதவளாக இருக்கிறாள் என்பதை உணர்த்தும் வகையிலான இப்பாடல், சங்ககாலத்தில் வாழ்ந்த காதலுள்ளங்களின் வெளிப்பாட்டை விவரிக்கும் தனிச்சிறப்புமிக்கப் பாடலாக அமைந்திருக்கிறது. சங்ககாலத் தலைவி, தலைவன் தன் நினைவில் வாழும் ஒன்றையே உயிரெனக் கொண்டிருக்கிறாள். மாறாக அவன் மனதில் நான் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தேவையற்றவள் என்று முழுமையாக நம்புகிறாள். இந்த நம்பிக்கையினூடான காதலே சங்ககால இல்லறவாழ்வுக்கான அடித்தள மாண்பமாக அமைந்திருக்கின்றன.

**பொருளீட்டி புகழ்பெறும் வாழ்வியல் நெறி**

சமூக இயக்கத்தில் பொருள், பொருளாதாரம் ஆகியன முக்கிய அச்சாக்கங்களாகின்றன. ஒருசமூகத்தின் வலிமையையும் அமைப்பையும் பொருட்பண்பால் புரிந்துணரலாம் என்பதை சங்ககால மக்கள் நன்கு அறிந்திருந்துள்ளனர். அதனால்தான் அவர்கள் பொருள், பொருள் ஈட்டும்வினை,ஈட்டிய பொருளைப் பிறருக்கு அளித்து மகிழ்ச்சியுடன் வாழும் வாழ்க்கையை வாழ்ந்தனர். பிறரும் அவ்வழியில் வாழவேண்டும் என வலியுறுத்தினர். அதன்பொருட்டே சங்க இலக்கியங்களில் பொருளீட்டல், பொருள்வழிப் பிரிவு உள்ளிட்ட பாடல்கள் இடம்பெறுகின்றன.

தனிமனித வாழ்க்கையில் பொருள் தேடலும்,ஈட்டலும் அதன்வழியில் கிடைக்கப்பெறும் பொருளைக் கொண்டு பிறருக்கு உதவுதலும் வாழ்வியல் அறங்களாகும். மாறாக முன்னோர் தேடிவைத்தச் செல்வத்தில் வாழ்தல் கூடாது. அவ்வாறு வாழ்வதை விட, பிச்சை எடுத்தேனும் பொருளீட்டல் சிறந்தது என்று குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது.

> **“உள்ளது சிதைப்போர் உளரெனப்படாஅர்**
> **இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச்**
> **சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**
> **சென்றனர் வாழி….. ……”** **(மேலது., பா.எ.283)**

சுயமான பொருளீட்டி அதன்வழியிலான வாழ்முறையையே அக்காலத்தில் வாழ்ந்த பெண்களும் விரும்பியுள்ளனர். உண்மை, அறம் என்பதும் அதுவேயாகும். அறச்செயல் என்பது பொருள் ஈட்டுவதை மட்டும் குறிப்பதல்ல. எவ்வகையிலான பொருள் ஈட்டப்படுகிறது. எவ்வாறு ஈட்டப்படுகிறது. ஈட்டிய பொருளின் ஒருபகுதியை ஆண்மகன் எவ்வகையில் ஈகைக்கும் பிற உதவிகளுக்கும் பயன்படுத்துகின்றான் என்பதடங்கிய கொள்கைமுறையே அறவாழ்வியலாகத் திகழ்வதாகும்.

அத்தகைய அறவாழ்வியலை சங்ககால மக்கள் வாழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியங்களின் மூலம் அறியமுடிகிறது. இன்பம் பொருளாலும், தலைவியின் மீதான அன்பாலும் வருகிறது. இருந்தும் “தனக்கு மட்டும் கிடைக்கப்பெறும் தலைவியின் இன்பத்தைக் காட்டிலும், தான் பொருள் பெற்று, அதனை ஈவதால் பிறருக்கும் கிடைக்கும் இன்பம் மேலானதாகக் கருதப்படும்” (மேலது., பா.எ.63>213,331) மரபு சங்ககாலத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

சங்கத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை தமிழர்களின் வாழ்வியலைச் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலப்பிரிவுகளின் கீழான வேடர், உழவர், மீனவர், கள்ளர் ஆகியோரின் வாழ்வியல் குறிப்புகள் இடம்பெறுகின்றன.

சங்ககால மக்கள் வாழ்வியல் பதிவுகளாகக் கற்புநெறியிலான வாழ்க்கைமுறை சிறப்பு நிலைப்பெறுகிறது. அதேபோல, ஆண்கள், இல்லற அமைப்புக்குள் இருந்துக்கொண்டு தலைவியுடன் அன்பு கொண்ட மனத்துடன், அவளை விட்டு பிரிந்துச்சென்று பொருளீட்டுதலை கடமையாகக் கொண்டு செயலாற்றிய நிலை சிறப்புக்குரியதாக விளங்குகிறது.

சங்ககால மக்கள் வாழ்க்கை முறையில் இயற்கை வழிபாட்டு நெறி, செல்வத்தை ஈட்டி, ஈகை முதலான வகையில் புகழீட்டும் மாண்பு ஆகியனவும், இல்லற வாழ்க்கையில் விருந்தோம்பல், அன்பு செலுத்துதலின் அவசியத்தை உணர்ந்த மனநிலையில் வாழ்தல் முதலான நிலைகளும் போற்றுதற்கு உரியவைகளாகின்றன.

# சங்க இலக்கியமும் புறநானூறும்

*மா.நஜ்மூன், பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, இஸ்லாமியா கல்லூரி (தன்னாட்சி), வாணியம்பாடி.

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தின் மிகப்பழமையான காலத்தைச் சங்க காலம் எனவும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்ட நூல்களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இவ்விரண்டையும் சேர்த்துச் சங்க இலக்கியம் என்பர். அகம், புறம் இவ்விருவகையான பொருள்களைக் கொண்டது சங்க இலக்கியம். காதற் பாடல்கள் அகத்தில் அடங்கும். வாழ்வியல் கூறகளான வீரம், கொடை, புகழ், அறம் பற்றிப் பாடுவதைப் புறத்தில் அடக்குவர். காதலும், வீரமும் பண்டைத் தமிழர் வாழ்வில் இரு கண்களாகப் போற்றினர். எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு பண்டைத் தமிழரின் வீர வாழ்வினையும் சங்க கால மூவேந்தர், கடையெழு வள்ளல்கள், குறுநில மன்னர்கள், போர் முறைகள் பற்றியும் இக்கட்டுரையின் வாயிலாக பாரி, மன்னனின் கொடைப் பண்பினை அறிய முடிகிறது.

**பாரி மன்னன்**

பாரியின் பறம்புமலை முந்நூறு ஊர்களை உடையது; பாரி வேளிர் குலத் தலைவன்; வேள் பாரி என்றழைக்கப்பட்டான். கபிலர் பாரியின் நெருங்கிய நண்பர்; முல்லைக்குத் தேர் ஈந்து வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவன் பாரி. கொடைத்திறத்தில் பாரியை விஞ்சுவார் யாருமில்லை என்று கூறும் அளவிற்குப் பெருமை பெற்றிருந்தான். பாரிக்கு மகளிர் இருவர் இருந்தனர்; மூவேந்தர் பாரியின் புகழ் எண்ணிப் பொறாமை கொண்டு பாரியைக் கொன்று பறம்பு மலையைக் கவர்ந்தனர். பாரி மறைந்தாலும் கொடைத்திறத்தால் வரலாற்றில் மறையாத பாரியின் பெருமையையும் புகழையும் பாட்டில் கல்வெட்டாக நிலைக்கச் செய்துள்ளார் கபிலர்.

**பாரி மன்னன் திறன்**

கபிலன் பாரியின் நண்பர். பறம்பு மலையைத் தலைநகராகக் கொண்ட பாரியிடம் மிகுந்த மதிப்பும் கொண்டவர். அவனோடு பறம்பு மலையிலேயே வாழ்ந்தவர். பறம்பு மலையில் பாய்ந்துவிழும் அருவியில் குளித்தும், அதன் இனிய நீரைப் பருகியும் இருந்திருப்பார். கபிலருக்கு பாரியும் ஒன்றுதான்; பறம்பு மலையும் ஒன்றுதான்; பாரியின் இனிய பண்பைக் காணும்போது பறம்பு மலையில் பாயும் அருவி கபிலருக்கு நினைவு வருகிறது. அந்நீர் இனியது. குளிர்ந்த இனிமையான அந்நீரைப் போன்று மிக இனிமையுடையவன் பாரி என்று கூறி அத்தகைய பண்புடையவனிடம் சென்றால் பரிசு பெறுவாய் என விறலியை நோக்கி ஆற்றுப்படுத்துகிறார் கபிலர்.

**சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி**
**தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை**
**வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்**
**பெய்யினும் பெய்யா தாயினும் அருவி**
**கொள்ளுழு வியன்புலத்து உழைகா லாக**
**மால்புடை நெடுவரைக் கோடுதோறும் இழிதரும்**
**நீரினும் இனிய சாயல்**
**பாரி வேள்பால் பாடினை செலினே** (பா.105)

'ஒளிபொருந்திய நெற்றியையுடைய விறலியே' அகன்ற சுவையின்கண் விரிந்த இதழ்களை உடைய குவளை பூத்திருக்கிறது. அந்தச் சுனைக்குவளை வண்டு மொய்த்தற்குரியதாகப் புதிதாக மலர்ந்துள்ளது. அந்தக் குவளை மலரிடத்துக் குளிர்ந்த மழைத்துளி பெய்தாலும் பெய்யாது விட்டாலும், கொள்ளிற்காக உழுத நிலத்தில் நீரோடு ஓடுதற்குரிய அருவி, கண்ணேணியை உடைய நெடிய மலைச்சிகரங்களிலெல்லாம் பாயும். அத்தகைய அருவி இனிமையான நீரைக் கொண்டது. நீரைக் காட்டிலும் இனிமையானவன் பாரி. பாரி மன்னனைப் பாடிச் செல்வாயானால் செம்மையான அணிகலன்களைப் பரிசாகப் பெறுவாய் எனக் கபிலர் கூறுகிறார்.

**தீயோரிடத்தும் பண்பு பாராட்டல்**

கபிலர் பாரியிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர். அவருக்கு பாரி மன்னனுடைய நற்பண்புகள் யாவும் தெரிந்திருந்தன. பாரியின் ஒவ்வோரு பண்பையும் சீர் தூக்கிப் பார்த்து வியந்து போற்றுகிறார் கபிலர். புலவர்கள், பாணர்கள், விறலியர் அரனிடம் சென்று மன்னனைப் பாடிப் பல பரிசுகளைப் பெற்றுச் செல்வர். பாரியின் கொடைத் தன்மையைச் சுட்டிக்காட்டும் கபிலர், பாரியிடம் பரிசுகள், பிறபொருட்களைப் பெற்றுச்சென்ற ஒரு பிரிவினரைக் காட்டுகிறார். கூரிய அறிவுத்திறம் இல்லாதோர், தீய குணங்களைக் கொண்டவர்கள் பாரியிடம் வந்ததாகக் கூறுகிறார் கபிலர். பாரிக்குச் சினம் வரவில்லை என்று குறிப்பிடுகிறார் கபிலர். அவர்களுக்கும் அம்மன்னன், கொடையாகப் பொருட்களை ஈந்தான் என்கிறார்.

**“ நல்லவுத் தீயவு மல்ல குவியினர்ப்**
**புல்லிலை யெருக்க மாயினு முடையவை**
**கடவுள் பேணே மென்னா வாங்கு**
**மடவர் மெல்லியர் செல்லினும்**
**கடவன் பாரி கைவண் மையே”** (பா.106)

இப்பாடலில் ஓர் அழகிய உவமையும் இடம் பெற்றிருக்கிறது. பூக்களில் நல்ல பூக்கள் தேவையில்லாப் பூக்கள் என்று பிரிக்கிறோம். தெய்வத்திற்குச் சில பூக்களைச் சூட்டுகிறோம். சிலவற்றை ஒதுக்குகிறோம். ஒருவனிடம் இருப்பது எருக்கம் பூவாயினும் அதனைத் தெய்வங்கள் ஏற்கமாட்டோம் என்று மறுத்துக் கூறியதில்லை. பாரியும் தன்னிடம் தாழ்ந்த குணங்களைக் கொண்டவர் வந்தாலும் அவர்களை ஒதுக்காமல் தன் நற்பண்பாகிய வள்ளன்மையை அவர்களுக்கும் நல்குகிறான். எருக்கம்பூ என்பது பாரியை நாடி வருகின்ற தீயகுணம் கொண்டோரைக் குறித்து நிற்கிறது.

பாரி மன்னன் அறிவு, குணம், நற்செயல் இம்மூன்று பண்புகளற்ற தாழ்ந்தோர் தன்னை நாடி வரின் அவர்களிடம் அருள் முகம் காட்டி இன்சொல் கூறி அன்பு பாராட்டி அளவற்ற கொடை தந்து மகிழ்வான். வேறுபாடு கருதாது நடுநிலை நின்று பாரியின் கொடை நல்கும் திறத்தை அறிய முடிகிறது.

**இல்லையே என்னாது கூறும் எந்தல்**

**“குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி**
**ஆர மாதலி னம்புகை யயலது**
**சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்**
**பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு**
**பாரியும் பரிசில ரிரப்பின்**
**வாரே னென்னா னவர்வரை யன்னே”** (பா.108)

குறத்தியர் சந்தனக் கட்டைகளை எரித்ததால் எழுந்த நறும்புகை பறம்புமலையின் வேங்கை மரங்களில் படிந்து இருக்கிறது. வளம்மிக்க பறம்பு மலையையும், தன்னையும் பாடி வந்தவர்க்கு மன்னன், பறம்பையே கூறுகளாகப் பிரித்துப் பரிசாக தந்துவிட்டான். இனி வருவார், பறம்புமலை இல்லையென்றால் உன்னையே கொடையாகக் கேட்பர். அவ்வாறு, அவர்கள் கேட்டால் பாரி மன்னன் தயங்காமல் தன்னையும் தந்துவிடுவான் என்று குறிப்பிடுகிறார் கபிலர்.

**பறம்பு தரும் பரிசு**

பாரியின் பறம்புமலையை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்று சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் முயன்றனர். நீங்கள் ஒருங்கு கூடி நின்றாலும் இப்பறம்பினைக் கைப்பற்றுதல் அரிதான செயல். உழவர்களுடைய உழவை வேண்டாமலே நெல்லும், கிழங்கும், தேனும், பலாவும் மிகுந்து விளைகின்றன. பறம்புமலை வானத்தைத் தொடும் உயரம் மிக்கது. இதில் இருக்கின்ற குவைகள் வானத்துவிண்மீன்களைப் போன்று மிகுதியாக உள்ளன என்று பறம்புமலையின் வளத்தையும் சிறப்பையும் காட்சிப்படுத்துகிறார் கபிலர். பாரியின் வீரப் பண்பைக் கூறவரும் கபிலர். மூவேந்தர்களிடம் உங்களால் பறம்பை எளிதில் கைப்பற்றிவிட எண்ணுவது அரிது. நீங்கள் பாணராக, விறலியர்களாக ஆடிப்பாடிக்கொண்டு சென்று பாரியைக் கண்டால், மன்னன் தன் மலையையும் நாட்டையும் உங்களுக்குப் பரிசாகத் தந்துவிடுவான் என்று கூறியுள்ளார் கபிலர். பாரி மன்னனின் நற்பண்புகளையும், வீரப்பண்பைவிடக் கொடைப்பண்பினையும் அறிய முடிகிறது.

**வெல்லுதற்கு அரியவன்**

**“ மரந்தொறும் பிணித்த களிற்றின ராயினும்**
**புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்**
**தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்**
**யானறி குவனது கொள்ளு மாறே**
**சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி**
**விரையொலி கூந்தலும் விறலியர் பின்வர**

**ஆடினர் பாடினர் செலினே**
**நாடுங் குன்று மொருங்கீயும்மே"** (பா.109)

அரசர்களே! நீங்கள் உங்கள் யானைகளைக் கொண்டு வந்து போரிட்டாலும், தேர்களையெல்லாம் கொண்டு வந்தாலும் கூடப் பாரியை வெல்லுதல் என்பது மிகவும் அரிதான செயல். பாரி மலையைக் கொள்ளும் வழி ஒன்று எனக்குத் தெரியும். நீங்கள் உங்கள் வடிவினை மாற்றிக் கொண்டு கூத்தர் வேடம் போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பெண்களை விறலியர்களாக வேடமிட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். பாரி முன் சென்று நீங்கள் ஆடல் பாடலை நிகழ்த்தினால் மகிழ்ந்து தன் நாட்டையும் மலையையும் உங்களுக்கு பாரி மன்னன் பரிசளிப்பான் என்று கூறியுள்ளார் கபிலர்.

**முழுமதி நாளில் முடிவிலாச் சோகம்**

மூவேந்தர்களின் சூழ்ச்சியால் பாரி மன்னன் இறந்துவிடுகிறான். பெண்கள் இருவர் இருந்தனர். கபிலர் தந்தையை இழந்த அவ்விரு வரையும் பாதுகாப்பான ஓரிடத்தில் சேர்த்திருந்தார். அப்பெண்கள் தங்களின் தந்தை நினைவால் வாடினர். முழுநிலா நாள் வருகிறது. அப்பெண்களின் சிந்தனை பின்னோக்கிச் செல்கிறது. சென்ற மாதம் முழுநிலா நாளில் தங்கள் தந்தையுடன் மகிழ்ந்திருந்த நிகழ்ச்சியினை நினைத்துப் பார்க்கிறார்கள்.

**" அற்றைத் திங்களவ்வெண் ணிலவின்**
**எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்களிவ்வெண் ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்தரெம்**
**குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே"** (பா.112)

சென்ற மாத முழுநிலவு நாளன்று எங்களுடன் எங்கள் தந்தை இருந்தார். பறம்பு மலையும் எங்களுக்கு உரிமையுடையதாக இருந்தது. இம்மாத முழுநிலவு நாளில் எங்கள் தந்தையும் எங்களுடன் இல்லை. எங்கள் மலையையும் பிறர் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று வருத்தத்துடன் பாடுகின்றனர். பாரி மகளிர் தந்தையை இழந்ததுடன் தாம் ஆடிக்களித்தும், பாடிக்களித்தும் விளையாடிய பறம்பும் பறிபோயிற்று என்ற நினைவும் நெஞ்சுருகச் செய்கிறது.

**மலையைப் பிரிந்தார்; மனத்தைப் பிழிந்தார்**

பாரி இறந்த பின் பறம்பு மலையும் பொலிவற்றுக் காணப்பட்டது. பாரியின் பெண்களுக்கு திருமணம் செய்விக்க வேண்டிய கடமை கபிலருக்கு இருந்தமையால் அம்மலையை விட்டுப் பிரிகிறார். நீண்ட நாட்கள் கபிலர் பாரியுடன் அம்மலையில் தங்கியிருக்கிறார். பாரியைப் பிரிந்த வருத்தத்துடன் பறம்புமலையை விட்டுப் பிரியப் போகிறோம் என்ற வருத்தத்துடன் பாரி மகளிரை அழைத்துக்கொண்டு கபிலர் பறம்புமலையை விட்டு செல்கிறார்.

**" பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று**
**நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்**
**சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே**
**கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்**
**நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே"** (பா.113)

பறம்பு மலையே! உன்னை நாடி வருவோர்க்கு நீ பல செல்வங்களை அளிக்கிறாய். உணவு, பிறபொருட்கள் என வளத்தை அள்ளி அள்ளித் தந்து நீ முன்பு என்னுடன் நட்புக் கொண்டிருந்தாய். பாரி மன்னன் இறந்துவிட்டான். நான் கலங்கிப்போய் நிற்கிறேன். பாரியின் பெண்களுக்கு நல்ல முறையில் திருமணம் செய்து தருதல் என்னுடைய உயிரினும் மேலான கடமை. இன்று உன்னை வாழ்த்திவிட்டு உன்னிடமிருந்து விடைபெறுகிறேன் என்று கபிலர் பாடுகிறார். பாரியுடனும் பறம்பு மலையுடனும் பாசமுடன் பழகிய புலவர்தம் சிந்தனை போற்றுவதற்கு உரியதாகும்.

**முடிவுரை**

மன்னன் பாரியின் செங்கோல் மேன்மையுடைய காரணத்தால் இயற்கை விளையுள் செழித்திருந்ததுடன், அங்குச் சான்றான்மைமிக்க பலரும் பெருகியமைக்கு மன்னனின் மேண்மை பொருந்திய செங்கோன்மையும் காரணமாகும். பேரறிவினரான சான்றோரும் பல்கியிருந்தனர். பாரிமகளிரின் தந்தை நாடு பாரியை இழந்து இன்று வறிவானது என்று கபிலர் வருந்திக் கூறியுள்ளார்.

# கச்சிக் கலம்பகத்தில் அகமரபுகள்

*ரா.சஜி, ஆய்வாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

**முன்னுரை**

தமிழுக்கே உரிய தனி சிறப்புடையது பொருளிலக்கணம். அது அகம், புறம் என்னும் இருபாடுபொருள் பிரிவுகளை உடையதாயினும் அகமே தனிச்சிறப்புடையதாகும். தொல்காப்பியரும் அகத்திணையே பெரிதும் விளக்கியுள்ளார். கச்சிக் கலம்பகத்தில் காணப்படும் அக மரபுகளை இக்கட்டுரையில் காண்போம்.

**கச்சிக்கலம்பகம்**

இலக்கிய வளம் பொருந்திய தமிழின் ஏற்றத்திற்கு அதன்கண் தோன்றியுள்ள சிற்றிலக்கியங்களும் காரணமாகும். தமிழில் தோன்றியுள்ள தொண்ணுற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் கலம்பகம் ஒன்றாகும். பல பூக்களை சேர்த்து தொடுக்கும் மாலையைக் கதம்பம் என்பர். இது போன்ற பல வகையான செய்யுட்களையும், பல் வகை உறுப்புகளையும் கொண்டு பாடப்படுவது கலம்பகம் ஆகும். இவ்வகையில் கச்சிக் கலம்பகம் சிறப்புடையதாக கருதப்படுகிறது. பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார் இக்கலம்பகத்தை எழுதியுள்ளார். புயவகுப்பு, அம்மானை, காலம், கார், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, தழை, ஊசல் என பல்வேறு உறுப்புகளும் கலந்து வர கச்சிக்கலம்பகம் தொடுக்கப்பட்டுள்ளது. கச்சி என அழைக்கப்படும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட 100 பாடல்களைக் கொண்ட துதி நூலாகும்.

**அகம் பற்றி விளக்கம்**

"அகம் என்பதற்கு உள், மார்பு, மனம், ஞானம், பாவி, வீடு, நிலம், மருதம், மாலை, அகக்கூத்து, அகங்காரம், இருப்பிடம், பள்ளம், பாம்பு, குணம் என கழகத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது.

> **"அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலின்**
> **அதனாலாய பயன்தானே அறிதலின் அகம்"**

என்று இளம்பூரணர் விளக்கம் தருகிறார். அகத்திணை கைகோள், களவு, கற்பு, என இருவகைப்படும். திருமணத்திற்கு முற்பட்ட ஒழுக்கம் களவு எனவும், திருமணத்திற்குப் பின் நிகழும் ஒழுக்கம் கற்பு எனவும் பெயர் பெறும்.

**கச்சிக் கலம்பகத்தில் அகமரபுகள்**

கச்சிக்கலம்பகத்தில் உடன்போக்கு, கிளி, வண்டு, மேகம், போன்றவற்றை தூது விடுவதாக அமைந்த தூது மரபும் காணப்படுகின்றன.

**உடன் போக்கு**

தொல்காப்பியர் தோழி, கண்டோர், தலைவன், செவிலி ஆகியோர் கூற்றுக்குரிய சூழலில் உடன்போக்கைக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

> **"போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்"**
> **"சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**
> **கண்டோர் மொழிதல் கண்டது என்ப"**
> **"ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்**
> **இடைச்சுர மருங்கில் அவள் தமர் எய்திக்**
> **கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்தி"**
> **"போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழிஇக்**
> **கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்"**

போன்ற நூற்பாக்கள் விளக்குகின்றன.

வேதப் பொருளாகிய சிவனைக் கூடி துன்பப்பட்டிருந்த என் மகள் வீட்டைவிட்டு வெளிச்சென்றாள் என்று தாய் கூறுவதாக,

**“வேதனை பெற்றோ வேதனை யுற்றாள் வெளியானாள்”** (18)

என்று உடன்போக்கு குறித்த பாடல் கச்சிக் கலம்பகத்தில் அமைந்துள்ளது.

**தூது**

காமக்கூட்டம் நிகழ்ந்தபின் தூது இன்றியமையாதாக அமைகின்றது. அனுப்பப்படும் தூது உயர்திணைக்குரியதாகவும் இருக்கலாம். அஃறிணைக்குரியதாகவும் இருக்கலாம். தோழி, பாங்கன் முதலியோர் துணையின்றி காதலர் தாமே தமக்கு தூதுவராய்ச் சென்று கூடுவதும் உண்டு என்பதை

**“காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்**
**தாமே தூதுவ ராகலும் உரித்தே”** (17)

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது.

**கிளி**

கிளியே வேதமாகிய மாமரத்தின் அடியில் விரும்பித் தங்கிய என் நாயகனுக்கு எளியேனது துக்கத்தைச் சொல்லுவாய் என்று கிளியைத் தூது அனுப்புவதாகப் பாடல் கச்சிக்கலம்பகத்தில் காணப்படுகிறது. இதனை,

**“சுகமே மறைமா வடிமே வியவென்**
**துணைவெற் கெளியேன் துயரைப் பகர்வாய்”** (17)

என்ற பாடல் விளக்குகிறது.

**வண்டு**

ஒரு தடவை தூது சென்றால் கண்டோர்கள் ஆறு தடவை தூது சென்றாய் என்பார்கள். ஆதலால் வளம் பொருந்திய காஞ்சி நகரத்தில் எழுந்தருளிய தூயவரான ஏகாம்பரநாதரது அழகிய மார்பில் பொருந்திய மாலையாக உள்ள கொன்றையைத் தரவும், நான் நீங்காத இன்பத்தை அடையவும் சொல்லுவாய் என்று வண்டைத் தூது விடுவதாக,

**“ஓர்காற் செலினறுகால் உற்றனையென் பார்வளமை**
**ஆர்காஞ்சி மேய அமலர் திரு – மார்பாருந்**
**தாராய கொன்றை தரச்சேறி வண்டே! யான்**
**பேராத இன்பம் பெற”** (52)

என்ற பாடல் கச்சிக்கலம்பகத்தில் காணப்படுகின்றது.

**மேகம்**

கொன்றை மாலையை விரும்பினேன். என்மேற் காதல் கொண்டவராகிய ஏகாம்பரர், நான் நடுக்க முறும்படி கருதினார் போலும். கொடைத் தொழிலுக்கு மேகமே நீ சிறப்புற்றாய் ஆதலால் அழகிய காஞ்சிபுரத்தில் எழுந்தருளிய ஏகாம்பரநாதரிடத்துச் சென்று கொன்றைமாலையை வேண்டிப் பெற்று விரைந்து வா என்று தலைவி மேகத்தைத் தூது விடுகிறாள். இதனை,

**“கடுக்கைத் தொடைநயந்தேன் காதலுடை யார்யான்**
**நடுக்கை யுறுமா நயந்தார் - கொடுக்கைக்குச்**
**செல்லே! சிறந்தாய் திருக்கச்சி வாணர்பால்**
**வல்லே தொடையிரந்து வா”** (42)

என்ற கச்சிக்கலம்பகத்தில் உள்ள பாடல் விளக்குகிறது.

**தோழி**

தேன் ததும்பும் கொன்றை மலர் மாலையைக் காஞ்சியில் எழுந்தருளிய ஏகாம்பரநாதர் எமக்குக் கொடுப்பது இல்லையானால், கொடிய மன்மதனுடைய ஐந்து அம்பாகிய மணம் பொருந்திய மாம்பூ, முல்லைமலர், அசோக மலர், தாமரை மலர், சாவினை உண்டாக்கும் நீ-லோற்பல மலர் ஆகிய ஐந்தும் நெருப்புபோல் வரும் கிளிமொழி போன்ற இனிய மொழியுடைய தோழியரே, மடமும், நாணமும், அச்சமும், பயிர்ப்பும், உடம்புள் கரந்து இரையாக வேண்டுமோ என்று, அந்த சிவந்த மழுப்படை ஏந்திய ஏகாம்பரநாதருக்குச் சொல்லுவீர் என்று தோழியரை தூது விடுவதாக கச்சிக் கலம்பகத்தில் முப்பத்து இரண்டாம் பாடல் அமைந்துள்ளது.

**முடிவுரை:**

காலந்தோறும் மனிதன் புறத்தோற்றத்தில் மாறுபட்டாலும் அகவுணர்வுகளால் மாறுபடுவதில்லை. அதிலும் காதலுணர்வு என்றைக்கும் இருக்கும். உயர்ந்த அன்பு நிலையை வெளிப்படுத்துவதற்கு அகத்துறைகளை விட சிறந்த இடம் வேறில்லை. கச்சிக்கலம்பகத்தில் தலைவி, கிளி, வண்டு, தோழி, மேகம், போன்றவற்றை காஞ்சிபுரம் ஏகாம்பரநாதரிடத்தில் தூது விடும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.